Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு - 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 06 ஞாயிற்றுக்கிழமை (21.06.2015) பக்கங்கள் 20 ஓசை - 264

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

## யாழில் அபாயகரமான பகுதிகளில்

# சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட அதிரடிப்படை மூலம் நடவடிக்கை

### நீதிபதி இளஞ்செழியன் அறிவிப்பு



(யாழ்ப்பாணம்)

சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பழை, ஊர்காவற்றுறை பகுதிகளை அபாயகரமான பகுதிகளாகக் கணித்து, பொலிஸ், அதிரடிப்படை மூலம் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட நடவடிக்கை. எடுக்கப்படவுள்ளதாக பிரபல கல்லூரி மாணவர்கள் பிணை வழக்கில் நீதிபதி இளஞ்செழியன் அறிவித்துள்ளார்.

தெரு ரவுடித்தனம் செய்து ரியூசன் வகுப்பு மாணவ மாணவிகளை அச்சுறுத்தி, ரியூட்டரியின் கதவை உடைத்து, ஒருவருக்குக் காயத்தை ஏற்படுத்தி, பல மணிநேரம் அட்டகாசம் புரிந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரபல கல்லூரி மாணவர்கள் இருவர் உட்பட நால்வருக்கு, பிணையில் வெளிவரமுடியாத வகையில் மல்லாகம் நீதிமன்ற நீதிபதி சதீஸ்கரன் 6 மாத சிறைத்தண்டனை விதித்திருந்த தீரப்புக்கு எதிராக யாழ்ப்பணம் மேல்நீதிமன்றத்தில் பிணை கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையின் போதே, யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற நீதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தெரு ரவுடித்தனத்தில்

19 ஆம் பக்கம் பார்க்க

## யாழில் விற்பனையாகும் போத்தல் குடிநீர் பரிசோதனைக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர்ப்பாவனை அதிகரித்துள்ளமையால் விற்பன்ன செய்யப்படுகின்ற குடி நீர் குடிப்பதற்கு உரியதா என்பதனை சோதனை செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனை உறுதிப்படுத்தும் முகமாக போத்தல்களது மாதிரிகள் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகார சபையின் யாழ் மாவட்ட இணைப்பதிகாரி வசந்தசேகரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் தற்போது 19வகையான கம்பனிகளின் குடிநீர் போத்தல்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது

## மின்,எரிபொருள் செலவை அரச நிறுவனங்களில் குறைக்க நடவடிக்கை

அரச நிறுவனங்களின் மாதாந்த எரிபொருள் மற்றும் மின்சார செலவுகளை 10 வீதத்தினால் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சர் சம்பிக்க, அமைச்சரவையில் தாக்கல் செய்த அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கமைய அரச நிறுவனங்களுக்கு மின்சக்தி மற்றும் எரிபொருளில் இயங்கும் ஹைப்ரைட் வாகனங்கள், குறைந்த மின்சக்தியில் இயங்கும் மின்சார உபகரணங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் வழங்கப்பட உள்ளன.

# வடக்கில் காணிகள் விடுவிப்பு சட்டரீதியாக இடம்பெறவில்லை

### மீளவும் அரசுடமையாகும் அபாயம் எச்சரிக்கிறார் முன்னாள் காணி ஆணையாளர்



(கொழும்பு)

வடக்கில் உயர்பாதுகாப்பு வலயத்திலிருந்து அண்மையில் விடுவிக்கப்பட்ட காணிகள் சட்டரீதியாக மக்களுக்கு கையளிக்கப்படவில்லை என வட,கிழக்கு மாகாண காணி ஆணையாளராக கடமையாற்றிய கதிர்காமத்தம்பி குருநாதன் தெரிவித்தார்.

இந்த நிலையில் அரசாங்கத்தினால் மீளக்கையளிக்கப்பட்ட காணிகள் மீண்டும் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்படவும் வாய்ப்பு காணப்படுவதாக அவர் கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுவீகரிப்புச் சட்டத்தின் உப ஏற்பாடு 38 ஆம் பிரிவின் கீழ் சுவீகரிக்கப்பட்ட இந்தக் காணிகள் 48 மணித்தியாலத்திற்குள் அரசுடமையாக்கப்பட்டது. இவ்வாறு வடக்கிலுள்ள காணிகள் ஒரு சட்டத்தின் கீழ் அரசாங்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

நடைமுறையில் சில சிக்கல்கள் காணப்பட்டாலும் ஒரு சட்டத்தின்கீழ் சுவீகரிக்கப்பட்ட காணிகள் அதே சட்டத்தில் விடுவிக்கப்படாமல் சாதாரணமாக மக்களுக்கு கொடுக்கப்பட்டது சட்டரீதியாக செல்லுபடியாகாது.

அவ்வாறு சுவீகரிக்கப்பட்ட காணிகள் மீள்கையளிக்கப்படுமாயின் 39 உபபிரிவு 1இன் கீழ் மீள்அளவீடு செய்யப்பட வேண்டும். எனினும் இவ்வாறு காணிகள் திருப்பக்கொடுக்கப்பட்ட போது மீள்அளவீடு செய்யாமலும், சட்டத்திற்கமைய வழங்கப்படாததினால் இக் காணி

19 ஆம் பக்கம் பார்க்க

## பொலிஸார் மீது தாக்குதல் பெண்கள் உட்பட 15 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் தவசிக்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு பொலிஸார் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் 10 பெண்கள் உட்பட 15 பேர் கொடிகாமம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் இரவு கொடிகாமம் தவசிகுளம் பகுதியில் கசிப்பு விற்பனை இடம்பெறுவதாக கிடைத்த தகவலையடுத்து கொடிகாமம் பொலிஸார் அப்பகுதியில் சுற்றிவளைப்பை மேற்கொண்டு கசிப்பு வைத்திருந்த நபரைக் கைது செய்ய முற்பட்ட போதுபொலிஸார் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் காய

19 ஆம் பக்கம் பார்க்க

### இரட்டைவாக்கு கோரிக்கையை

# சோபித தேரர் ஏற்றுகொண்டமை வெற்றி என்கிறார் மனோ



(கொழும்பு)

சிறு மற்றும் சிறுபான்மைக் கட்சிகளின் இரட்டை வாக்கு கோரிக்கையை, வண. சோபித தேரர் ஏற்றுக்கொண்டமை தங்களுக்கு கிடைத்துள்ள மிகப்பெரும் வெற்றி என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன தெரிவித்தார்.

சிறு மற்றும் சிறுபான்மை கட்சி பேரவைக்கும், விகாராதிபதி வண. சோபித தேரருக்கும் இடையில் நேற்றைய தினம் கோட்டே நாகவிகாரையில் கலந்துரையாடொன்று நடைபெற்றது.

அதன்பின் ஊடகங்களுக்கு கருத்துக் கூறிய மனோ கணேசன்,

உடனடியாக தேர்தல்முறை மாற்ற 20 ஆம் திருத்த வர்த்தமானி பிரகடனத்தை வாபஸ் வாங்குங்கள். அதை வாபஸ் வாங்கியதன் பின்னர் சிறு மற்றும் சிறுபான்மைக் கட்சிகளுடன் புதிய சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தி, இரட்டை வாக்கு முறைமையை தேர்தல் முறை மாற்ற யோசனைத் திட்டத்தில் உள்வாங்கி, அதை நாடாளுமன்றம் கொண்டு சென்று சட்டமாக்குங்கள்.

இந்த இரண்டையும் செய்ய முடியாவிட்டால், இந்தக் காலாவதியான நாடாளுமன்றத்தை

19 ஆம் பக்கம் பார்க்க

## வருட இறுதியில் உள்ளூராட்சி தேர்தல்

### அமைச்சர் கரு தெரிவிப்பு

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை ஒரே நாளில் நடத்தி முடிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் இந்த வருட இறுதியில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் புதிய தேர்தல் முறையின் கீழ் நடத்தப்படவுள்ளது என்று உள்ளூராட்சி மற்றும் ஜனநாயக நிர்வாகத்துறை அமைச்சர் கரு ஜயசூரிய செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## குற்றச் செயலை அறிவிக்க தனி தொலைபேசி இலக்கம்

### யாழ்.செயலகத்திற்கு விரைவில்

(யாழ்ப்பாணம்)

குற்றச்செயல்கள் தொடர்பில் அறிவிக்க யாழ்.மாவட்ட செயலகத்திற்கு என தனி தொலைபேசி இலக்கம் வழங்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட செயலாளர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற சிவில் பாதுகாப்பு குழுக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் 30 ஆம் திகதி யாழ். மாவட்ட செயலகத்தில் கல்வி அமைச்சின் செயலாளர், அதிகாரிகள் வலயம் மற்றும் கல்விப் பணிப்பாளர்களுடன் மாணவர் மத்தியில் காணப்படும் போதை பொருள் பாவனை, சிறுவர் துஷ்பிரயோகம் என்பவற்றைத் தடுப்பது தொடர்பான கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க

# போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த பாடசாலை சமூகம் ஒத்துழைக்கவில்லை

## குற்றச்சாட்டை மறுக்கிறது ஆசிரியர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

போதைப்பொருள் பாவனை, வன்முறைச் சம்பவங்கள் அதிகரிப்பதனைத் தடுப்பதற்கு பாடசாலையின் அதிபர்கள் ஒத்துழைப்பதில்லை என யாழ். மாவட்ட அரசாங்க அதிபரும், உளசமூக உத்தி யோகத்தரும் குற்றம் சுமத்தியிருப்பதனை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

மாணவச் சமூகம் சீரழிவதற்கு பல்வேறு காரணிகள் பின்னணியில் உள்ளன. அவற்றைக் கண்டறிந்து தீர்வு காண்பதனை விட்டுவிட்டு அதிபர்கள் ஒத்துழைப்பதில்லை என்ற நொண்டிச் சாட்டை முன்வைப்பது வேடிக்கையான ஒன்று.

இன்று மாணவர்களைக் கண்டிக்கவோ, தண்டிக்கவோ திராணியற்றவர்களாக அதிபர்களும், ஆசிரியர்களும் உள்ளனர். மாறாக மாணவர்களைக் கண்டிக்க முற்படும் அதிபர்கள், ஆசிரியர்களுக்கு இன்று எமது சமுகத்தில் என்ன நடக்கின்றது என்பதனை அறிந்துகொள்ளாதவர்களே இவ்வாறான குற்றச் சாட்டுக்களை முன்வைக்கின்றனர்.

பாடசாலைகளில் கண்டிப்புடன் நடந்துகொள்ளும் ஒவ்வொரு அதிபரும், ஆசிரியரும் இரவுப்பொழுதை பயத்துடனே கழிக்கின்றனர். இதற்கு முழுக் காரணம் மாணவர்களின் எந்தவொரு நடத்தையையும் எவரும் கண்டிக்காததே. மாறாக மாணவர்கள் பக்கம் நின்று அதிபர்களையும், ஆசிரியர்களையும் குற்றவாளிக்கூண்டில் ஏற்றுவதே இன்னுமொரு காரணமாகும்.

நாற்பது வயதைத்தாண்டிய எந்தவொரு தமிழ் பேசும் மகனை எடுத்தாலும் அவர்களுக்குக் கற்பித்த கண்டிப்பான ஆசிரியர்கள் பற்றியே பேசுகின்றார்கள். அவர்களாலேயே தாங்கள் உயர்வடைந்ததாகக் கூறுகின்றார்கள். இப்போது அதுபோன்ற ஆசிரியர்களும் இல்லை. கண்டிப்பை ஏற்றுக் கொண்டு வழிப்படும் மாணவர்களும் இல்லை.

இதற்கு உறுதுணையாக எம்மினத்தின் மத்தியில் புகுத்தப்படுகின்ற வேண்டப்படாத, ஆபத்தை உண்டுபண்ணும் போதைப் பொருட்களும், தீய பழக்க வழக்கங்களுமே காரணமாகும்.

ஆகையால் பாடசாலை மாணவர்களை சரியாக வழிப் படுத்துவதற்கு கல்வி அமைச்சு, சட்டத்துறை என்பன அதிபர்கள், ஆசிரியர்களுக்கு முறையான அங்கீகாரம் வழங்க வேண்டும். மாணவர்களை முழுமையாகக் கண்காணிக்கும் உரிமை வழங்கப்படவேண்டும். எந்தவொரு ஆசிரியரும் மாணவனை எதிரியாகப் பார்ப்பதில்லை. அவனை வழிப்படுத்தவே எண்ணுகின்றார். அத்தகைய உணர்வை மாணவர் உணரும் வகையில் பாடசாலை நிர்வாகக் கட்டமைப்புகளில் மாற்றங்கள் கொண்டு வரப்படவேண்டும்.

பாடசாலைகளில் ஒழுக்கத்திற்குப் பொறுப்பான ஆசிரியர்கள் பல அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலேயே தமது கடமைகளைச் செய்கின்றனர். எனவே அதிபர்கள், ஆசிரியர்களில் குறைசொல்வதனை நிறுத்தி குற்றவாளிகளைச் சரியாக இனங்கண்டு கூண்டோடு அழித்தால் மட்டுமே இதற்கு தீர்வு கிடைக்கும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வலியுறுத்தி நிற்கின்றது.

அத்தோடு மாணவி வித்தியாவின் கொகையாளிகளுக்கு உச்சமான தண்டனை வழங்குவதை தீவிரப்படுத்துமாறு சங்கம் கோரி நிற்கின்றது. அதுமட்டுமன்றி பாடசாலை மாணவர்களுக்கு போதைப்பொருள் விற்பனை செய்யும், அல்லது வழங்குவோருக்கு பகிரங்க தண்டனையை நடைமுறைப்படுத்தவேண்டும் என்றும், மாணவர்கள் கையடக்கத் தொலைபேசிகளை பாடசாலையில் பாவிப்பதனை முற்றாகத் தடைசெய்ய சட்டரீதியாக கட்டளை வழங்கப்படவேண்டும் எனவும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரி நிற்கின்றது.

# வர்த்தகர்களுக்கு பிடியாணை பிறப்பிப்பு

(யாழ்ப்பாணம்)



யாழ்.மாநகரசபையின் எல்லைக்குள் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் 18 வியாபாரிகள் மாநகரசபை கோரியிருந்த தமது வியாபார வரியினை செலுத்தாதமையினால் அவர்களிற்கு எதிராக யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இருவர் மன்றிற்கு சமுகமளிக்காமையால் அவர்களிற்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டதுடன் ஏனைய ஒவ்வொருவரும் தலா 50000 ரூபா ஆட்பிணையில் செல்வதற்கும் 29 ஆம் திகதியன்று மாநகரசபையின் வரியினை செலுத்திப் பற்றுச்சீட்டினை மன்றில் சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விதவைகள் தினத்தை முன்னிட்டு குடும்பத் தலைவிகளுக்கு கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சிக்கனக்கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனம் விதவைகள் தினத்தை முன்னிட்டு நடாத்தும் பெண் தலைமைத்துவ குடும்ப தலைவிகளுக்கான கௌரவிப்பு நாளை இடம்பெறவுள்ளது.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் காலை 10 மணிக்கு சம்மேளனத்தின் தலைவர் செ.இரகுநாதர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண விவசாயக் கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்துகொள்வதுடன் சிறப்பு விருந்தினராக கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் கலந்துகொள்கின்றார். இதன்போது பிரதம விருந்தினரால் பயனாளிகளுக்கு தென்னங்கன்றுகள் வழங்கப்படவுள்ளன. (இ)

# தொற்றுநோய்களைத் தடுக்கும் வகையில் பொலிஸாரால் சிரமதானப் பணி முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

டெங்கு மற்றும் தொற்றுநோய்கள் பரவாமல் தடுக்கும் வகையில் யாழ்.நகரப்பகுதியில் பொலிஸாரினால் இன்று பாரிய சிரமதானப் பணி மேற்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பிராந்திய பொலிஸ் பிரிவினால் இச்சிரமதான பணி முன்னெடுக்கப்படவுள்ளதுடன் இன்று காலை 7 மணிக்கு யாழ். பஸ் தரிப்பிடத்திலிருந்து இச்சிரமதானம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதில் வர்த்தகர்கள், பொதுமக்களையும் கலந்து இச்சிரமதான துப்புரவுப் பணிகளில் ஒத்துழைப்பு வழங்குமாறு பொலிஸாரினால் கேட்கப்பட்டுள்ளது. (இ)

# வெடிமருந்தை கொண்டுவந்தவர்கள் யாழ்.பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

குருநகர்ப் பகுதியில் நேற்று முன்தினம் பொலிஸாரினால் மீட்கப்பட்ட டைனமற் வெடிமருந்தை அங்கு கொண்டு வந்த இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் குருநகரில் உள்ள வீடொன்றிலிருந்து 12 கிலோ 800 கிராம் டைனமற் வெடிமருந்து யாழ்.பொலிஸாரினால் மீட்கப்பட்டதுடன், அந்த வீட்டில் இருந்த பெண்ணொருவரும் கைது செய்யப்பட்டார்.

எனினும் மீட்கப்பட்ட பொதி தம்முடையதல்ல என கைது செய்யப்பட்ட பெண் விசாரணையின் போது தெரிவித்ததோடு அப்பெண் வழங்கிய தகவலின் அடிப்படையில் டைனமற்றைக் கொண்டுவந்த இரு நபர்களை யாழ்.பொலிஸார் நேற்றுக் கைது செய்துசெய்துள்ளனர்.

பளை இத்தாவில் பகுதியைச் சேர்ந்த 44 வயது 30 வயதுடைய இரு நபர்கள் நேற்று கைது செய்யப்பட்டனர். இவர் களிடம் இவ்வெடிமருந்து எவ் வாறு கிடைத்தது என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ)

# திருமுறை மனனப் போட்டியும் பரிசளிப்பு விழா நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக்கழகம் நடாத்தும் மாணிக்கவாசகர் குருபூசையும், திருமுறைமனனப்போட்டி பரிசளிப்பு விழாவும் நாளை மாலை 5.15 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

இரா.செல்வவடிவேல் தலைமையில் இடம்பெறும் பரிசளிப்பு விழாவுக்கு ஓய்வுநிலை ஆசிரியை திருமதி கமலாகாசிநாதன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு திருமுறைமனனப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்களையும், சான்றிதழ்களையும் வழங்கிவைப்பார்.

இவ்வாண்டுக்கான திருமுறை மனனப் போட்டியில் முதல் 3 இடங்களைப் பெறுவோர் பெயர்விபரம்.

முதலாமிடம் சு.திரிபர்ணா (காரைநகர் கிழவன் காடு கலாமன்றம்), இரண்டாமிடம் யே.உதயநிதி (யா/இந்து ஆரம்ப பாடசாலை), மூன்றாமிடம் செல்வி பா.அக்ஷயா (யா/மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை)

**பாலர் பிரிவு- தரம் 2**

முதலாமிடம் செல்வி கா.மிருன்திகா- (யா/யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), இரண்டாமிடம் செல்வன் சு.ஹரிகரன் (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), மூன்றாமிடம் செல்வி கு.யுகானா (யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம்).

**கீழ்பிரிவு தரம்-03**

முதலாமிடம் செல்வி ம.மதுவந்தி (யா/தெல்லிப பழை மகாஜனக் கல்லூரி), இரண்டாமிடம் செல்வி ச.வைஷ்ணவி (யா/யாழ்.இந்து ஆரம்பப்பாட சாலை), செல்வி சு.பவியரசி (யா/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி)

**கீழ்ப்பிரிவு- தரம்-04**

முதலாமிடம் செல்வி சி.நிரோசினி (யா/இந்து ஆரம்பப் பாடசாலை), இரண்டாமிடம் செல்வி சி.ஆர்த்திகா (காரைநகர் கிழவன்காடு கலாமன்றம்), செல்வி ஜெ.குயிலினி (காரைநகர் கிழவன் காடு கலாமன்றம்)



வவுனியா சிவபுரம் அ.த.க.பாடசாலையில் நடைபெற்ற ஆரம்ப பிரிவு பாடத்திற்குரிய பரிசோதனைகளும், கற்றல் கற்பித்தல் உபகரண கண்காட்சியும் பாடசாலையின் அதிபர் பீ.ஜெறாட் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாணசபை உறுப்பினரான. மயில்வாகனம் தியாகராசா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட பாடசாலையின் முன்னை நாள் அதிபரான சதாசிவம் உட்பட பலர் சிறப்பித்தனர். இந் நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்களை மலர்மாலை அணிவித்து அழைத்து வருவதையும் விருந்தினர்கள் கண்காட்சி நிகழ்வை பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். (40)

# வல்லை வெளியில் பொலிஸ் காவல் அரண்

## அமைக்க நடவடிக்கை





(யாழ்ப்பாணம்)

வல்லைப் பாலத்துக்கு அருகில் பொலிஸ் காவலரண் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி செந்தூரன் கேட்டுக் கொண்டதற்கு இணங்க வல்லையில் காவலரண் அமைக்க யாழ். மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ஜி.கே.பெரேரா நடவடிக்கை எடுக்க உள்ளதாக தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற சிவில் பாதுகாப்பு குழு கூட்டத்தில் வைத்தியர் செந்தூரன் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையில்,

யாழில் இருந்து தான் வடமாராட்சிக்கு வரும் விநியோக வாகனங்களில் தான் சில தேவையற்ற பொருட்கள் வருகின்றன.

யாழையும் வடமராட்சியையும் பிரிக்கும் வல்லை பாலத்துக்கு அருகில் பொலிஸ் காவலரண் ஒன்று அமைக்கப்பட்டு வடமராட்சிக்குள் வரும் வாகனங்களை சோதனை செய்து அனுமதித்தால் யாழில் இருந்து வடமராட்சிக்குள் கொண்டு வரப்படும் தேவையற்ற பொருட்களை தடை செய்யலாம் என தெரிவித்தார்.

அதனை அடுத்து பொலிஸ் வல்லையில் காவலரண் அமைத்து வாகனங்களை பரிசோதனை செய்து அனுமதிக்க நடவடிக்கை எடுக்க உள்ளதாக தெரிவித்தார்.

# பொலிஸ் காவல் அரண் மீது தாக்குதல் நடாத்தியது யார்?

## வலை வீசி தேடுதல் வேட்டை

(யாழ்ப்பாணம்)

குறிகட்டுவான் பொலிஸ் காவலரண் மீது தாக்குதல் மேற்கொண்ட குழு தொடர்பில் இரகசிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள் என யாழ்மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜி.கே.பெரேரா தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற சிவில் பாதுகாப்பு கூட்டத்தில் கருத்து தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

புங்குடுதீவு மாணவியின் படுகொலையுடன் தொடர்புடையவர்கள் எனும் சந்தேகத்தில் ஐந்து பேர் கடந்த மாதம் 17 ஆம் திகதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களை குறிகட்டுவான் பொலிஸ் காவலரணில் தடுத்து வைத்திருந்த போது அவர்களை தம்மிடம் தருமாறும் தாம் அவர்களுக்குத் தண்டனை வழங்குவதாகவும் காவலரண் முன்பு மக்கள் கூடி போராட்டம் நடாத்தினார்கள்.

அந்த நேரம் குழு ஒன்று பொலிஸ் காவலரண் மீது கல்வீசி தாக்குதல் மேற்கொண்டார்கள். அத் தாக்குதலினால் ஆறு பொலிஸார் காயமடைந்தனர் அத்துடன் பொலிஸ் ஜீப் ஒன்றும் சேதத்திற்கு உள்ளாகியது. அதன் பின்னர் குறித்த பொலிஸ் காவலரண் மூடப்பட்டு விட்டது.

தற்போது அன்றைய தினம் பொலிஸ் காவலரண் மீது தாக்குதல் மேற் கொண்ட குழு தொடர்பில் தற் போது இரகசிய பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றார்கள் என தெரிவித்தார்.

அத் துடன் காவலரண் மீது தாக்குதல் மேற் கொண்டவர்கள் பற்றிய தகவல் தெரிந்தால் இரகசிய பொலிஸாருக்கு தந்துதவுமாறும் தகவல் தந்தவரின் விபரங்கள் இரகசியம் பேணப்படும் எனவும் தெரிவித்தார்.

# தடையையும் மீறி விகாரை அமைப்பு

தடையுத்தரவை மீறி கொக்கிளாயில் விகாரை அமைக்கும் பணி தொடர்ந்து இடம்பெற்று வருகிறது என வட மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார். கடந்த வாரம், காணிப் பிணக்குகளை தீர்க்கும் பொருட்டு முல்லைத்தீவில் இடம்பெற்ற காணி அமைச்சின் உயர் அதிகாரிகளின் நடமாடும் சேவையில் மேற்படி விகாரை அமைப்பதற்கான தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் தமிழ் மக்களின் காணிகளில் இவ்வாறு அத்துமீறி விகாரை அமைப்பது அப்பட்டமான சட்டவிரோத செயல் என்றும் அவர் கண்டனம் தெரிவித்தார். இந்த விடயம் குறித்துத் தான் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை கரைத்துறைப்பற்று பிரதேச செயலரைத் தொடர்பு கொண்டு கேட்ட போது குறித்த பிக்குவிடம் தடையுத்தரவுக்கான ஒப்புதல் ஒப்பத்தை நேரில் பெற்றார் என அவர் கூறினார் என ரவிகரன் தெரிவித்தார். இதே வேளை ரவிகரன் இந்த விடயம் தொடர்பாக உறுதிப்படுத்த அங்கு சென்றபோது அங்கிருந்த படையினர் முன்னுக்குப்பின் முரணான தகவல்களை தெரிவித்துள்ளனர்.

# கஞ்சா பொதி மீட்பு

பருத்தித்துறை தும்பளை கடற்கரைப் பகுதியில் பற்றைக்குள்ளிருந்து 997 கிறாம் கஞ்சா பொதியொன்றை பொலிஸார் மீட்டுள்ளனர். தகவலொன்றை அடுத்து கடற் பகுதிக்கு விரைந்த பருத்தித்துறை பொலிஸார் இக்கஞ்சாப் பொதியை மீட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லையென பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர். இப்பொதி எங்கிருந்து கொண்டு வரப்பட்டுள்ளது என்பதையிட்டு பொலிஸார் வீசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

# 12 வர்த்தக நிலையங்களுக்கு 55 ஆயிரம் ரூபா அபராதம்

(யாழ்ப்பாணம்)

காலாவதியான பொருட்களை விற்பனைக்காக வைத்திருந்த 12 வர்த்த கர்களுக்கு பருத்தித்துறை மாவட்ட நீதவான் மா.கணேசராஜா 55 ஆயிரம் ரூபாஅபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகள் நெல்லியடி நகரில் வர்த்தக நிலையங்கள் மீது நேற்றுமுன்தினம் மேற்கொண்ட திடீர் சுற்றி வளைப்பில் காலவாதியான இந்தப் பொருட்கள் மீட்கப்பட்டன.

கைதான வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களை அதிகாரிகள் நீதவான் முன் ஆஜர்படுத்த மேற்படி அபராதம் விதித்து நீதவான் தீர்ப்பளித்தார்.

# காசைக் கேட்டு வாங்கத் தெரிகிறது... தீர்வை வாங்கத்தான் தெரியவில்லை...




'நாறி மணக்கிறது சந்தை' என்றார் நண்பர்.

'என்ன, ஏது?' என்று கேட்டேன், விவரம் புரியாமல்.

'மாவைக்கும் விக்கிக்கும் அந்த மாதிரித் தொடங்கியிருக்குப் போர். இது இப்ப தொடங்கின போரல்ல. முதலமைச்சர் வேட்பாளர் காலத்திலேயே தொடங்கினது. ஆனால், அப்ப அதை வளர்க்கக்கூடிய சூழல் இருக்கவில்லை. இப்ப அந்தப் புகைச்சல் தீப்பிடிச்சு எரியத் தொடங்கியிருக்கு. எல்லாம் பதவி ஆசையினாலும் வசதி, வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ள இருக்கிற போட்டியாலும் வந்த வினை' என்று விளக்கினார் நண்பர்.

உண்மைதான். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பெயரளவில் கூட்டமைப்பு என்றிருக்கிறதே தவிர, அது ஒரு ஐக்கியப்பட்ட அமைப்பாக இல்லை.

தேர்தல் வெற்றியைப் பெறுவதற்காக சேர்ந்திருப்பார்கள். ஒற்றுமை என்று காட்டுவார்கள். அவ்வளவுதான். அதற்கப்பால் மக்களுக்கான பணிகளைச் செய்வதிலோ, மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதிலோ இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதிலோ இவர்கள் ஒன்றுபட்டு நின்றதும் கிடையாது. ஒற்றுமையாகச் செயற்பட்டதும் இல்லை.

2009 இல் நடந்த ஜனாதிபதித் தேர்தலின்போதும் இப்படித்தான் கூட்டமைப்பு உள்ளுக்குள் குத்து வெட்டுப்பட்டு உடைந்து சிதறியது. அப்பொழுது கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய சிவாஜிலிங்கம், சிறிகாந்தா, பத்மினி சிதம்பரநாதன், சொலமன் சூ சிறில், கஜேந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்றவர்கள் சொன்ன குற்றச்சாட்டு, சம்பந்தன் காசு வாங்கிக் கொண்டு சரத் பொன்சேகாவுக்கு ஆதரவளிக்க முன்வந்திருக்கிறார். இதை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதாகும்.

அதாவது அன்றும் காசுப் பிரச்சினையால்தான் கூட்டமைப்புக்குள் குழப்பங்கள் ஏற்பட்டது. அதனால்தான் உடைவும் நிகழ்ந்தது.

இப்பொழுது மைத்திரி ஆட்சியின்போதும் குழப்பங்கள் ஏற்படுவதற்குக் காரணமாக இருப்பது காசுப் பிரச்சினையே.

கடந்த ஜனவரியில் நடந்த தேர்தலுக்காக டிசம்பரில் பெருமளவு காசை வாங்கிக் கொண்டே அன்னச் சின்னத்துக்கு வாக்களிக்குமாறு தமிழ் மக்களிடம் கூட்டமைப்புக் கேட்டிருந்தது. இதுவொன்றும் ரகசியமான சங்கதிகளல்ல. பரகசியமான பேரம்பேசுதல்கள்.

முன்னர் இனப்பிரச்சினைக்கான பேரம் பேசுதல்கள் வேறு விதமாக நடந்தன. அதாவது உயிர்த்தியாகங்களின் மூலமாகவும் போராட்ட நடவடிக்கைகளின் மூலமாகவும் அந்தச் சூழலை – பேரம் பேசக் கூடிய ஒரு நிலையை போராட்ட அமைப்புகள் உருவாக்கியிருந்தன.





அந்தப் பேரம் பேசுதல்கள் வேறு. இப்போதைய பேரம் பேசுதல்கள் வேறு.

இது தங்களுக்கான நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கான பேரங்கள். முன்னர் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் குறித்த பேச்சுகளும் கோரிக்கைகளும் முன்னிறுத்தப்பட்டன.

இப்பொழுது நடந்து கொண்டிருப்பது சனங்களின் தலைகளை அடகு வைத்துத் தங்கள் காரியங்களைப் பார்க்கின்ற – தங்களுடைய மடியை நிரப்ப முனைகின்ற பேரம் பேசுதல்கள்.

இதில் பிரச்சினை என்னவென்றால் பங்குபோடுவதில் உள்ள பிணக்குகள்தான்.

கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பின் கதவினால் போய் வாங்க வேண்டியதையெல்லாம் வாங்கிக் கொண்டு விட்டார்கள். மாகாணசபைக்காரருக்கு ஒன்றும் வாய்க்கவில்லை என்றமாதிரி ஆதங்கப்படுகிறார் விக்கினேஸ்வரன்.

முன்னர் நடந்த விடயங்கள் அடக்கி வாசிக்கப்பட்டன. இப்பொழுது அம்பலத்தில் விவாதிக்கப்படுகின்றன.

இந்த விடயம் விவகாரமாகி, சந்தி சிரிக்கும் அளவுக்கு மாவையும் விக்கினேஸ்வரனும் கடிதப்போர் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இதற்குக் களம் அமைத்துக் கொடுத்துத் தன்னை ஒரு புனிதராகக் காட்ட முயற்சிக்கிறார் சிறிதரன் எம்பி. இவருடைய சகோதரரின் இணையத்தளங்கள் இந்தச் செய்திகளை முன் நிரலில் போட்டுக் கொண்டிருக்கின்றன.

அரசியல்ல இதெல்லாம் சகஜமப்பா என்று தமிழ் மக்கள் இருந்தால் அவர்களுக்கு இன்னும் பல முள்ளிவாய்க்கால்கள் காத்திருக்கின்றன.

ஏமாறும் வாக்காளன் ஒருநாள்
வேட்பாளனையும் ஏமாற்றி விடுகிறான் -தரிசனக் கவிராயர்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## இற்றைத் திங்கள் இவ்வெண்ணிலவில்!

இன்று தந்தையர் தினம். ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதத்தில் வரும் மூன்றாவது ஞாயிற்றுக் கிழமை தந்தையருக்கான தினமாக உலகமெங்கும் கொண்டாடப்பட்டு வருகிறது.

"மரியாதை செலுத்த விரும்பும் போது பெற்றோர் இறந்துவிட்டனர்" என்று ஜப்பானியக் கவிதைவரி ஒன்று உண்டு. நம்மில் பலருக்கு பெற்றவர்களின் எண்ணங்களையும் கண்டிப்புகளையும் சரியான அர்த்தத்தில் விளங்கிக்கொள்ள ஒரு பக்குவ காலம் தேவைப்படுகிறது.

குறைந்தபட்சம் நமக்கும் பிள்ளைகள் என்று வந்த காலத்தின் பிறகு, நமது பெற்றோர் பற்றிய கணிப்பும் நம்மிடம் கூடுதல் வெளிச்சம் பெறுகிறது. ஃப்ரெய்ட் சொல்லியபடியே பெரும்பாலான தந்தை – மகன் உறவு நெருடல்களுடன் கூடியதுதான்.

பெண் பிள்ளைகளுக்கு தந்தையே அன்புநிறைந்த ஒரு ஆளுமையாக, மாற்றுப்பால் உலகின் மாதிரியுருவாகத் தோற்றம் பெறுவதும் காணக்கிடைக்கிற ஒன்றுதான். தந்தையோடு எல்லாமும் போய்விட்டதாக வருத்தப்படும் பாரிமகளிரின் நெஞ்சைக் கனக்க வைக்கும் சோகத்தை இலக்கியமாயும் அறிகிறோம்.

பொறுப்புகளைப் புறக்கணித்து வாழ்கிற தந்தை, தாயைச் சமஉரிமைகளோடு மதிக்காத தந்தை, பிள்ளைகளால் மதிக்கப்பட முடியாதவனாகிறான்.

தந்தைக்குப் பிறகு குடும்பத்தின் தலைமைப் பொறுப்புக்குக் காத்திருக்கும் ஆண்மகனின் அந்தரங்க உணர்விலும் தந்தைக்கெதிரான எண்ணங்கள் உருவாகிவிடுவதை உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். "தந்தையின் மரணத்தை விரும்பாதவர் யார்?" என்ற கேள்வியை கரமசோவ் சகோதரர்கள் நாவலில் டொஸ்ரோயெவ்ஸ்கி எழுப்புகிறார்.

எல்லாமிருந்தாலும், தன்னுடைய இடத்தில் பிள்ளையையும், தன்னை அப்பாவாகவும் வைத்துப் பார்க்கிற அந்தக் காலம் வருகையில், எந்தப் பிள்ளைக்கும் அப்பா பற்றிய புரிதல் நிகழ்கிற கணமாகி விடுகிறது. தமிழ்க் கவிஞர் ஒருவர் எழுதுகிறார்:

"அப்பாவை வெறுத்து வந்திருக்கிறேன் நான். குடும்பத்தைக் கவனியாமல் இருந்தவர் என்று வசைகள் சொல்லியிருக்கிறேன். சண்டை போட்டு வீட்டை விட்டு ஓடிப் போயிருக்கிறேன். ஆனால் யோசிக்கும் வேளையில்.... எல்லாவிதத்திலும் அப்பாவைப் போலத்தான் நானும் இருக்கிறேன். விவரம் தெரிந்த பிறகு என் பிள்ளைகளும் என்னை வெறுக்கலாம். நிச்சயம் என்னால் தாங்கிக்கொள்ள முடியாது அப்போது" என்று தன் பதற்றத்தைப் பதிவு செய்கிறார்.

இந்த பதற்றத்தையும் சோகத்தையும் சிறுவயதிலேயே உணரக் கிடைக்கிறது பாரதிக்கு. "தந்தை போயினன், பாழ்மிடி சூழ்ந்தது, தரணி மீதினில் அஞ்சலென்பாரிலர்" என்று தன் சுயசரிதையில் சிந்தை நோகிறான் அவன்.

பிள்ளைகள் எவ்விதமாய் உணர்ந்தாலும் தந்தையர் எப்போதும் பிள்ளைகளை வெறுக்க முடியாதவர்களாகவேதான் இருப்பர். சோகங்களில் எல்லாம் தலையாயது புத்திர சோகம்தான் என்றறிகிறோம். அது பிள்ளைகளின் மீது பிரவகிக்கும் கட்டுக்கடங்காத பேரன்பினால் நேர்வது.

"பேரன்பு கொண்டோரில் யாரிங்கே பிழைத்து நின்றார்" என்று அறிய நேரும் சோகம் எல்லாவற்றிலும் கொடியதுதான்.

தந்தையரின் அன்பையும் அக்கறைகளையும் உணர்ந்து கொள்ள பிள்ளைகள் சிலருக்கு குறிப்பிட்டளவு காலமெடுக்கலாம். அந்தப் புரிதல் நேரும் காலத்தை விரைவுபடுத்தவும், தந்தையரைப் போற்றுவது நம்மை நாமே போற்றுவதும், நம்முடைய வாழ்வின் விழுமியங்களைச் சரிசெய்து கொள்வதுமே என்பதை உணர்த்தவும் இத்தகைய தினங்கள் உதவும்.

அன்பைப் பகிரும் மற்றுமொரு விசேட வாய்ப்பாகக் கருதி – தந்தையர் தின வாழ்த்துக்கள்!

- ஆசிரியர்

# கிழக்கில் நிதிப் பயன்பாடு விதிமுறைகளைத் தாண்டி நடந்ததா?

## மாகாண முதலமைச்சர் அதிர்ச்சித் தகவல்

கிழக்கு மாகாண சபையில் 2008 ஆம் ஆண்டுகாலப்பகுதியில் ஏற்படுத்தப்பட்ட பிள்ளையான் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்றதைப்போன்ற நிதி வீண்விரயம் தமது ஆட்சிக்காலத்தில் இடம்பெறமாட்டாதென கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

அக்காலப்பகுதியில் இடம்பெற்ற நிதி வீண்விரயம் குறித்த விடயங்கள் மிக விரைவில் அம்பலத்திற்குக் கொண்டுவரப்படும் என்றும் தற்போதைய ஆட்சியின் பாரபட்சமற்ற வெளிப்படைத் தன்மைகொண்ட ஒதுக்கீடுகளை ஒப்பிட்டு நோக்கும் சந்தர்ப்பம் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் எனவும் முதலமைச்சர் கூறினார்.

மாகாண சபையின் ஜூன் மாதத்திற்கான அமர்வில் உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்துப் பேசுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார். மாகாண சபைத் தவிசாளர் சந்திரதாச கலபத்தி தலைமையில் சபை நடவடிக்கைகள் இடம்பெற்றன.

இதன்போது நிதியொதுக்கீட்டுச் சமர்சீர் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர இரா.துரைரட்ணம் சுட்டிக்காடினார். இதேபோன்று நிதியொதுக்கீடுகளில் பாரபட்சம் மற்றும் புறக்கணிப்பு இடம்பெறுவதாக உறுபபினரும் முன்னாள் முதலமைச்சருமான சிவனேசதுரை சந்திரகாந்தன தனது உரையில் குறிப்பிட்டார்.

முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் மேலும் பேசுகையில்- 2008 ஆம் ஆண்டு வெளிநாடு செல்லவிரும்பிய இளைஞர்களுக்கு கொரிய நாட்டு மொழி கற்பிப்பதற்காக இருபது இலட்சம் ரூபா முற்பணமாகப் பெறப்பட்டபோதிலும் பாடநெறி பூர்த்தி செய்யப்படாது இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இதேபோன்று 2009 மே 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் மடடக்களப்பில் நடாத்தப்பட்ட முதலமைச்சர்கள் மாநாட்டிற்காக 51 இலட்சத்து 25 ஆயிரத்து 384 ரூபா இந்த மாகாண சபை நிதியிலிருந்து செலவிடப்பட்டுள்ளது

இது எமது மாகாண மக்களுக்கான நிதியாகும். வீண்விரயம் செய்து எமது மக்களின் வயிற்றில் அடிக்க அனுமதிக்கமாட்டோம். இதேபோன்று எம்மிடம் இருக்கின்ற நிதிவீண்விரயப்பட்டியலை வெளியிடுவோம். அப்போது உங்களது முகத்தில், கரிபூசப்படும். எனவே முதலமைச்சராக இருந்த நீங்கள இங்கு மிகுந்த பொறுப்புணர்வுடன் பேசவேண்டும்.

இந்த மாகாண - தமிழ்த் தேசியக கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இணைந்து ஆட்சியமைத்திருப்பது வரலாறாகும். இதில் ஐ.தே.க மற்றும் ஐ.ம.சு.கூ போன்ற கட்சிகள் ஒன்றிணைந்துள்ளன. இந்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குமிடையே பிரிவினையை ஏற்படுத்த பிள்ளையான் உள்ளிட்டவர்கள் மேற்கொள்ளும் சதி முயற்சிகள் ஒருபோதும் பலிக்கப்போவதில்லை என்றார்.

முதலமைச்சர் பேசும்போது முன்னாள் அமைச்சர்களான விமலவீர திசாநாயக்க மற்றும் எம்.எஸ். உதுமாலெப்பை உள்ளிட்டவர்கள் குறுக்கீடு செய்ததையடுத்து சபையில் அமளிதுமளி ஏற்பட்டது.

# புரிந்துணர்வுக் குழு மைத்திரியுடன் பேச்சு

## மகிந்தவுடன் சந்திப்பு விரைவில்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையிலான மோதலை தீர்ப்பதற்காக நியமிக்கப்பட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் விசேட குழுவுக்கும், ஜனாதிபதி மைத்திரிக்கும் இடையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முதலாவது பேச்சு நடாத்தப்பட்டது. ஜனாதிபதியுடனான பேச்சு வெற்றிகரமாக இடம்பெற்றது என்று விசேட குழுவின் தலைவர் ஜோன் செனவிரட்ன தெரிவித்தார்.

இதேவேளை, கட்சியை ஒற்றுமைப் படுத்தும் நடவடிக்கையின் அடுத்தகட்டமாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் விரைவில் பேச்சு நடத்தவும் இந்தக் குழு தீர்மானித்துள்ளது. எதிர்க கட்சியின் பிரதம கொறடாவான ஜோன் செனவிரட்ன எம்.பி. தலைமையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அநுரபிரியதர் ஷன யாப்பா, சு.க.வின் ஊடகப் பேச்சாளர் டிலான் பெரேரா, குமார வெல்கம, டி.பீ.ஏக்கநா யக்க ஆகிய எம்.பிக்கள் இந்தப் பேச்சில் பங்கேற்றுள்ளனர்.

சுமார 45 நிமி டங்கள் இடம்பெற்ற இந்தப் பேச்சு தொடர்பில் கருத்து வெளியிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் டிலான் பெரேரா, "மிகவும் சிறந்ததொரு கலந்துரையாடல் இடம்பெற்றது. கட்சியை ஒன்றிணைத்து செயற்படுவதற்கு இந்தக் கலந்துரையாடலினூடாக நல்ல ஆரம்பம் கிடைத்துள்ளது. அடுத்துவரும் நாட்களில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடனும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஏனைய பங்காளிக் கட்சிகளுட னும் பேச்சு நடத்தவுள்ளோம். இதனூடாக கட்சியை ஒன்றிணைகரும் வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச்செல்ல எதிர்பார்க்கின்றோம் எமது குழு முதன்முறையாக ஜனாதிபதியைச் சந்தித்துள்ளது. எமக்கு முன்னே சில சவாலகள் இருக்கின்றன.

இதற்கு ஜனாதிபதியின் ஆலோசனை, வழிகாட்டல முதலானவற்றை இந்தச் சந்திப்பில் பெற்றுக்கொண்டோம் என்றார்.

# திருமறைக் கலாமன்றம் நடாத்தும் தமிழ் விழா வெள்ளி ஆரம்பம்

திருமறைக் கலாமன்றத்தால் நடத்தப்படும் தமிழ் விழா எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை மூன்று நாட்களுக்கு (வெள்ளி, சனி, ஞாயிறு) யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. பகல் நிகழ்வுகளாக ஆய்வரங்குகளும் மாலை நிகழ்வுகளாக கலை நிகழ்வுகளுமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தமிழ் விழாவில், மூன்று நாட்களும் காலை 8.45 தொடக்கம் 12.30 மணி வரையும், தொடர்ந்து 1.45 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரையும் ஆய்வரங்குகள் இல, 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்திலும் கலை நிகழ்ச்சிகள் மாலை 6 மணி முதல் இல. 238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கிலும் நடைபெறவுள்ளன.

நாவல், பண்பாடு, ஊடகம், இணையம், சிறுகதை, விமர்சனம், மலையக இலக்கியம், கவிதை, நாடகம் உட்பட 24 தலைப்புக்களில் ஆறு அமர்வுகளாக ஆயவரங்குகள் நடைபெறவுள்ளன.

கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா, பேராசிரியர் செ.யோகராசா, ஈ.குமரன், சு.குணேஸ்வரன், ச.ஆ.உதயன், ம.நிலாந்தன், கெ.சரவேஸ்வரனும், கருணரகரன், திருமதி.பச்சி மரியதாசன், ச.இராகவன், ஐயாத்துரை சாந்தன், குப்பிழான் ஐ.சண்முகன், தியாக சேகரன்(திசேரா), த.அஜந்த குமார், இ.இராஜேஸ்கண்ணனும், தெ.மதுசூதனன், தி.செல்வமனோகரன், அப்துல் றஷாக்கும், சு.தவச்செல்வனும், பொன் பிரபாகரனும், கவிஞர் சோ.பத்மநாதனும், சிராஜ மஷஹூர், சி,ரமேசும், சித்தாந்தன், வேல்நந்தகுமாரும், கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கமும், கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசனும், பா.இரகுவரனும் , கலாநிதி சி.ஜெயசங்கரும், செ.செல்வகுமாரும், தெ.மதுசூதனன், திருமதி கோகிலா மகேந்திரன், ந.சத்தியபாலன் வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த. குருகுலராஜா, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் உப அதிபர் ச.லலீசன் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் அருட்பணிமையமான 'கலையருவியின் இயக்குநர் அருட்தந்தை தமிழ்நேசன் யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ஸ்ரீமான் ஆ.நடராஜன் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த மூன்று நாள் தமிழ் விழா நிகழ்வுகளிலும் கலையார வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்புவிடுத்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களின் அண்மைக்கால உரைகளில் எதிர்ப்பு அரசியல் வாடை வீசுவதைக் காணலாம் பதவிக்கு வந்து ஆறு மாதங்களாகிவிட்ட போதிலும் தமிழ் மக்களின் எந்தப் பிரச்சினையையும் அரசாங்கம் தீர்க்கவில்லை என்று குற்றப்பத்திரிகை வாசிக்கின்றார்கள். பொதுத் தேர்தல் நெருங்கி வருவதாலேயே அரசாங்கத்துக்கு எதிரான விமர்சனங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வருகின்றன. இப்படியாக அரசாங்கத்தை விமர்சிக்கின்ற தார்மீக உரிமை கூட்டமைப்புத் தலைவர்களுக்கு இருக்கின்றதா? மகிந்த ராஜபக்ஷ வெளியேற வேண்டும் என்பதிலும் பார்க்க ஐக்கிய தேசியக் கட்சி பதவிக்கு வரவேண்டும் என்பதில் கூட்டமைப்புத் தலைவர்களுக்குக் கூடுதலான அக்கறை இருந்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் ஆட்சி மாற்றத்துக்காக ரணில் உருவாக்கிய அமைப்பில் ஆறு வருடங்களுக்கு மேலாக அங்கம் வகித்தவர்களல்லவா. ஐக்கியத் தேசியக் கட்சித் தலைமையைச் சங்கடத்துக்குள் தள்ளிவிடக் கூடாது என்பதற்காகத் தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றி இவர்கள் பெரிதாகப் பேசவில்லை. தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றி ரணில் கூறியதையே கிளிப்பிள்ளை போல ஒப்புவித்தார்கள். பொதுத் தேர்தல் முடிந்து தேசிய அரசாங்கம் அமைந்த பின் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும் என்பதே ரணில்

வாக்குச்சீட்டை இலக்குவைக்கும் பிரசாரமே இப்போது மேற்கொள்ளப்படுகின்றது. அரசாங்கம் எதுவும் செய்யவில்லையென்பதால் தமிழ் மக்கள் ஒன்றுபட்டு எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும் என்று சொல்லத் தொடங்கியிருக்கின்றார்கள். இது அடிக்கடி கேட்டுச் சலித்துப்போன கதை. ஒவ்வொரு பாராளுமன்றத் தேர்தலிலும் இதைத்தான் சொன்னார்கள். இந்தத் தடவையாவது உருப்படியான வேலைத் திட்டத்தை முன்வைக்கவில்லையென்றால் ஐந்து வருடங்களுக்குப் பின்னரும் வந்து இதைத்தான்

**ஜனாதிபதித் தேர்தல் சூடு பிடிக்கத் தொடங்கிய காலத்தில் கோடிக்கணக்கான பணம் கூட்டமைப்புத் தலைவர்களுக்குக் கைமாறியது. அந்தப் பணத்துக்கு என்ன நடந்ததென்பது தலைவர்களுக்குத்தான் வெளிச்சம். இப்போது கோடிக்கணக்கான பணம் கூட்டமைப்பின் ஒரு பிரிவுக்குக் கைமாறியிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. வடமாகாண முதலமைச்சர் இது பற்றி ஜனாதிபதியுடன் பேசிய போது தனக்கு இது பற்றி எதுவும் தெரியாது என்று அவர் சொன்னாராம். அப்படியானால் அது அரசாங்கத்தின் பணமா அல்லது ஒரு கட்சியின் பணமா என்ற கேள்வி எழுகின்றது.**

பகைமையைத் தேடாதிருப்பதை உறுதிப்படுத்தும் வகையிலேயே எந்தவொரு அரசாங்கமும் இனப்பிரச்சினையைக் கையாளும். எனவே பதின்மூன்றாவது திருத்தத்திலும் பார்க்கச் சற்றுக் கூடுதலான அதிகாரங்களுடனான தீர்வையே தமிழ்மக்கள் அரசாங்கத்திடமிருந்து ஆகக் கூடுதலாக எதிர்பார்க்க முடியும். ரணில் விக்கிரமசிங்க போன்றவர்கள் பதின்மூன்றாவது திருத்தத்துக்கு அப்பால் செல்வதில்லை என்று அடிக்கடி கூறிவருவதன் அடிப்படையில் பார்த்தால் சில வேளை பதின்மூன்றாவது





திருத்தமே எல்லையாகவும் அமையலாம். இது ஒரு இடைக்காலத் தீர்வாகுமே ஒழிய முழுமையான தீர்வாகாது..

# சிங்கள மக்களின் ஆதரவுடனேயே இனப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு

**சங்கர சிவன்**

கூறியது. சம்பந்தன் இதைத் திரும்பத் திரும்பச் சொன்னார். இப்போது கூட்டமைப்புத் தலைவர்கள் அரசாங்கத்தின் மீது காட்டும் எதிர்ப்பு தேர்தல் எதிர்ப்பு. தேன்நிலவு முடிந்துவிட்டது என்ற முடிவுக்கு யாரும் வந்துவிடக் கூடாது. தேர்தல் முடிந்த பின் மீண்டும் தேன்நிலவு ஆரம்பிக்கும்.

இன்றைய அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் கொண்டு வராத போதிலும் தலைவர்களின் தனிப்பட்ட பிரச்சினைகளைத் தாராளமாகத் தீர்த்து வைத்திருக்கின்றது. ஜனாதிபதித் தேர்தல் சூடு பிடிக்கத் தொடங்கிய காலத்தில் கோடிக்கணக்கான பணம் கூட்டமைப்புத் தலைவர்களுக்குக் கைமாறியது. அந்தப் பணத்துக்கு என்ன நடந்ததென்பது தலைவர்களுக்குத்தான் வெளிச்சம். இப்போது கோடிக்கணக்கான பணம் கூட்டமைப்பின் ஒரு பிரிவுக்குக் கைமாறியிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. வடமாகாண முதலமைச்சர் இது பற்றி ஜனாதிபதியுடன் பேசிய போது தனக்கு இது பற்றி எதுவும் தெரியாது என்று அவர் சொன்னாராம். அப்படியானால் அது அரசாங்கத்தின் பணமா அல்லது ஒரு கட்சியின் பணமா என்ற கேள்வி எழுகின்றது. இப்போது ஒருவரும் அப்படிப் பணம் பெறவில்லை என்று மாவை சேனாதிராசா அடித்துக் கூறுகின்றார்.

ஆனால் கூட்டமைப்பின் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் அபிவிருத்திக்குப் பணம் பெற்றதாக ஊடகவியலாளர் சந்திப்பில் ஒத்துக்கொள்கிறார். அபிவிருத்திக்காக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பணம் கொடுப்பதற்கு சட்டத்தில் இடமுண்டா என்பது ஒருபுறமிருக்க இன்றோ நாளையோ தேர்தல் என்றிருக்கும் நிலையில் அபிவிருத்திக்கென்று பெறப்படும் பணத் துக்கு என்ன நடக்கும் என்பதைச் சொல்லத்தேவையில்லை. இந்த அரசாங்க காலத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு இல்லாத போதிலும் தலைவர்களின் காட்டில் மழை பெய்கின்றது.

**எந்தக் கட்சி ஆட்சி அமைத்தாலும் இனப் பிரச்சினைக்கான முழுமையான தீர்வை இன்றைய நிலையில் எதிர்பார்க்க முடியாது. தமிழ்த் தலைமையின் தூரநோக்கற்ற செயற்பாடுகள் காரணமாகவும் பேரினவாதிகளின் பிரசாரம் காரணமாகவும் சிங்கள மக்களிடம் தோன்றியுள்ள சந்தேகங்களைக் கவனத்தில் கொள்ளாமல் எந்த அரசாங்கமும் செயற்படப் போவதில்லை. அதாவது சிங்கள மக்களின் பகைமையைத் தேடாதிருப்பதை உறுதிப்படுத்தும் வகையிலேயே எந்தவொரு அரசாங்கமும் இனப்பிரச்சினையைக் கையாளும். எனவே பதின்மூன்றாவது திருத்தத்திலும் பார்க்கச் சற்றுக் கூடுதலான அதிகாரங்களுடனான தீர்வையே தமிழ்மக்கள் அரசாங்கத்திடமிருந்து ஆகக் கூடுதலாக எதிர்பார்க்க முடியும்.**

சொல்லப்போகின்றார்கள். இந்த வகையான ஏமாற்று அரசியல் இன்னும் எவ்வளவு காலத்துக்குத் தொடர்வது?

மக்களின் உண்மையான பிரதிநிதிகளென்றால் கடந்த ஐந்து வருட காலத்தில் இம்மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக என்ன செய்தார்கள் என்பதைக் கூறக்கூடியதாக

இருக்க வேண்டும். அது இவர்களால் முடியாது. இவர்கள் எதுவுமே செய்யவில்லை. பாராளுமன்றத்தில் பேசித்தள்ளினார்களேயொழிய எந்தப் பிரச்சினையாவது தீர்த்து வைத்ததாகவோ தீர்வை நோக்கிய நகர்வை ஆரம்பித்து வைத்ததாகவோ இவர்களால் கூறமுடியாது. பாராளுமன்றத்தில் நிகழ்த்தும் ஆவேச உரைகளால் பிரச்சினைகளைத் தீர்க்க முடியுமென்றால் இதுவரையில் ஒரு பிரச்சினையும் மிஞ்சியிருக்காது.

சர்வதேச சமூகத்தின் கவனத்தைத் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளின் பக்கம் திருப்பியிருக்கின்றோம் என்று கூட்டமைப்மைப்புத் தலைவர்கள் கூறலாம். சர்வதேச சமூகம் வந்துகொண்டிருக்கின்றது என்று ஆறு வருடங்களாகச் சொல்கின்றார்களேயொழிய வந்தபாடாக இல்லை. வரப்போவதில்லை என்பதும் இவர்களுக்குத் தெரியும். அதனால் தான் அரசாங்கம் தீர்வை முன்வைக்க வேண்டும் என்று திரும்பத் திரும்பக் கூறுகின்றார்கள். சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தருமென்றால் அரசாங்கத்தின் பக்கம் திரும்ப வேண்டிய அவசியம் என்ன?

இனப்பிரச்சினைக்கான தீர்வில் அரசாங்கங்கள் வகிக்கக்கூடிய பாத்திரம் என்னவென்பதையும் சிங்கள மக்கள் வகிக்கக்கூடிய பாத்திரம் என்னவென்பதையும் சரியாக விளங்கிக் கொள்ளாமல் அரசியல் தீர்வுபற்றிப் பேசுவதில் அர்த்தமில்லை. எந்தக் கட்சி ஆட்சி அமைத்தாலும் இனப் பிரச்சினைக்கான முழுமையான தீர்வை இன்றைய நிலையில் எதிர்பார்க்க முடியாது. தமிழ்த் தலைமையின் தூரநோக்கற்ற செயற்பாடுகள் காரணமாகவும் பேரினவாதிகளின் பிரசாரம் காரணமாகவும் சிங்கள மக்களிடம் தோன்றியுள்ள சந்தேகங்களைக் கவனத்தில் கொள்ளாமல் எந்த அரசாங்கமும் செயற்படப் போவதில்லை. அதாவது சிங்கள மக்களின்

இனப் பிரச்சினைக்கு முழுமையான தீர்வு இன்றைய நிலையில் சாத்தியமில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். எனவே இடைக்காலத் தீர்வை நோக்கிய செயற்பாடும் இறுதித் தீர்வை நோக்கிய நகர்வுகளும் அத்தியாவசியமானவை. இடைக்காலத் தீர்வுக்காக இறுதித் தீர்வை நோக்கிய அணுகுமுறையைக் கைவிடுவதோ இறுதித் தீர்வுக்காக இடைக்காலத் தீர்வை நிராகரிப்பதோ தமிழ் மக்களுக்கு எவ்வித நன்மையும் தரப்போவதில்லை.

இனப்பிரச்சினையின் தீர்வில் சிங்கள மக்கள் வகிக்கும் பாத்திரம் முக்கியமானது. முழுமையான அரசியல்தீர்வு சர்வசன வாக்கெடுப்பில் அங்கீகாரம் பெற்ற பின்னரே நடைமுறைக்கு வர முடியும். சிங்கள மக்களின் ஆதரவு அந்த அங்கீகாரத்துக்கு அத்தியாவசியமானது. எனவே இறுதித்தீர்வை நோக்கிய எங்கள் அணுகுமுறை சிங்கள மக்களையும் வென்றெடுப்பதை உள்ளடக்குவதாக இருக்க வேண்டியது அவசியம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்த பிரதேச சுயாட்சிக்குக் குறைவானதாக எங்கள் இறுதித்தீர்வு இருக்க முடியாது. இக் கோரிக்கைக்குச் சிங்கள மக்களின் ஆதரவை எவ்வாறு பெற முடியும் என்பதே முக்கியமாகக் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயம். பொருத்தமான முன் தயாரிப்பு இல்லாமல் இக் கோரிக்கையை வலியுறுத்தவது எதிர்பார்ப்பதற்கு முரணான விளைவையே ஏற்படுத்தும். இக் கோரிக்கையைக் கட்டங்கட்டமாக எவ்வாறு முன்னெடுத்துச் செல்வது என்பதையிட்டு ஒரு முடிவுக்கு வரவேண்டும். இக் கோரிக்கை தொடர்பாகத் தென்னிலங்கை முற்போக்கு சந்திகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களின் சம்மதத்தைப் பெற்ற பின்னர் பல்வேறு விதங்களில் மக்களுடனான கருத்துப் பகிர்வை மேற்கொள்ள வேண்டும். சிங்கள மக்களிடம் தோன்றியுள்ள சந்தேகங்களைப் போக்கி நியாயமான அரசியல் தீர்வுக்கு அவர்களின் ஆதரவைப் பெறும் நடைமுறை நீண்டகாலம் எடுக்கும் விடயமெனினும் சாத்தியமானது. இந்த அணுகுமுறையை நிராகரித்தால் இறுதித்தீர்வை அடைவதற்கு வேறு சாத்தியமான வழி இல்லை.



# புலிகளின் வலையமைப்பு இன்னமும் உயிர்ப்புடன்

தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பு தொடர்ந்தும் இயங்கி வருவதாக அமெரிக்கா அறிக்கை வெளியிட்டுள்ளது.

2009ஆம் ஆண்டில் இராணுவரீதியாக தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட போதிலும், தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பு மற்றும் நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்ந்தும் இயங்கி வருவதாக அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

2014ஆம் ஆண்டுக்கான நாடுகளின் பயங்கரவாதம் குறித்த அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

யுத்த நிறைவின் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளினால் இலங்கையில் எவ்வித தாக்குதல்களும் மேற்கொள்ளப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், 13 தமிழீழ விடுதலைப் புலி ஆதரவாளர்கள் அமெரிக்கா மற்றும் மலேசியா ஆகிய தூதரகங்கள் மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டவர்கள் மலேசியாவில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களின் மூலம் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி, இலங்கை ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச உள்ளிட்ட பல முக்கிய அரசியல் தலைவர்களை படுகொலை செய்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

# சீன இராணுவ நிபுணர்கள் கொழும்பில்



(கொழும்பு)

கொழும்புக்குப் பயணம் மேற்கொண்டுள்ள சீன உயர் மட்ட இராணுவ அதிகாரிகள் குழு, இராணுவத் தளபதி லெப். ஜெனரல் கிரிசாந்த டி சில்வாவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளது.

இராணுவத் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் அதிகாரிகள் தலைமையகத்தின் இராணுவப் பயிற்சித் திணைக்கள அரசியல் ஆணையாளர் மேஜர் ஜெனரல் செங் ஜியாங் தலைமையிலான ஆறு இராணுவ அதிகாரிகள் இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர்.

இவர்கள், சீனாவின் நிதியுதவியுடன் தியத்தலாவ இராணுவப் பயிற்சி முகாமில் கட்டப்பட்டு வரும், கட்டத்தொகுதி தொடர்பான தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்காகவே கொழும்பு வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சஜின் மீதான வழக்கு பிணை மனு நிராகரிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினரும் கடந்த அரசாங்கத்தில் ஜனாதிபதியின் மனித உரிமை விவகாரத்துக்கான முன்னாள் அமைச்சு அதிகாரியினூடாக சஜின்வாஸ் குணவர்த்தன பிணைமனு கோரி விண்ணப்பித்திருந்தார்.

தனது உடல்நலன் கருதி பிணை வழங்குமாறு அவர் குறிப்பிட்டிருந்தார் அதனை நேற்று விசாரித்த உயர்நீதிமன்றம் சஜின்வாசின் மருத்துவ அறிக்கையை கொழும்பு சட்டவைத்திய அதிகாரியினூடாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு சட்டமா அதிபருக்கு கட்டளையிடப்பட்டுள்ளது.

இதனால் ஜூலை 3 ஆம் திகதிக்கு பிணை மனு விசாரணை ஒத்திவைப்பதாக நீதிமன்றம் அறிவித்துள்ளது.

கடந்த அரசாங்கத்தில் ஜனாதிபதி செயலகத்தின் சுகாதார பிரிவுக்குச் சொந்தமான 23 வாகனங்களை சட்டவிரோதமாக பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பெயரில் சஜின்வாஸ் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது

# இருபதாவது திருத்தம் இன்று பேச்சு





20ஆவது திருத்தச் சட்டம் குறித்து ஜே.வி.பி கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் அவசர பேச்சு வார்த்தை நடாத்தப்பட உள்ளது. இன்று இந்தப் பேச்சு வார்த்தை நடாத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், பிரதமருமான ரணில விக்ரமசிங்கவிற்கும், ஜே.வி.பி.யின தலைவர் அனுரகுமார திஸாநாயக்கவிற்கும் இடையில் இந்த சந்திப்பு நடத்தப்பட உள்ளது. 20ஆவது திருத்தச் சட்டம் தொடர்பிலான முரண்பாடுகளையும் நோக்கில் இந்தப் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# நான் இனவாதி அல்ல



(கொழும்பு)

நான் இனவாதியல்ல அதே வேளை சிங்கள பௌத்தன் என்று கூற பின்வாங்கப்ப போவதில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கண்டி தலதாமாளிகையில் நடைபெற்ற வழிபாட்டு நிகழ்வொன்றில் கலந்து கொண்டிருந்த வேளையிலேயே மகிந்த இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நேற்று நாட்டில் எந்தளவுக்கு சுதந்திரம் இருக்கின்றது. அன்று மக்கள் வெடிகுண்டு பயத்திலேயே இருந்தனர். தலதா மாளிகை மீதான குண்டு தாக்குதலையும் மறக்க முடியாது. நேற்று சிலருக்கே அது ஞாபகம் இருக்கின்றது. இதேவேளை நான இனவாதியல்ல , சிங்கள பௌத்தன் இதனைக் கூற நான் பின் வாங்கப் போவதில்லை.

# இரட்டைக்குடியுரிமை குவிகிறது விண்ணப்பம்

இரட்டைக் குடியுரிமை வழங்கக் கோரி 4000 பேர் விண்ணப்பம் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் இலங்கையர்கள் இவ்வாறு விண்ணப்பம் செய்துள்ளனர்.

இரட்டைக் குடியுரிமை வழங்குவது குறித்து ஆராயும் விசேட குழுவிடம் இந்த விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இதுவரையில் 400 பேருக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட்டுள்ளதாக குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் பேச்சாளர் லக்ஸான் சொய்சா தெரிவித்துள்ளார்.

தகுதியுடைய மேலும் 500 பேருக்கு எதிர்வரும் வாரங்களில் இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட உள்ளது.

1987ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டு வரையில் 34000 பேருக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆசிய உட்கட்டமைப்பு வங்கி இணைந்து கொள்ள கொழும்பு அவா

(கொழும்பு)

சீனாவின் முன்முயற்சி மற்றும் கூடுதல் மூலதனத்துடன் உருவாக்கப்படும், ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியில், இணைந்து கொள்ளும் உடன்பாட்டில் இலங்கை கையெழுத்திடவுள்ளது. இதற்கு இலங்கை அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில், நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க முன்வைத்த இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்தது.

சீனாவுக்குப் பயணம் மேற்கொள்ளும் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க, எதிர்வரும் 29ஆம் திகதி பீஜிங்கில் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியில் இணைந்து கொள்வது தொடர்பான உடன்பாட்டில், கையெழுத்திடுவார்.

மேற்கு நாடுகளின் பெரும்பாலான முதலீடு மற்றும் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்துலக நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி ஆகியவற்றுக்குப் போட்டியாக, சீனா உருவாக்கும் இந்த ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியில் இலங்கையும் இணைந்து கொள்வதாக, மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியில், அமெரிக்காவின் கூட்டாளி நாடுகள் உள்ளிட்ட 57 நாடுகள் இணைந்து கொள்ள இணங்கியுள்ளன.

சீனாவிடம் 100 மில்லியன் டொலர் கடன்பெற அமைச்சரவை அங்கீகாரம்

இதற்கிடையே, வீதி அபிவிருத்தித் திட்டத்துக்காக சீனாவின் அபிவிருத்தி வங்கியிடம் 100 மில்லியன் டொலரை இலங்கை அரசாங்கம் கடனாகப் பெறவுள்ளது.

தங்காலை- வீரகெட்டிய, வீரகெட்டிய மித்தெனிய வீதிகளைப் புனரமைப்பதற்காக, இந்த நிதி சீனாவிடம் கடனாக பெறப்படவுள்ளது,

இலங்கையின் நெடுஞ்சாலைகள் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் கபீர் ஹாசிம் முன்வைத்த இது தொடர்பான அமைச்சரவை பத்திரத்துக்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

# இந்திய தாதுவருடன் றுவான் பேசியது என்ன?



இலங்கை இந்தியத் தூதுவர் வை.கே.சின்ஹா நேற்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் றுவான் விஜேவர்த்தனவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இருதரப்பு நலன்கள் சார்ந்த விவகாரங்கள் குறித்து இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது எனினும் முழுமையான விபரங்கள் வெளியாகவில்லை.

# அரசு மாறினாலும் அவலங்களுக்கு தீர்வில்லை

## பாதிக்கப்பட்ட மக்கள் கவலை

புதிய அரசு பதவிக்கு வந்து ஆறுமாதங்கள் கடந்து விட்ட நிலையில் சிறையில் வாடும் இளைஞர்களின் நிலை குறித்து பெற்றோர் கவலை வெளியிட்டுள்ளனர். புதிதாக பதவியேற்ற அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டத்தில், சந்தேகத்தின் பெயரில் கைதான அரசியல் கைதிகளை விடுதலை செய்வதாக உறுதியளிக்கப்பட்டு இருந்தது.

ஆனால் இப்போது 100 நாட்கள் கடந்து விட்ட நிலையில் இந்த ஆட்சியிலும் எமது பிள்ளைகள் விடுதலையாக மாட்டார்களா என பெற்றோர் கேள்வி எழுப்பியுள்ளனர்.

சிறையில் வாடும் தமிழ் இளைஞர்கள் விடயத்தில் முதல் நடவடிக்கையாக அவர்களது உறவினர்களுக்கு நிவாரணமொன்றை வழங்குவதற்கு அரச தரப்பிலிருந்து ஒப்புதலளிக்கப்பட்டு இருந்தது.

இந்த நிலை ஒருபுறமிருக்க அவர்களை அழைத்து இந்த ஆட்சியில் அவர்களுக்கு நம்பிக்கை அளிக்கும் வகையிலான எந்தவொரு விடயமும் கவனத்தில் கொள்ளப்படவில்லையென பதை பாதிப்புக்குள்ளான கைதிகளின் உறவினர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

மறுபக்கத்தில் வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்ற நடவடிக்கைக்கு முன்னுரிமையளிப்பதை புதிய அரசு தனது வேலைத்திட்டத்தில் பிரதானமாக உள்ளடக்கியிருந்தது.

ஆனால் வளலாயில் சில நூறு ஏக்கர் காணிகளில் மட்டுமே மீள் குடியேற்றத்துக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

இப்பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்ட மக்கள் தமக்கான அடிப்படை வசதிகளை பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர் கொண்டதாக நலன்புரி நிலையத்திலிருந்து மீள் குடியேறிய வீமன் காமம் தெற்கு பிரதேச வாசியொருவர் தெரிவித்தார்.

மீள் குடியேறும் இடங்களில் தொழில் வாய்ப்புக்கான நிலைமைகள் எதுவும் இல்லாதிருப்பதால் குடியேறுவதற்கான வசதிகள் எவையும் ஏற்படுத்திக் கொடுக்கப்படாத நிலையில் மீள் குடியேறுவதில் மக்கள் ஆர்வமின்றி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# கலாசார நிறுவனத்தின் ஆண்டு நிறைவு விழா

இந்து,பௌத்த கலாசார நிறுவனத்தின் ஐந்தாவது ஆண்டு நிறைவு விழா வெகு சிறப்பாக கொண்டாடுவதற்கு ஏற்பாடாகி உள்ளதாக அதன் யாழ். மாவட்ட அமைப்பாளரும் சட்டத்தரணியுமான எம்.ரி.எஸ்.இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இவ்விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷனில், அத்துரலிய ரத்தின தேரர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவின் பிரதம விருந்தினராக ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவும் சிறப்பு விருந்தினராக புத்தசாசன பொது நிர்வாக அமைச்சர் கரு ஜெயசூரியவும் கலந்து கொள்ள விருப்பதுடன் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சித் தலைவர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், அரசாங்க அதிபர்கள், பாதுகாப்பு படை அதிகாரிகள் எனப் பலரும் இவ் விழாவிற்கு வருகை தரவுள்ளனர்.

இவ்விழாவில் கலாசார நிகழ்வுகளும் யாழ்.மாவட்டத்தில் இரண்டாம் மொழியாக சிங்களத்தைக் கற்று தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும் இடம்பெறவுள்ளது. (06)

# வீதியைப் புனரமைக்க கோரிக்கை

அச்சுவேலி மேற்கு இராச வீதியிலிருந்து கைத்தொழிற்பேட்டை ஊடாக செல்வபுரம் வரை செல்லும் சுமார் மூன்று கிலோ மீற்றர் நீளமான வீதி புனரமைக்கப்படாமையால் இப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

சுமார் 2000 இற்கும் அதிகமான விவசாயிகள் பயன்படுத்தும் இவ் வீதியால் தமது உற்பத்திப் பொருட்களை எடுத்துச் செல்ல முடியாத அளவுக்கு மிகமோசமாக இவ் வீதி சேதமடைந்துள்ளதாக அச்சுவேலி விவசாயிகள் அபிவிருத்திச் சபையின் பிரதிநிதியொருவர் தெரிவித்துள்ளார்.

மண்படைக்கு மேலாக கற்கள் காணப்படும் இப் பிரதேசத்தில் அமைந்துள்ள இந்த வீதியில் பாரிய கற்கள் ஆங்காங்கே வெளித் தெரியும் நிலையில் வீதியில் பயணிப்பது ஆபத்தான ஒன்றாக இருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலாக புனரமைக்கப்படாதுள்ள இவ் வீதியின் நிலை குறித்து கடந்த வருடத்தில் அச்சுவேலி விவசாய அபிவிருத்திச்சபை முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தது.

இவ் வீதியைப் புனரமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிறகு இந்த வீதியைத் திருத்தியமைப்பதற்கான எந்த முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லையென அவர்கள் தெரிவித்தனர்.

இவ் வீதியைப் புனரமைப்பது குறித்து பல தடவைகள் வலி. கிழக்கு பிரதேச சபையின் கவனத்திற்கு கொண்டுவந்திருக்கிறோம்.

இதனைக் கருத்திற் கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அச்சுவேலி விவசாய அபிவிருத்திச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது. (168)

# நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு யாழில் புதிய கட்டடம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் - கிளிநொச்சி நீர்வழங்கல் மற்றும் சுகாதார செயற்றிட்டத்தின் கீழ் நவீன வடிவில் நிர்மாணிக்கப்பட்ட புதிய ஐந்து மாடிக்கட்டடம் யாழ் நகர் மத்தியில் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்விற்கு நகர அபிவிருத்தி நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம் மகளிர் விவகார பிரதியமைச்சர் திருமதி விஜயகலா மகேஷ்வரன், வடமாகாண ஆளுநர் எச்.எம்.ஜி.எஸ். பளிஹக்கார, வடமாகாண முதல்வர் சி.வி.விக்கினேஸ்வரன், நீர் வழங்கல் சபையின் பிரதி அமைச்சர் துனேஷ் கங்கந்த மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள்,பொதுமக்கள் எனப் பலரையும் திட்டப் பணிப்பாளர் தி.பாரதிதாசன் அழைத்துள்ளார.

மேற்படி நிகழ்ச்சிகளை நகர அபிவிருத்தி நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சு செயலாளர கருணா ஹெட்டியாராச்சி ஒருங்கிணைத்துள்ளார்.

மேற்படி நவீன ஐந்து மாடி கட்டடம் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் வடக்கு உதவி பொது முகாமையாளர் மற்றும் யாழ்.பிராந்திய முகாமையாளர் ஆகியோரது அலுவலகங்களை ஒருங்கே கொண்டமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (92)

# வடமாகாண மீன்பிடி அமைச்சின் ஏற்பாட்டில் மீன்பிடி சங்கங்களுக்கான கலந்துரையாடல்

வடமாகாண மீன்பிடி அமைச்சினால் தேசிய நீரியல் வள உயிரினங்கள் அதிகார சபையின் (NAQDA) வவுனியா, மன்னார் மாவட்ட விரிவாக்கல் அதிகாரியின் ஏற்பாட்டில் வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த நன்னீர் மீன்பிடி சங்கங்களுடனான கலந்துரையாடலும் தேவை மதிப்பீடும் நேற்று முன்தினம் நடைபெற்றது.

வவுனியா மாவட்ட நன்னீர் மீனவ சங்கங்களுடனான கலந்துரையாடல் மாவட்ட செயலக வளாகத்தில் அமைந்துள்ள மோட்டார் போக்குவரத்து திணைக்கள மண்டபத்தில் இடம்பெற்றது. மேற்படி கலந்துரையாடலில் மீனவர்களின் தேவைகளை இனம் காணுவதற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டதுடன் அமைச்சினூடாக கடந்த காலங்களில் முன்னெடுத்த செயற்றிட்டங்களின் மூலம் மீனவர்கள் அடையும பயன்கள் தொடர்பாக தெரிவிக்கப்பட்டது.

குறித்த சந்திப்பில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த பதிவு செய்யப்பட்ட 20 சங் கங்களில் 14 சங்கங்களின் தலைவர்களும் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

அதே போன்று மன்னார் மாவட்ட நன்னீர் மீனவ சங்கங்களுடனான கலந்துரையாடல் கட்டுக்கரை குளத்தின் அருகாமையில் அமைந்துள்ள பறப்பாங்கண்டல் மீனவ சங்க கட்டடத்தில் இடம்பெற்றது. இதில் மன்னார் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட 14 சங்கங்களில் 11 சங்கங்கள் கலந்து கொண்டன.

மேற்படி சந்திப்பின் மூலம் இரு மாவட்டங்களையும் சேர்ந்த ஒவ்வொரு சங்கங்களிற்கும் என்ன வகையான மீன் குஞ்சுகளை வழங்குவதன் மூலம் அவர்கள் சிறந்த பயன் அடைவார்கள அவர்களுக்கு எவ்வளவு மீன் குஞ்சுகள் தேவை, எவ்வகையான மீன்பிடி உபகரணங்கள் தேவை மற்றும் எவ்வாறான பயிற்சிகள் வழங்குவதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த முடியும் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டன. அத்துடன் நன்னீர் இறால் வளர்ப்பதற்கும் பல சங்கங்கள் விருப்பம் தெரிவித்துள்ளன. இதனடிப்படையில் கண்ணாடி இழைப் படகுகளை திருத்துவதற்கான பயிற்சி, நிர்வாக உறுப்பினர்களுக்கான ஆளுமை விருத்தி பயிற்சி மற்றும் நவீன மீன்பிடி முறைகள் போன்ற பயிற்சிகளை தங்களுக்கு வழங்குமாறு கோரினர்

இறுதியாக பறப்பாங்கண்டல் மீனவ சங்கத்தினால் நடாத்தப்படும் மீன்குஞ்சு உற்பத்தி நிலையத்தை பார்வையிட்டதுடன் எதிர்காலத்தில் ஏனைய குளங்களுக்குத் தேவையான மீன் குஞ்சுகளை இவ் உற்பத்தி நிலையம் ஊடாக கொள்வனவு செய்ய முடியுமா? மற்றும் அதற்கான உற்பத்தித்திறன் உண்டா? என்பதனைப் பற்றியும் விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் வடமாகாண மீன்பிடி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், NAQDA வவுனியா, மன்னார் மாவட்ட விரிவாக்கல் அதிகாரி நிருபராஜ், அமைச்சின் பிரதம கணக்காளர், அமைச்சரின் இணைப்பு செயலாளர் மற்றும் அமைச்சு அதிகாரிகள் பங்கேற்றனர். (160)

# புதிய தொழில் முயற்சிகளின் மூலம் வடக்கில் துரித அபிவிருத்தி

புதிய தொழில் முயற்சிகளை மேற்கொண்டு புதிய வருமான மூலங்களை அதிகரிக்க வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளை துரிதப்படுத்தவுள்ளோம்.

இவ்வாறு இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவன பொறியியல் ஆலோசகர் டிலான் பெர்ணான்டோபிள்ளை தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்ற பிரதேசங்களில் புதிய வருமான கருத்திட்டங்களை இனம் காணல் எனும தலைப்பில் ஆலோசகர் டிலான் பெர்ணானடோ பிள்ளை மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தில் இதுவரை இனம் காணப்படாது 25 புதிய வருமான மூலங்களை இனம் கண்டு உள்ளூராட்சி சபைகளுக்கு வழங்கியுள்ளோம்.

இவ்வாறு உணவும், குடிபானமும் தயார் செய்தல் விவசாய உற்பத்தி கைத்தொழில், கைப்பணிக் கைத்தொழில், நிர்மாணத் துறை பொருள் உற்பத்தி, விலங்கு வளர்ப்பு, ஏற்றுமதிக்கான மீன் உற்பத்தி, எரிபொருள் நிரப்பு நிலையம் உட்பட 25 புதிய இனம்காணப்பட்ட வருமான மூலங்களில் ஏற்புடையதை தெரிவு செய்து சபை அனுமதியுடன் இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவனத்துக்கும், உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திற்கும் அனுப்பி வைக்க வேண்டும் இதில் ஏற்புடைய நிகழச்சித் திட்டங்களை வழி காட்டல் நடைமுறையூடாக எதிர்வரும் காலங்களில் வடமாகாண உள்ளூராட்சி சபைகளில் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் உள்ளூராட்சி சபைகளில் நிதி சார்ந்த அதிகரிப்பை ஏற்படுத்தி வருமான உயர்ச்சியை ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளிலும் முன்னெடுக்கலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார் (92)

# திறக்கப்படுமா சனசமூக நிலையம்?

(வரணி)

வரணி வடக்கு கறுக்காய் சனசமூக நிலையம் நீண்ட காலமாக மூடிய நிலையில் எந்தவித செயற்பாடுகளும் இன்றி மூடிய நிலையில் உள்ளதால் வாசகர்கள் நீண்ட தூரம் சென்றே பத்திரிகைகளை வாசிக்க வேண்டிய நிலையில் உள்ளதைக் காண முடிகிறது.

இச் சனசமூக நிலையம் மீண்டும் வழமைபோல் இயங்கினால் வாசகர்கள் பெரும் நன்மை அடைவார்கள் என அப்பகுதி ஊடகப்பிரியர்கள் தெரிவிக்கின்றனர். எனவே உரியவர்கள் இனியாவது காலம் தாழ்த்தாது சனசமூக நிலையத்தை இயங்க வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென வாசகர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (150)

# உளநலச் சிகிச்சை ஆரம்பம்

மந்திகை ஆதார வைத்தியசாலையில் உளநலம்,மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான சிகிச்சை வாரத்தில் இரண்டு தினங்கள் நடைபெறுகிறது. செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களில் காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை இச் சிகிச்சை நடைபெறும் என்றும் அதேவேளை பாடசாலை மாணவர்களுக்கு சனிக்கிழமைகளில் 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை நடைபெறுகிறது.

இச் சிகிச்சை பெறுவோர் முற்பகல் 11 மணிக்கு முன் சிகிச்சை அட்டைகளை சமர்ப்பித்து பதிவுகளை மேற்கொள்ளும் படி உளநலப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (150)

## வென்றது பெரு அணி



(வால்பரேய்சோ)

கோபா அமெரிக்க கால்பந்து தொடரின் லீக் போட்டியில் பெரு அணி 1-0 என வெனிசுலாவை வீழ்த்தியது.

தென் அமெரிக்க நாடுகள் பங்கேற்கும் 44ஆவது கோபா அமெரிக்க கால்பந்துத்தொடர் சிலியில் நடைபெற்று வருகின்றது. இதில் பிரேசில், ஆர்ஜென்ரீனா, உருகுவே, கொலம்பியா உள்ளிட்ட 12 அணிகள் மூன்று பிரிவுகளாக லீக் சுற்றில் விளையாடுகின்றன.

வால்பரேய்சோவில் நடைபெற்ற சி பிரிவு லீக் போட்டியில் பெரு, வெனிசுலா அணிகள் மோதின. இதன் 29ஆவது நிமிடத்தில் வெனிசுலா அணியின் பெர்ணாண்டோ, எதிரணியின் காரேரோவுடன் மோதலில் ஈடுபட்டார். இதனால் பெர்ணாண்டோ சிவப்பு அட்டை பெற்று வெளியேறினார். வெனிசுலா அணி 10 வீரர்களுடன் விளையாட வேண்டிய கட்டாயத்திற்குள் தள்ளப்பட்டது. முதல் பாதியில் இரு அணி வீரர்களும் கோல் எதுவும் அடிக்கவில்லை.

இரண்டாவது பாதியின் 72ஆவது நிமிடத்தில் பெரு அணியின் பிசாரோ ஒரு கோல் அடித்தார். முடிவில், பெரு அணி 1-0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

## கனிஷ்ட உலகக் கிண்ண கால்பந்து

## 2ஆவது முறையாக சேர்பியா சம்பியன்



(ஒக்லாந்து)

நியூசிலாந்தில் நடைபெற்ற 20 வயதுக்குட்பட்ட அணிகளுக்கான உலக கோப்பை கால்பந்து தொடரில் பிரேசிலை வீழ்த்தி, சேர்பிய அணி கிண்ணத்தை வென்றது. சர்வதேச கால்பந்து சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட 20 வயதுக்குட்பட்ட அணிகளுக்கான உலக கோப்பை கால்பந்து தொடரின் இறுதி ஆட்டம் நேற்று நியூசிலாந்தில் நடைபெற்றது. இதில் பிரேசில் மற்றும் சேர்பிய அணிகள் பலப்பரீட்சை நடாத்தின. இப்போட்டியில் சேர்பிய அணியை இலகுவாக பிரேசில் அணி சாய்க்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

இதற்கு மாறாக சேர்பிய வீரர்கள் பிரேசில் அணிக்கு கடும் சவால் கொடுக்கும் வகையில் செயற்பட்டனர். இதன் காரணமாக முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளாலும் கோல் பெற்றுக்கொள்ளப்படவில்லை. இரண்டாவது பாதியில் (70ஆவது நிமிடம்) மாண்டிக் ஒரு கோல் அடிக்க சேர்பியா முந்தியது. அடுத்த சில நிமிடத்தில் (73ஆவது) பிரேசிலின் பெரைரா ஒரு கோல் அடிக்க கோல் எண்ணிக்கை 1-1 என, சமன் ஆனது. போட்டி முடிவில் இரு அணியும் சமமாக (1-1) இருந்ததால், ஆட்டம் கூடுதல் நேரத்துக்கு சென்றது. போட்டி முடிய இரு நிமிடத்துக்கு முன் (118ஆவது) சேர்பிய வீரர் மாக்சிமோவிச் ஒரு கோல் அடித்து அசத்தினார். நிறைவில், 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்ற சேர்பிய அணி, சம்பியன் பட்டம் வென்றது. கடந்த 1987இல் சேர்பிய அணி கிண்ணத்தை வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் சேர்பிய அணி, இரண்டாவது முறையாக கிண்ணத்தை வென்று சாதித்தது.



## நெய்மருக்குத் தடை

உலகின் முன்னணி கால்பந்து வீரர்களில் ஒருவரான நெய்மருக்கு நான்கு போட்டிகளில் விளையாடத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

கோபா அமெரிக்க கோப்பை கால்பந்து போட்டியில் விளையாடிய நெய்மர் கொலம்பியா வீரருடன் மோதலில் ஈடுபட்ட விவகாரத்தில் சிவப்பு அட்டை பெற்றிருந்தார். கடந்த 18ஆம் திகதி நடைபெற்ற ஆட்டத்தில் பிரேசில் அணி கொலம்பியாவிடம் அதிர்ச்சிகரமாக தோற்றது.

இந்தப்போட்டி முடிந்த பின் இரு அணி வீரர்களுக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது. கொலம்பியா வீரர் ஜெய்சன் முரில்லோவை நெய்மர் தலையால் முட்ட முயன்றார். இதைத் தொடர்ந்து நடுவர் அவருக்கு சிவப்பு அட்டை காண்பித்தார். ஏற்கனவே போட்டியின் போது மஞ்சள் அட்டை காண்பிக்கப்பட்டு எச்சரிக்கப்பட்டு இருந்தார். 2ஆவது முறையாக எச்சரிக்கை விடப்பட்டதால் அது சிவப்பு அட்டையானது. இதன்காரணமாக அவர் வெனிசூலாவுக்கு எதிராக இன்று நடைபெறும் முக்கியமான போட்டியில் ஆடமுடியாத நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில் இந்த விவகாரத்தில் தற்போது நெய்மர் மீதான தண்டனை அதிகரிக்கப்பட்டுள்ளது. 4 போட்டியில் விளையாட அவருக்குத் தடை விதித்து தென் அமெரிக்க கால்பந்து சம்மேளனம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதனால் 23 வயதான நெய்மருக்கு கோபா அமெரிக்க கால்பந்து போட்டியின் எஞ்சிய ஆட்டங்களில் விளையாட முடியாத நிலை ஏற்பட்டது. இது பிரேசில் அணிக்கு மிகப்பெரிய பின்னடைவாகும்.

இதேபோல நெய்மருக்கு 6 இலட்சம் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. வீரர்கள் மோதல் விவகாரத்தில் கொலம்பிய வீரர் கார்லோஸ் பக்சாவுக்கும் சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டது. அவருக்கு 2 போட்டியில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த தடையை எதிர்த்து இரு வீரர்களும் மேன்முறையீடு செய்ய உரிமை உள்ளது.

## ஆஸஷில் ஜொலிப்பார் ஹாசில்



அடுத்து நடைபெறவுள்ள ஆஸஷ் தொடரில் அவுஸ்ரேலியாவின் வேகப்பந்து வீச்சாளர் ஹாசில் என்று அவுஸ்ரேலியாவின் பந்து வீச்சு ஜாம்பவனான மெக்ராத். தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் கூறுகையில்; கார்டி..பில் நடைபெறும் முதல் டெஸ்ட் போட்டியில் ஹாசில்வுட்டுக்கு வாய்ப்பு கிடைத்தால், அவர் அதில் சிறப்பாக பந்து வீசுவார். போட்டியில் அவரது செயற்பாடு சிறப்பாக உள்ளது. தனது விளையாட்டு அருமையாக உள்ளது என்று அவருக்குத் தெரியும்.டெஸ்ட் போட்டியில் இரண்டாவது இனிங்ஸை தொடங்கியுள்ள அவர் மிகுந்த வேட்கையுடன் உள்ளார். சரியான இடத்தில் பந்தை பிட்ச் செய்து சுவிங், பவுன்ஸ் செய்கிறார். இதைப் பார்க்கும்போது சரியான வழியில் செல்கிறார் என்றே தோன்றுகிறது என்றார்.

## மே.தீவு முன்னேற மார்க்வோ அறிவுரை

சர்வதேச கிரிக்கெட் அரங்கில் ஜாம்பவான் அணியாக திகழ்ந்த மே.தீவுகள் தற்போது தத்தளித்து வருகிறது. அந்த அணியை மீண்டும் எழுச்சி பெற்று டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்திற்கு வருவதற்கு அந்த அணியின் வீரர்கள் தங்களது அடிப்படை ஆட்டத்திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று மார்க்வோ தெரிவித்துள்ளார்.

நான் அவுஸ்ரேலிய அணிக்காக அறிமுகமாகும் போது நாங்கள் நல்ல அணியாக இருந்தோம். அந்த நேரத்தில் நாங்கள், தற்போது மே.தீவுகள் அணி ஐ.சி.சி. தரவரிசையில் இருப்பதுபோல் மோசமாக இருக்கவில்லை. ஆனால், 1991ஆம் ஆண்டு நாங்கள் மே.தீவுகள் அணியால் எளிதில் தோற்கடிக்கப்பட்டோம். 1995இல் வேறுபாடான அணுகுமுறையுடன், கடினமாக முயற்சி செய்து திறமையான அணியை உருவாக்கினோம். இதற்காக முதலில் அடிப்படையில் மாற்றம் செய்து சிறப்பாகச் செயற்பட்டோம். அதேபோல் தற்போது மே.தீவுகள் அணியும் அடிப்படையில் இருந்தே வளர்ச்சிகளை பெறவேண்டும். களத்தடுப்பு, துடுப்பாட்டம், பந்து வீச்சில் நீங்கள் அடிப்படை பயிற்சியை பெற வேண்டும். உதாரணத்திற்கு ஒவ்வொரு பந்தை அடிக்கும்போதும் ஓட்டம் எடுக்க ஓடுவதற்கு கஷ்டமாகத்தான் இருக்கும். இதற்காக அடிப்படை பயிற்சியை ஒருமுறை பெற்றுவிட்டால், இதை திறம்படச் செய்து உறுதியான வளர்ச்சியைப் பெற முடியும் என்றார்.

## இரண்டாவது ஒரு நாள் டாக்காவில் இன்று

(டாக்கா)

இந்திய, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று டாக்காவில் நடைபெறவுள்ளது.

பங்களாதேஷிற்கான கிரிக்கெட் சுற்றுலாவை மேற்கொண்டுள்ள இந்திய அணி தற்போது மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் ஆடி வருகின்றது.

இதில் முதல் போட்டியில் பங்களாதேஷ் அணி 79 ஓட்டங்களால் அபாரமான வெற்றிபெற்றது. இந்நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ஒரு நாள் போட்டி இன்று டாக்காவில் நடைபெறவுள்ளது. இதில் முதல் போட்டியில் அடைந்த தோல்விக்கு பழி தீர்க்கும் வகையில் இந்திய அணியின் ஆட்டம் அமையும் என கிரிக்கெட் வல்லுநர்களால் ஆரூடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. சொந்த மண்ணில் ஒரு நாள் தொடரை வெல்லும் முனைப்புடன் செயற்பட்டு வரும் பங்களாதேஷ் அணி இன்றைய போட்டியிலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி தொடரை வெல்ல முயற்சிக்கும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். இந்நிலையில் இன்றைய போட்டி பரபரப்பு மிக்கதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## சபீக், அகமட் பொறுப்பாட்டம்; பாக். முன்னிலை

(காலி)

அசாட் சபீக், சர்ப்ராக் அகமட் ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் பாகிஸ்தான் அணி நெருக்கடியிலிருந்து மீண்டதுடன் முன்னிலையும் பெற்றுள்ளது. இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக்கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் ஆட்டம் காலியில் நடைபெற்று வருகின்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத் தீரமானித்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக ஆடிய இலங்கை அணி கௌசல் சில்வா மற்றும் சங்கக்கார ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் கௌரவமான நிலையைப் பெற்றது. இறுதியில் இலங்கை அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 300 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கௌசல் சில்வா 300 பந்துகளை எதிர்கொண்டு 16 பவுண்டரிகள் அடங்கலாக 125, சங்கக்கார 106 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், இரு பவுண்டரிகள் அடங்கலாக 50 ஓட்டங்களைப்பெற்றனர். பந்து வீச்சில் வாகாப் றியாஸ், பாபர் ஆகியோர் தலா மூன்று, மொகமட் ஹபீஸ் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய பாகிஸ்தான் அணி பிரசாத், பெரேரா ஆகியோரின் அபாரமான பந்து வீச்சின் மூலம் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்து கடும் நெருக்கடியை எதிர்கொண்டது. குறிப்பாக முதல் ஐந்து விக்கெட்டுக்களையும் 96 ஓட்டங்களைப் பெற்றவேளை பறிகொடுத்தது. இந்நிலையில் ஆறாவது விக்கெட்டுக்காக இணைந்த அசாட் சபீக், சர்ப்ராக் அகமட் ஆகியோர் அணியின் நிலையை உணர்ந்து பொறுப்புடன் செயற்பட்டதுடன் அணியை சரிவிலிருந்தும் மீட்டனர். இதன் காரணமாக பாகிஸ்தான் அணி முன்னிலை பெற்றது. இறுதியில் பாகிஸ்தான் அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 417 ஓட்டங்களைப்பெற்றது. இதில் அசாட் சபீக் 253 பந்துகளை எதிர்கொண்டு ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக 131,சர்ப்ராக் அகமட் 86 பந்துகளை எதிர்கொண்டு 13 பவுண்டரிகள் அடங்கலாக 96 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பெரேரா நான்கு, பிரசாத் மூன்று, பிரதீப் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். 117 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடி வரும் இலங்கை அணி நேற்றைய நான்காம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட 10 ஓவர்கள் இருக்கையில் ஒரு விக்கெட்டை இழந்து 32 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இன்று போட்டியின் இறுதி நாளாகும்.







மன்னார் கோட்ட முன்பள்ளிகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி கடந்த 17ஆம் திகதி மன்னார் அல் அஸார் மகாவித்தியாலய மைதானத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இதன்போது சிறார்களின் வண்ணமயமான விளையாட்டு நிகழ்வுகள் பல இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டுச் செய்திகள்

## காலிறுதி ஆட்டம் வட்டுக்கோட்டையில்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்படும் ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடரின் காலிறுதி ஆட்டமொன்று நாளை மறுதினம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

17 வயதுப் பிரிவு அணிகள் மோதவுள்ள இப்போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணியும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் மோதவுள்ளன. இரு அணிகளுமே இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்ட ஒரு நாள் போட்டிகளில் பல வெற்றிகளைப் பதிவு செய்துள்ள நிலையில் இப்போட்டி மிகுந்த விறுவிறுப்பு மிக்கதாக இருக்கும் என கிரிக்கெட் விமர்சகர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வலியுறுத்துவது தவறு

சங்காவின் ஓய்வு நிச்சயம் இலங்கை அணிக்குப் பெரிய இழப்பாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. அதற்காக அவரை ஓய்வுபெறவேண்டாம் என வற்புறுத்துவது தவறு என இலங்கை அணியின் முன்னாள் வீரர் அரவிந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

எந்தவொரு வீரரும் தனது ஓய்வை சிறப்பான நிலையில் இருக்கும்போது அறிவிக்கவே விரும்புவார். அந்த வகையில் சங்காவின் முடிவு சரியானதே. ஆனாலும் குறைந்தது ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகள் விளையாடக்கூடிய தகுதியும் திறமையும் மிக்க அவரிடம் இருப்பதை நான் அறிவேன். அவர் சிறந்த பண்பு மிக்க வீரரும்கூட. அவருக்கு உரிய கௌரவம் அளிக்கப்படவேண்டும் என்றார்.

## ஒலிம்பிக் தின கொண்டாட்டம் மன்னாரில் கோலாகல ஏற்பாடு

(மன்னார்)

சர்வதேச ஒலிம்பிக் தின கொண்டாட்டங்களை இந்த வருடம் மன்னாரில் கோலாகலமாக நடாத்த இலங்கை ஒலிம்பிக் குழு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

இந்நிகழ்வு நாளை மறுதினம் முதல் 23ஆம் திகதி வரை மன்னாரில் நடைபெறவுள்ளது.

சர்வதேச ஒலிம்பிக் பேரவை 1894 ஆம் ஆண்டில் யூன் 23 ஆம் திகதியை சர்வதேச ஒலிம்பிக் தினமாக பிரகடனப்படுத்தியது.

அதற்கமைய அன்று முதல் வருடாந்தம் யூன் 23 ஆம் திகதி சர்வதேச ஒலிம்பிக் தினமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

இந்த வருடமும் சர்வதேச ஒலிம்பிக் தின கொண்டாட்டங்களை சிறப்பாக நடாத்தவுள்ளதாக கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இலங்கை ஒலிம்பிக் குழு தெரிவித்தது.

விளையாட்டின் மூலம் நல்லிணக்கம் என்பதே இவ்வருட தொனிப்பொருளாகும். அந்த அடிப்படையில் விளையாட்டின் மூலம் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் மன்னாரில் இந்த நிகழ்வை நடாத்துவதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். இலங்கையில் மெய்வல்லுநர் வீர,வீராங்கனைகளை உருவாக்கவேண்டும். அதற்கான ஆர்வத்தை அதிகரிக்க வேண்டும். அதற்கான பல நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம் என இலங்கை ஒலிம்பிக் குழு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தகுதி பெற்றது திருநெல்வேலி

(யாழ்ப்பாணம்)

ஜே.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் முதன்மைச் சுற்றுக்கு திருநெல்வேலி அணி தகுதி பெற்றுள்ளது.

மூன்றாவது ஜே.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் தொடர் விரைவில் நடைபெறவுள்ளது.

இதற்கான அணிகளைத் தெரிவு செய்வதற்கான தகுதி காண் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதில் திருநெல்வேலி மற்றும் விக்ரோறியன்ஸ் அணிகளுக்கிடையிலான ஆட்டமொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் முதலில் ஆடிய திருநெல்வேலி அணி 20 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 245 ஓட்டங்களைப் பெற்றது. இதில் லவகன் 18 பவுண்டரிகள், ஐந்து சிக்ஸர்கள் அடங்கலாக 120 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு 246 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சுழிபுரம் விக்ரோறியன்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 125 ஓட்டங்களைப் பெற்று படுதோல்வியடைந்தது.

இவ்வெற்றியின் மூலம் திருநெல்வேலி அணி ஜே.பி.எல். ருவென்ரி-20 தொடரின் முதன்மைச் சுற்றுக்கு முன்னேறியுள்ளது. முதன்மைச் சுற்று ஆட்டங்கள் விரைவில் நடைபெற ஏற்பாடாகியுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## விசாரணைக்கு உத்தரவு

(கொழும்பு)

அரச கணக்காய்வு அறிக்கையின் பிரகாரம் கடந்த ஏழு ஆண்டு காலத்தில் கால்பந்தாட்ட சம்மேளனத்தில் நிதி முறைகேடு, ஊழல் நடைபெற்றுள்ளதா? என விசாரிக்க நிதிக் குற்றப் பிரிவுக்கு கொழும்பு பிரதம மஜிஸ்திரேட் கிஹான் பலப்பிட்டிய அனுமதி வழங்கினார்.

சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் உட்பட அதிகாரி ஒருவரின் வங்கிக் கணக்கையும் சோதிக்குமாறும் அவர் உத்தரவிட்டார்.

சம்மேளன முன்னாள் தலைவர் ரன்ஜித் ரொட்ரிகோ செய்த முறைப்பாட்டின் பேரில் விசாரணைகளை ஆரம்பிப்பதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

களுத்துறை விளையாட்டரங்கை திருத்தியமைக்க இத்தாலி விளையாட்டு வீரர்கள் வழங்கிய 40,000 யூரோ பணத்தை முன்னாள் தலைவர் மணிலால் பெர்னாண்டோவின் பணம் எனக் கூறி கொள்ளுப் பிட்டி தனியார் வங்கி ஒன்றில் கணக்கொன்றில் வைப்பீடு செய்ய முன்னாள் நிறைவேற்று அதிகாரி கிரிஷாந்த பெரேரா நடவடிக்கை மேற்கொண்டாரா? என்றும், வேறு மூன்று காரணங்கள் தொடர்பாகவும் இந்த விசாரணை நடாத்தப்படுகிறது.

## முன்னேறியது நியூட்டன்

(கரவெட்டி)

கரவெட்டி கொலின்ஸ் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் மாபெரும் கால்பந்தாட்டப் போட்டியில் அடுத்த சுற்றுக்கு நியூட்டன் அணி முன்னேறியுள்ளது.

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் கரவெட்டி கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் நடாத்தி வரும் மாபெரும் கால்பந்தாட்டப் போட்டி கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இதில் கடந்த 18ஆம் திகதி நடைபெற்ற போட்டி ஒன்றில் நியூட்டன் அணியும் பாடினி அணியும் மோதின.

இதில் நியூட்டன் அணி ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்தியதுடன் கோல்களையும் பெற்றவண்ணமிருந்தது. இதற்குப் பதிலடி கொடுக்கும் முனைப்புடன் பாடினி அணி செயற்பட்டபோதிலும் நியூட்டன் அணியின் பிற்கள வீரர்கள் தடுப்பாணையை தாண்டி கோல் கம்பத்திற்குள் நுழைய முடியவில்லை. இறுதியில் நியூட்டன் அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது. இப்போட்டித் தொடரின் ஏனைய ஆட்டங்கள் தொடர்ந்து மாலை வேளைகளில் நடைபெற்று வருவதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் கிண்ணம் வெல்லும் அணிக்குப் பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படுவதுடன் தொடர் நாயகன் விருது, ஆட்டநாயகன் விருது, சிறந்த கோல்காப்பாளர் விருது போன்றன வழங்கப்படவுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (93)



வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான கராத்தே போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி வீரர் இ. செந்தூரன் 19 வயதுப் பிரிவினருக்கான குமித்தே போட்டியில் தங்கம் வென்று அசத்தினார். கடந்த 8,9ஆம் திகதிகளில் வவுனியாவில் நடைபெற்ற இப்போட்டியில் தங்கம் வென்ற செந்தூரன் நடுவர்களுடன் நிற்பதைக் காணலாம்.

# நாபா—1 நண்பனா தோழனா தலைவனா?

- ராம் -



**நே**ற்றுப்போல் இருக்கிறது அந்த மெலிந்த நெடிது யர்ந்தவரை முதன் முதலாக சந்தித் தது. 1978 இல் அடித்த சூறாவளி மட்டக்களப்பை புரட்டிப் போட்டது. அப்போது நான் கொழும்பு பல்கலைக் கழக முதலாண்டு மாணவன். ஏற்கனவே 1974 இல் கொழும்பில் ஏற்பட்ட பழக்கத்தில் நண்பனான தேவா (டக்ளஸ் தேவானந்தா) 1977 கலவரத்தின் பின் உருவான தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் சார்பாக உணவுப் பொருட்களை பொதிபண்ணி விமானம் மூலம் அனுப்பும் நடவடிக்கையை தொடங்கி அதற்கான தொண்டர் களை சேர்க்கத் தொடங்கினார்.

நானும் எனது பல்கலைக்கழக நண்பர்களும் நண்பிகளும் சரஸ் வதி மண்டபத்தில் பணியாற்றிய போது எனது மேல்படிப்புக்கு உதவிய மாமா மட்டக்களப்பில் இருந்ததால் அவருக்கு என்ன நடந்ததோ என்ற அக்கறை மேலோங்கியது. அப்போது மட்டக்களப்பு பிராந்திய பெற்றோ லியக் கூட்டுத்தாபனத்தில் உயர் பதவி வகித்த தேவாவின் தந்தை அமரர் கதிரவேலு அவர்கள் உத்தியோக பூர்வ விஜயமாக அங்கு செல்வதை அறிந்து அவருடன் கண்டி மகியங்கனை கரடியனாறு ஊடாக பயணித்து எனது மாமனார் இருந்த மணிபுரம் சென்றேன்.

அவர் அதிக பாதிப்பின்றி இருந்ததால் தமிழ் அகதிகள் புனர்வாழ்வு முகாம் அரசடியில் இருப்பதறிந்து ஆயித்தியமலை வலையிறவு ஊடாக மட்டக்களப்பு சென்றேன். நான் முகாமை அடைந்த வேளை மாலை 7 மணிக்கு மேலாகி விட்டிருந்தது. அங்கு காரியாலயத்தில் இருந்தவரிடம் நான் கொழும்பில் இருந்து வருகிறேன் இங்கு தொண்ட ராக பணிபுரிய விரும்புவதாக கூற அவர் என்னை அமரச்சொன்னார்.

அப்போது சாப்பிட்டீர்களா என ஒரு குரல் என் பின்னால் கேட்டது. திரும்பிப்பார்த்தேன் மெலிந்த நெடிதுயர்ந்த நீல டெனிம் கால்சட்டை டெனிம் ஜக்கற் அணிந்த தலையில் சுடையை கவிழ்த்தது போல் நிறைய முடிகொண்ட இளைஞரை கண்டேன். கறுத்த உருவம் வெண்மையான சிரிப்பு. அவரிடம் நான் இன்னமும் சாப்பிடவில்லை இங்கு அருகில் ஏதாவது கடை இருக்கிறதா என கேட்டேன். அவர் நோ புறப்ளம் (No Problem) இங்கு எங்களுடன் சாப்பிடலாம் என்றார். பின்புதான் அறிந்து கொண்டேன் என்னை இருக்கச் சொன்னவர் குமார் என்னும் முத்துக்குமாரசாமி சாப்பிட்டீர்களா என கேட்டது நாபா எனும் பத்மநாபா.

இரவு உணவு உண்டபின் உறங்கச் செல்லுமுன் ஒரு சிறு சலசலப்பு ஏற்பட்டது. வெளியில் இருந்து வந்த சிலர் அனைவரையும் மண்டபத்தில் கூடச் சொன்னார்கள். வந்தவரில் ஒருவர் நாம் இங்கு ஒரு கட்டமைப்பாக இயங்கவேண்டும் எல்லோருக்கும் ஒரே நிற தொப்பி வழங்கப்படும். எமது அமைப்பு தமிழ் இளைஞர் பேரவை என அடையாளப்படுத்த வேண்டும் என்றார். அவரை பரந்தன் ராஜன் என பின்னர் அறிந்துகொண்டேன். குமார் அதை மறுதலித்து அப்படிச் செயற்பட முடியாது நாம் இங்கு அரசியல் செய்ய வரவில்லை என கூறியபோது வாக்குவாதம் முற்றியது. குறுக்கிட்ட நாபா எமக்குள் மோதல் வேண்டாம் நாம் இங்கிருந்து வெளியேறுகிறோம் என கூறி எம்முடன் வருபவர்கள் வாருங்கள் என கூறி வெளியே பெய்த மழையையும் பொருட்படுத் தாமல் குமார், நாபா, என பலருடன் நானும் நனைந்தபடி நடந்து மெதடிஸ்த சென்றல் பாடசாலையை அடைந்தோம். சூறாவளியால் பல ஓடுகள் பறந்திருக்க எங்கெல்லாம் ஒழுக்கில்லையோ அங்கெல்லாம் ஒதுங்கி இரவை கழித்தோம்.

காலையில் குமார், நாபா யாரோ முக்கிய நபரைச் சந்திக்க புறப்பட்ட வேளை நாபா என்னைப் பார்த்து நீங்களும் வாருங்கள் என்றார். ஏதோ பல வருடம் பழகிய நண்பனைப் போல் அவர் செயல் என்னை ஆச்சரி யப்படுத்தியது. ஏனென்றால் நேற்று இரவுதான் அறிமுகமான என்னை இன்று தன்னோடு கூட்டிச்செல்ல அவர் முனைந்தது வினோதம் தான். நாம் சந்தித்த முக்கிய நபர் என்ஜினியர் மரியசிங்கம். அவர் எம்மை வரவேற்று எமது தொண்டர் வேலைக்கு தன்னால் முடிந்த உள்ளை கேட்கும்படி கூற. குமார் தயங்கியது எமது போக்கு வரத்து, உணவுப் பிரச்சினை பற்றிக் கூற அவர் தன்னுடைய ஜீப்பைத் தந்து எங்கிருந்து மேல்மிக பெறலாம் என விபரமும் அனுப்பி வைத்தார். முதல் பணியாக பள்ளிக்கூடத்தில் மிஞ்சிய ஓடுகளைப் பொருத்தி நாம் தங்குவதற்கு ஒரு மண்டபத்தை ஒழுங்கு செய்தோம். சமையல் பாத்திரங்களை பல இடங்களில் சேகரித்தோம்.

திருமலையில் இருந்து அன்னலிங்க ஐயா, தங்கமகேந்திரன், சின்னவன் என பலர் மீன்பிடி வள்ளங்களில் வந்தனர். யாழ்ப்பாணத்தில் இருந்து கைலாஸ் பல்கலைக்கழக மாணவர்களுடன் வந்து இணைந்தார். இன்பம், பாலா (இவர்கள் பின்பு இராணுவத்தால் யாழ்பாணத்தில் கொல்லப்பட்டனர்) என பலர் நாபாவுடன் இணைந்தனர். இதனால் பல்கிப் பெருகியது தொண்டர்படை.

(தொடரும்)

# அன்ட்ரோய்ட் எம் சிறப்புகள்!



**த**ன்னுடைய 2015 ஆம் ஆண்டுக்கான, செயலிகள் உருவாக்குபவர்களுக்கான கருத்தரங் கில், கூகுள் தன் அடுத்த மொபைல் ஒப்பரேட்டிங் சிஸ்டம் குறித்த தகவல்களைத் தந்தது. அன்ட்ரோய்ட் எம் என்ற பெயரில் வர இருக்கும் இந்த சிஸ்டம் தற்போதைய வசதிகள் பலவற்றை மேம்படுத்துவதாக அமைந்துள்ளது.

அன்ட்ரோய்ட் எம் சிஸ்டத்தில் இணைக்கப்பட்டுள்ள சாதனங்கள் ஒன்றுக்கொன்று தங்களுக்குள் டேட்டா பரிமாறிக் கொள்ளும் பாங்கில் புதிய மேம்பாடு தரப்பட்டுள்ளது. தற்போதுள்ள கட்டமைப்பில், பயனாளர்கள் ட்விட்டர் பயன்பாட்டிற்கான லிங்கினைத் தேர்ந்தெடுக்கையில், குரோம் பிரவுசர் வழி வேண்டுமா அல்லது ட்விட்டரின் அதிகார பூர்வ பிரவுசர் வேண்டுமா எனக் கேட்டு நாம் தேர்ந்தெடுப்பதற்காகக் காத்திருக்கும். ஆனால், இப்போது, ட்விட்டரில் கிளிக் செய்தால், ஒப்பரேட்டிங் சிஸ்டமே, அப்போது எந்த அப்ளிகேஷன் மிகச் சிறந்தது எனத் தேர்ந்தெடுத்து இயக்கும்.

கூகுள், அன்ட்ரோய்ட் ஸ்மார்ட் போன்களிலும், டப்லட் பி.சி.களிலும் இயங்கும் பற்றரியின் பயன்பாட்டு காலத்தினை அதிகப்படுத்தும் வகையில் சிஸ்டத்தினை மேம்படுத்தியுள்ளது. இந்தப் புதிய வழிமுறைக்கு Doze எனப் பெயரிட்டுள்ளது. இயங்காத போது, பல நாள் இயக்கப்படாத செயலிகளை முடக்கி வைப்பதன் மூலம், பற்றரியின் சக்தி சிக்கனப்படுத்தப்படுகிறது.

அன்ட்ரோய்ட் எம் சிஸ்டம், யு.எஸ்.பி. டைப் சி வகை யினைப் பயன்படுத்த கட்டமைப்பினைத் தருகிறது. இதன் மூலம், குறிப்பிட்ட மொபைல் போனை சார்ஜ் செய்திட வேண்டுமா அல்லது அதன் மூலம் வேறு ஒரு சாதனத்தினை சார்ஜ் செய்திட வேண்டுமா என்ப தனை முடிவு செய்திடலாம். எடுத்துக் காட்டாக, ஒரு அன்ட்ரோய்ட் எம் டப்லட் பி.சி.யில் யு.எஸ்.பி. டைப் சி கனெக்டர் கொண்டிருந்தால், அது ஒரு ஸ்மார்ட் போனை யும் சார்ஜ் செய்திடலாம். அல்லது அந்த ஸ்மார்ட் போன் மூலம் தன்னையும் சார்ஜ் செய்து கொள்ளலாம்.

அன்ட்ரோய்ட் எம் சிஸ்டத்தின் இன்னொரு புதிய வசதி, விரல் ரேகை ஸ்கானர், டச் ஐ.டி. உள்ள ஐபோனில் உள்ளதைப் போல, அன்ட்ரோய்ட் ஸ்மார்ட் போன் பயனாளர்களும் தங்கள் விரல் ரேகையைப் பயன்படுத்தி போன்களை இயக்கவும் மூடவும் செய்திடலாம். பணப் பரிமாற்றத்தினையும் மேற்கொள்ளலாம்.

மொபைல் வழி நிதி பரிமாற்ற வழியில், கூகுள் "அன்ட்ரோய்ட் பே" (Android Pay) என்ற ஒரு திட்டத்தை இந்தக் கருத்தரங்கில் அறிமுகம் செய்துள்ளது. இந்தக் கட்டமைப்பு என்.எப்.சி. தொழில் நுட்பத்தில் இயங்குகிறது. இதனைப் பயன்படுத்தி சிறிய வணிக நிலையங்களில் என்.எப்.சி. வழி நிதி பரிமாற்றத்தினை மேற்கொள்ளலாம். அமெரிக்காவில், 7 இலட்சம் விற்பனை மையங்கள், இந்த அன்ட்ரோய்ட் பே சிஸ்டத்தில் இயங்குவதற்கு ஒத்துக் கொண்டு கூகுள் நிறுவனத்துடன் ஒப்பந்தம் போட்டுள்ளன.

இணைய இணைப்பில் படிப்பது என்பதும் தகவல்களைத் தேடுவதும் பழக்கமாகிவிட்டதனால், அன்ட்ரோய்ட் எம் சிஸ்டத்தில் Chrome Custom Tabs என்ற வசதி தரப்பட்டுள்ளது. இதில், ஸ்மார்ட் போனில் இயங்கும் செயலிகள், தங்களுக்கென தனியே ஒரு குரோம் ரப் ஒன்றினைத் தங்களுக்கானதாய்க் கொள்ளலாம். இதன் மூலம் செயலிகளை இயக்கி, அதில் படிவங்களை நிரப்பலாம். நிரப்புவதற்குத் தேவையான தகவல்கள், குரோம் பிரவுசரிலிருந்து எடுத்துக் கொள்ளப்படும்.

இந்த குரோம் பிரவுசரில் மட்டும் ஒரு வசதி தரப்பட்டுள்ளது. இது இயங்கும்போது, இணைய இணைப்பின் வேகம் குறைந்தால், தரவிறக்கப்படும் தளத்திலிருந்து, அதிக டேட்டாவினைக் கொண்டிருக்கும் படங்கள், ஒப்ஜெக்ட்கள் பிரிக்கப்பட்டு, தளத்தில் உள்ள டெக்ஸ்ட் தகவல்கள் மட்டும் மிக வேகமாக இறக்கித் தரப்படும்.

தற்போதைக்கு அன்ட்ரோய்ட் எம் சிஸ்டம் சோதனைப் பதிப்பாகக் கிடைக்கிறது. இதன் முழு இயக்கத் தொகுப்பு 2015 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டில் வழங்கப்படும்.

# ராசிக்குரிய வர்ணம்

**பு**திய வீடுகட்டி முடித்தபின் என்னென்ன நிறத்தில் வர்ணம் பூச வேண்டும் என்று ஜோதிடத்தில் விளக்கப்பட்டுள்ளது. அவை பின்வருமாறு:

- மேஷம் - சிவப்பு
- ரிஷபம் - வெண்மை
- மிதுனம் - பச்சை
- கடகம் - றோஸ்
- சிம்மம் - மங்கிய வெள்ளை
- கன்னி - பல வர்ணம்
- துலாம் - கருமை
- விருச்சிகம் - பொன்நிறம்
- தனுசு - மஞ்சள்
- மகரம் - மங்கிய சிவப்பு
- கும்பம் - பழுப்பு
- மீனம் - வெண்மை.

உள்ளடக்கம், அதன் மொழி,
நடை போன்றவை எவ்வாறு
இருக்கின்றன என்று புரிந்து

களின் கவிதைகளையும் வாசிக்க வேண்டும்
புரிந்து கொண்ட பிறகு மெதுவாக பிற கவிஞர்
களை வாசிக்கலாம். பிரம்மராஜன், நகுலன்
போன்றவர்கள் முக்கியமான கவிஞர்கள்தான்.

**கு**ழந்தைகளைப் பற்றிய
உலகப்படங்களுக்கு ஓர்
அடிப்படையான இலக்கணம்

சில ஆண்டுகளுக்கு முன்னால்
வெளியான மெரினா படத்
தோடு காக்காமுட்டையை

இருக்காது. கொஞ்சம் சன்ன
மான கசப்பும் கொழகொழப்பு
மாக மோசமான வாசனையோடு

போடுகிறது இந்தத் தொடர்.
இத்தொடருக்கும் உத்தம
வில்லனுக்கும் நிறையவே

பல்கிப் பெருகியது தொண்டர்படை.
(தொடரும்)

நாம் கவிதை எழுதுவதற்கும் முன்பாக தற்காலக் கவிதைகளின் உள்ளடக்கம், அதன் மொழி, நடை போன்றவை எவ்வாறு இருக்கின்றன என்று புரிந்து வைத்திருப்பது அவசியம். இந்தப் புரிதல்தான் சுய பரிசோதனையைச் செய்ய உதவும். நமது கவிதைகள் எந்த நிலைமையில் இருக்கின்றன என்பதையும் இன்னமும் எவ்வளவு தூரம் செல்ல வேண்டும் என்பதையும் தெரிந்து கொள்ளலாம். இது கவிதைக்கு மட்டுமில்லை- எதை எழுத விரும்பினாலும் பொருந்தும்.



# எங்கேயிருந்து தொடங்குவது?

- வா.மணிகண்டன் -

கவிதை வாசிப்பைத் தொடங்க விரும்பினால் அதற்குத் தகுதியான நிறையக் கவிஞர்கள் தமிழில் இருக்கிறார்கள். அவர்களில் இருந்து தொடங்கலாம். அந்தக் கவிஞர்களின் சிக்கல் இல்லாத, எளிமையான கவிதைகளைத் தேர்ந்தெடுத்து வாசிப்பதும் அவசியம்.

பத்தாண்டுகளுக்கு முன்பாக கவிஞர் மனுஷ்ய புத்திரன் உயிர்மை பதிப்பகத்தின் வாயிலாக முக்கியமான கவிதைகளைத் தொகுப்பாக்கி சிறு புத்தகமாக வெளியிட்டிருந்தார். அந்தப் புத்தகத்தை அடிப்படையாக வைத்து சில கல்லூரிகளில் பயிற்சிப்பட்டறைகளையும் அவர் நடத்தினார். நகுலன் தொடங்கி பிரமிள் வழியாக ஜெ. பிரான்சிஸ் கிருபா வரையிலான கவிஞர்களின் தலா ஒரு கவிதை இருக்கும். கவிதை உலகுக்குள் நுழைபவர்களுக்காகவே தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகளைக் கொண்ட தொகுதி அது. சமயவேல், சுகுமாரன், ஞானக்கூத்தன், தேவதச்சன், ஆத்மாநாம் போன்ற முத்த கவிஞர்களின் முக்கியமான கவிதைகளைக் கொண்ட அந்தப் புத்தகம் இப்பொழுது கடைகளில் கிடைக்கிறதா என்று தெரியவில்லை. அது கிடைத்தால் மிகச் சிறப்பாக இருக்கும்.

அது கிடைக்கவில்லை என்பதற்காக அனைத்து கவிஞர்களின் கவிதைகளையும் வாசிக்க வேண்டும் என்று பெருந் தொகுப்புகளை நோக்கிச் செல்ல வேண்டியதில்லை. கவிதையைப் பற்றிய ஓரளவு புரிந்து கொண்ட பிறகு மெதுவாக பிற கவிஞர்களை வாசிக்கலாம். பிரம்மராஜன், நகுலன் போன்றவர்கள் முக்கியமான கவிஞர்கள்தான். மறுக்கவில்லை. ஆனால் எடுத்த உடனேயே அவர்களை வாசிக்கச் செய்வது சரியான அணுகுமுறையாகாது. கவிதை வாசித்துப் பழகியவர்களையே திணறடிக்கக் கூடிய கவிதைகள் அவை. புதியவர்கள் என்றால் தனியாகச் சொல்ல வேண்டியதில்லை.

"நான் கவிதை வாசிக்க விரும்புகிறேன்" என்று யாராவது கேட்டால் வண்ணதாசனின் தேர்ந்தெடுத்த கவிதைகளைக் கொடுக்கவே விரும்புவேன். அவரது கவிதைகள் மிக எளிமையானவை. வாசிப்பவர்களுடன் ஒருவித நெருக்கத்தை உருவாக்கக் கூடியவை. அடுத்தபடியாக கலாப்ரியா. இவர்கள் வழியாக கவிதைகளுக்குள் நுழைவது கவிதை மீதான மிரட்சியை போக்கி விடும் என்று உறுதியாக நம்புகிறேன். அதே போல முகுந்த் நாகராஜன், இசை போன்ற கொண்டாட்டத்தை உருவாக்கக் கூடிய கவிஞர்களின் கவிதைகளையும் தாராளமாக பரிந்துரைக்கலாம். கவிதைகளுக்குள் நுழைவதற்கான திறப்புகளை இவர்களின் கவிதைகள் கொண்டிருக்கின்றன.

கவிதைகள் புரிவதில்லை என்பதும் அவை மிகச் சிக்கலானவை என்பதும் ஒருவிதமான பிரமைதான். உண்மையில் அப்படியில்லை. நமக்கு கவிதைகள் குறித்தான பரிச்சயம் உருவாகாத வரைக்கும் கவிதைகள் கடினம்தான். ஆனால் அதன் கடினமான மேற்புற ஓட்டை சற்று உடைத்துப் பார்த்தால் உள்ளே நுழைந்துவிடலாம். அதை உடைப்பதற்கு சரியான வழிகாட்டுதல்கள் தேவை என்பதை மறுப்பதற்கில்லை.

**முகுந்த் நாகராஜனின் கவிதையொன்று :-**

**ஒரு மணி நேரத்துக்கு முன்**
**ரயில் அடிபட்டு இறந்தவன் உடலை**
**கறுப்பு ப்ளாஸ்டிக் கவரால்**
**முழுவதும் மூடி**
**ரயிலில் ஏற்றினார்கள் மூன்று பேர்.**
**ஒரு கால் செருப்பு எவ்வளவு தேடியும்**
**கிடைக்கவில்லை என்று வருத்தப்பட்டான்**
**பிணத்தின் கால் பக்கம் இருந்தவன்.**
**இன்னும் கொஞ்ச நேரம் தேடி**
**இருக்கலாம்,**
**என்ன அவசரம் என்று**
**கோபித்துக் கொண்டான்**
**மற்ற இருவரையும்**
**புதர் அடியில் கிடக்கும்**
**நாளை எடுத்து கொள்ளலாம் என்றான்**
**கிழவன்.**
**ஆனாலும் சமாதானம் ஆகவில்லை**
**செத்தவனின் செருப்பைத் தேடியவன்**
**இறங்கும்போது கவனித்தேன்,**
**இருவேறு நிறங்களில்**
**செருப்புகள் அணிந்து இருந்த**
**அவன் "கால்களை.**

# காக்கா முட்டையும் உத்தம வில்லனும்

- அதிஷா -

குழந்தைகளைப் பற்றிய உலகப்படங்களுக்கு ஓர் அடிப்படையான இலக்கணம் இருக்கிறது. அடையமுடியாத ஒன்றுக்காக ஏங்கும் பரம ஏழைக் குழந்தைகள் இருக்க வேண்டும். சகோதர சகோதரிகளாக இருப்பது உத்தமம். அவர்களுக்கு கட்டாயம் க்யூட்டான பாட்டியோ தாத்தாவோ இருக்கவேண்டும்.




அப்பாவும் அம்மாவும் எந்நேரமும் தங்களுடைய வருமானக் கவலைகளில் இருக்க வேண்டும். குழந்தைகள் ஆசைப்பட்டதை அடைய காசு சேர்ப்பதும், அந்த காசு ஏதோ ஒருவகையில் காணாமல் தொலைந்து திருடு போவதும் நடக்கும். பணக்காரர்கள் தங்களுடைய பேராசைக்காக குழந்தைகளை ஏமாற்றுவார்கள். சில சிக்கல்களுக்குப் பிறகு கடைசியில் அந்தக் குழந்தைகளுக்கு ஆசைப்பட்டது கிடைக்கும்போது த்தா இவ்ளோதானா ச்சே என்று அதை புறக்கணிக்க வேண்டும். இதற்கு சில்ரன் ஓ·ப் ஹெவன், வே ஹோம், சார்லி அன் சொக்லேட் ·பக்டரி, ஸ்லம்டோக் மில்லியனர், அயயம் தொடங்கி எண்ணற்ற உதாரணங்களை காட்டலாம்! தமிழிலேயே நிறைய குறும்படங்களும் எடுக்கப்பட்டிருக்கிறது. பண்ணையாரும் பத்மினியும் இயக்குநர் அருண்குமாரின் "5ருப்பீஸ்" நல்ல உதாரணம். காக்கா முட்டை அந்த இலக்கணத்தில் கச்சிதமாக அமர்கிறது. ஆனால் இது அப்படங்களின் கொப்பியல்ல, தாக்கம் என்று வேண்டுமானால் சொல்லலாம்.


சில ஆண்டுகளுக்கு முன்னால் வெளியான மெரினா படத்தோடு காக்காமுட்டையை ஒப்பிடலாம். இரண்டுமே விளிம்பு நிலை குழந்தைகளின் வாழ்வை ஆவணமாக்கும் திரைப்படங்கள். இரண்டு படங்களுமே தமிழ்சினிமாவின் மிகச்சில வணிக சமரசங்களுக்கும் உட்பட்டு எடுக்கப்பட்டவை. ஆனால் காக்காமுட்டையை மெரினாவை விடவும் பல விஷயங்களில் மிகச்சிறந்த படமாக கருதலாம். குறிப்பாக படத்தின் திரைக்கதையும் அதன் நோக்கமும்! மெரினாவின் திரைக்கதை எந்த நோக்கங்களும் இல்லாமல் ஆவணப்படம் போல இஷ்டம்போல் அலைபாயும். கடைசியில் அய்யயோ கருத்து சொல்ல வேண்டுமே என்கிற மெனக்கெடல் அப்பட்டமாக தெரியும். இப்படத்தில் அப்படிப்பட்ட மெனக்கெடல்களில்லை இயல்பாகவே படம் சொல்ல விரும்புகிற கருத்து அல்லது கருத்துகள் தானாகவே மலர்ந்த படியிருக்கிறது! படம் பார்ப்பவர் அவரவர் பொது அறிவுக்கேற்றபடி கருத்துகளை புரிந்துகொள்கின்றனர்.

நண்பர் ஒருவர் இப்படத்தின் ப்ரிவியூ பார்த்துவிட்டு மிகுந்த உற்சாகமாகி சார் படத்துல தோசைய காட்டும்போது ஈ மொய்க்குது, குடிசைல ஈ மொய்க்குது, பீட்சாவ காட்டும்போதும் ஈ மொய்க்குது இது என்ன குறியீடு சார் என்று ஏதோ கேட்டிருப்பார் போல. இயக்குநர் அதெல்லாம் ஒன்னுமில்லைங்க நிஜமாவே ஈ மொய்ச்சிருக்கு போல என்றிருக்கிறார்.

காக்காமுட்டை படம் பார்த்தவர்களில் 90சதவீதம் பேர் காக்கா முட்டையை ருசித்திருக்க மாட்டார்கள். காக்கா முட்டையை மரம் ஏறி எடுப்பது அவ்வளவு சுலபமும் இல்லை. ரிஸ்க் எடுத்து சாப்பிடுகிற அளவுக்கு அது அத்தனை சுவையாகவும் இருக்காது. கொஞ்சம் சன்னமான கசப்பும் கொழகொழப்பு மாக மோசமான வாசனையோடு இருக்கும். ஒரே ஒருமுறை சிறுவனாக இருக்கும்போது பச்சையாக குடித்திருக்கிறேன். காக்காமுட்டையை சாப்பிட்டு விட்டு அந்த ஓட்டை கொண்டு போய் புதைத்துவிட்டால் தாய்க்காக்கா நம்மை பழிவாங்க துரத்தாது என்று மூடநம்பிக்கையும் உண்டு.

**இனி,**
**உத்தமவில்லன்.**

ஆங்கில டிவி தொடர் "BREAKING BAD". கான்சர் நோயால் பாதிக்கப்பட்ட ஒரு கெமிஸ்ட்ரி வாத்தியார் தன்னுடைய கடைசி நாட்களை எண்ணிக்கொண்டிருக்கிற சோகக்கதை. மிடில் கிளாஸ் அப்பாவியாக வாழும் வோல்டர் வொயிட் தனக்கு கான்சர் இருப்பது தெரிந்ததும் துடித்துப்போகிறார்.



சாவதற்கு முன்பாக கடனில் தவிக்கும் தன்னுடைய குடும்பத்திற்கு தேவையான பணத்தை சம்பாதிக்க முடிவெடுத்து தன்னுடைய நல்லவிதமான வாழ்க்கையிலிருந்து தடம்மாறி போதைமருந்து தயாரித்து விற்க முடிவெடுக்கிறார்! கொலைகள் கூட செய்கிறார். எதற்கும் அஞ்சாத ரவுடியாக மாற நினைக்கிறார்.

இப்படி ஒரு மிக நல்லவன் மிக கெட்டவனாவதால் நடக்கிற கூத்துகள்தான் மொத்த தொடருமே! 2008ஆம் ஆண்டு தொடங்கி ஐந்தாண்டுகளாக தொடர்ந்து ஓட்டமாக ஓடி ஐந்து சீசன்கள் முடிந்துவிட்டது! பல இலட்சம் பார்வையாளர் நூற்றுக்கணக்கான விருதுகள் என பல்வேறு நாடுகளிலும் சக்கை போடு போடுகிறது இந்தத் தொடர்.

இத்தொடருக்கும் உத்தம வில்லனுக்கும் நிறையவே தொடர்புகள் இருக்கிறது. கமல் நிச்சயம் கொப்பியெல்லாம் அடிக்கவில்லை. ஆனால் உத்தம வில்லன் கதையை எழுதியபோது இத்தொடரின் பாதிப்பு நிச்சயம் அவருக்கு இருந்திருக்கும் என்று நம்புகிறேன்.

உத்தமவில்லனில் நாயகனாக வரும் மனோரஞ்சன் அடிப்படையில் மிகவும் மோசமானவன். குடிகாரன். நிறைய பணமும் புகழும் கொண்ட மருத்துவரையும் விடாத காமுகன். தெரிந்தே பணத்துக்காக மோசமான குப்பைப் படங்களில் நடிப்பவன். வாழ்க்கையில் ஒருபெண்ணுக்கு துரோகமிழைத்தவன். அவனுக்கு மூளையில் கட்டி வந்து தன் இறுதி நாட்களை எண்ணுகிறான். தன்னுடைய தீமைகளிலிருந்து விடுபட நினைக்கிறான். கெட்டவன் நல்லவனாகிறான். தன்னிடம் இல்லாத நிம்மதியையும் தன் சாவுக்கு பிறகான வாழ்க்கையையும் தேடத்துவங்குகிறான். கெட்டவன் நல்லவனாவதால் உண்டாகும் கூத்துகள் திரைப்படத்தின் கதையாக மாறுகிறது.

ப்ரேக்கிங் பாடில் மரணத்திற்கு பிறகு நமக்கு தேவைப்படுகிற பணத்தை தேடி நாயகன் பயணிக்கிறான். அதுபோல உத்தம வில்லனின் மனோரஞ்சன் மரணத்திற்கு பிறகான தன்னுடைய வாழ்வையும் அமைதியையும் தேடிச் செல்கிறான்.

இரண்டு படைப்புகளுக்குமான மையச்சரடு மரணத்திற்கு பிறகான ஜீவிதம்தான். அதுபோலவே நாயகன் தன்னுடைய கான்சரை மிகசிலருக்கு மட்டுமே சொல்வது, அதைத் தன் குடும்பத்தினரிடம் மறைப்பது, அதனால் உண்டாகும் எதிர்வினைகள் என பல ஒற்றுமைகளும் உண்டு. சில மாதங்களுக்கு முன் கமலஹாசன் ஒரு பத்திரிகையின் கேள்விபதில் பகுதியில் "சமீபத்தில் நீங்கள் பார்த்த உலக சினிமாக்களில் பிடித்தது எவை" என்கிற வாசகரின் கேள்விக்கு, பேர்ட் மான் மற்றும் ப்ரேக்கிங் பாட் என்று குறிப்பிட்டிருந்தார். பேர்ட்மானும் உத்தமவில்லனுக்கும் கூட ஆழமான சில ஒற்றுமைகள் உண்டு.

# பிள்ளைகள் விடுமுறையென்றால் முற்கூட்டியே அனுமதி பெறவேண்டும்

## முன்னாள் உதவிக் கல்விப்பணிப்பாளரின் ஆலோசனை

பிள்ளைகள் பாடசாலைக்குச் சமுகமளிக்கவில்லையென்றால் அது தொடர்பில் ஒரு மணித்தியாலத்திற்கு முன்னர் பெற்றோர்கள் பாடசாலைக்கு அறிவிக்க வேண்டும் எனவும் இதனை விரைவில் நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் பொ.அருணகிரிநாதர் தெரிவித்தார்.

தமிழ் சிவில் சமூகத்தின் கலநதுரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போது, அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில். பாடசாலைகள் ஆரம்பிக்கும் நேரத்திலும் பாடசாலை முடிவடையும் நேரத்திலும் கனரக வாகனங்கள் பாடசாலைக்கு அருகில் செல்வதை பொலிஸார் தடுக்க வேண்டும் என்றும் காலையில் பேருந்து தரிப்பிடங்களில் மதுபானப் போத்தல்கள், பியர் ரின்கள் அதிகளவில் காணப்படுகின்றன. இரவில் பொது இடங்களில் இருந்து மதுபானம் அருந்துபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

தரிப்பிடங்கள் தவிர்ந்த வேறு இடங்களில் அநாவசியமாக வாகனங்கள் தரித்து நிற்பதை பொலிஸார் கண்காணிக்க வேண்டும் என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த சிறுவர் நன்நடத்தை அதிகாரியொருவர் உரையாற்றும் போது,

யாழ். மாவட்டத்தில் போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளது. பாடசாலைகளில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்று நாங்கள் விசாரிக்கச் சென்றால் ஒரு கட்டத்துக்கு மேல் பொலிஸாரை அழைக்க வேண்டிய நிலை ஏற்படும். இருந்தும் அதற்கு பாடசாலை அதிபர்கள் விரும்பவில்லை.

பாடசாலைக்கு அருகில் பாக்குகள் விற்பனை செய்யப்படுகின்றன. 21 வயதிற்கு குறைந்தவர்களுக்கு பாக்குகளை விற்பனை செய்வதில்லையெனக் கூறிவிட்டு பாக்குகள் விற்பனை செய்யப்படுகின்றது. இதனைத் தடுக்க பொலிஸார் அதிரடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

# புகைப்பொருள் விற்பனை அறுவருக்கு அபராதம்

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை சுகாதார வைத்தியதிகாரி பணிமனைக் குட்பட்ட பகுதிகளில் புகையிலை மற்றும் மதுசார திருத்தச் சடடத்தை மீறி புகைத்தல் பொருட்கள் விற்பனை செய்த ஆறு வியாபாரிகளுக்கு 12,000 ரூபா அபராதம் விதித்த மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதவான் கறுப்பையா ஜீவராணி, மன்றுக்குச் சமுகமளிக்காத 4 வியாபாரிகளுக்கு பிடியாணை பிறப்பித்தும் உத்தரவிட்டார்.

எந்தவொரு புகைத்தல் பொருளிலும் 80 வீதமான சுகாதார எச்சரிக்கைப் படம் பொறிக்க வேண்டும் என்ற புகையிலை மற்றும் மதுசார திருத்தச் சட்டத்தை பின்பற்றாது வியாபாரம் செய்த அளவெட்டி, மல்லாகம், தெல்லிப்பளை ஆகிய இடங்களைச் சேர்ந்த 10 வியாபாரிகள் கடந்த செவ்வாய்க்கிழமை சுகாதாரப் பிரிவினரால் கைது செய்யப் பட்டனர்.

இவர்களுக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதுடன், வழக்கை விசாரித்த நீதவான் சுருட்டு விற்பனையாளர்கள் இருவருக்கு தலா 3,000 ரூபாவும், வெற்றிலையுடன் புகையிலை சேர்த்து விற்பனை செய்த நால்வருக்கு தலா 1,500 ரூபாயும் அபராதம் விதித்தார்.

பீடி, சுருட்டு, வெற்றிலையுடன் புகையிலை விற்பனை செய்த குற்றச்சாட்டில் பிடிபட்ட 4 வியாபாரிகள் மன்றுக்குச் சமுகமளிக்காத நிலையில் அவர்களுக்கு பிடியாணை பிறப்பித்து உத்தரவிட்டார்.

# இன்புளுவன்சா நோய்த்தாக்கம் அதிகரிப்பு அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை

## பொதுவைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளர் தெரிவிப்பு

(வவுனியா)

வவுனியா பொது வைத்தியசாலையில் இன்புளுவன்சா நோய்த் தாக்கத்திற்கு உள்ளானவர்கள் அதிகமாக காணப்படுவதனால் நோயாளர்களை பார்வையிட வருவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு வவுனியா பொது வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி சுதர்சினி விக்னேஸ்வரன் தெரிவித்தார்.



இன்புளுவன்சா நோய்த் தாக்கத்திற்கு உள்ளானவர்கள் அதிகரித்து வரும் நிலையில் இது தொடர்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இன்புளுவன்சா ஏ.எச்1.என்1 எனற தடிமன் காய்ச்சலுடன் கூடிய வருத்தம் தற்போது வவுனியா மற்றும் முல்லைத்தீவில் மிக வேகமாக பரவி வருகின்றது.

யூன் மாதம் முதலாம் திகதி தொடக்கம் இதுவரை 30 பேரை நாம் இந் நோய்க்கான அறிகுறியாளர்களாக அடையாளப்படுத்தி அதற்கான மருந்து வகையை கொழும்பிலிருந்து பெற்று அவர்களுக்கு வழங்கி காப்பாற்றி வருகின்றோம்.

இந் நிலையில் நாம் அடையாளப்படுத்தியுள்ள 30 பேரில் 12 பேர் கர்ப்பிணி பெண்களாக உள்ளார்கள். ஏனெனில் இந்த இன்புளுவன்சா நோய் அதிகமாக கர்ப்பிணிப் பெண்கள், இரண்டு வயதுக்கு குறைந்த குழந்தைகள், 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் அத்துடன் அவர்களுக்கு வேறு வருத்தங்களும் இருக்குமாயின் தாக்கக் கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றன.

சுகாதார அமைச்சின் சுற்று நிருபத்தின் பிரகாரம் எந்த கர்ப்பிணி தாய்மாரும் ஒரு நாள் காய்ச்சல் மற்றும் தடிமனாக இருந்தாலும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு வைத்தியர்களிடம் தமது நோயைக் கூறி மருந்தை பெற வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வவுனியா பொது வைத்தியசாலையில் அடையாளம் காணப்பட்ட நோயாளர்களில அதிகமானவர்கள் முல்லைத்தீவை சேர்ந்தவர்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# கல்விக் கண்காட்சி

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஆசிரிய மாணவர் மன்றம் முன்னெடுத்த கல்விக் கண்காட்சி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகியது.

ஆரம்ப மற்றும் இடைநிலை வகுப்புக்களுக்குரிய கற்றல் வளங்களாகப் பயன்படுத்தக் கூடிய இருநூறுக்கும் மேற்பட்ட உபகரணங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கோப்பாய மகா வித்தியாலய அதிபர் த.ஞானப்பிரகாசம் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி,பீடாதிபதி ச.அமிரதலிங்கம் கலாசாலையின் முன்னாள் அதிபர் வீ.கே. கணபதிப்பிள்ளை உள்ளிட்டோர் காட்சிக் கூடங்களைத் திறந்து வைத்தனர்.

தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர்களான துரை. இளங்குமரன், கலாநிதி சி.பத்மராஜா, சி.குகன், பப்சி மரியதாசன் மற்றும் கலாசாலையின் முன்னாள அதிபர் வே.கா. கணபதிப்பிள்ளை முன்னாள் உதவிக கல்விப் பணிபபாளர் நா.சுவாமிநாதன் ஆகியோர் காட்சிக் கூடங்களை மதிப்பீடு செய்தனர். சிறந்த உபகரணங்களுக்குப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

## வெடி மருந்துகளுடன் குடும்பப்பெண் கைது

சக்திவாய்ந்த 12 கிலோ டைனமற் வெடி மருந்துடன் இளம் குடும்பப் பெண்ணொருவர யாழ். பொலிஸாரினால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

தண்ணீர்த்தாங்கி வீதி குருநகரைச் சேர்ந்த 42 வயதுடைய குடும்பப் பெண்ணொருவரே 12 கிலோ 800 கிராம் நிறை கொண்ட டைனமற் வெடிமருந்து வைத்திருந்ததன் பேரில் கைது செய்யப்பட்டதுடன் வெடிமருந்துகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ)

# மல்லாகத்தில் குழு மோதல் மோட்டார் சைக்கிள் எரிந்து நாசம்



இரு இளைஞர் குழுக்களுக்கு இடையே நீண்ட நாட்களாக நிலவிய பகைமையால் சுமார் இரண்டரை இலட்சம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் ஒன்று தீயிட்டுக் கொழுத்தப் பட்டுள்ளது. இதையடுத்து குழு மோதல் ஒன்று ஏற்படவிருந்த நிலையில் தெல்லிப்பளைப் பொலிஸாரின் உடனடி நடவடிக் கையால் தவிர்க்கப்பட்டது. யாழ்ப்பாணம் மல்லாகத்தில் கடந்த வியாழக்கிழமை இரவு 9 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:

மல்லாகம் - ஏழாலையில் இரு இளைஞர் குழுக்களிடையே நீண்ட காலமாக வாள்வெட்டு, மோதல் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. இந்நிலையில் அண்மைக் காலங்களாக யாழ்ப்பாணத்தில் இடம பெறும் சம்பவங்களால் இரு குழுககளும் அமைதி காத்து வந்தன. இந்நிலையில் கடந்த வியாழக்கிழமை தங்கள் பகுதியின் ஊடாக சென்ற பகைமை இளைஞர் குழுவைச் சேர்ந்த இருவர் மோடடார் சைக்கிளில் செல்வதைக் கண்ட அப்பகுதி இளைஞர் குழு அவர்களை வாள்கள், பொல்லுகள் என ஆயுதங்களுடன் மோட்டார் சைக்கிள்களில் துரத்திச் சென்றது. தப்பி ஓடிய குழுவினர் ஒழுங்கை ஒன்றுக்குள் ஓடிய நிலையில் அந்த ஒழுங்கை வீடு ஒன்றுடன் முடிவடைந்த நிலையில தப்ப வழியின்றி மோட்டார் சைக்கிளை அவ்விடத்திலேயே விட்டு தப்பிச் சென்றது. இதையடுத்து துரத்தி வந்த குழுவினர் மோட்டார் சைக்கிளுக்குத் தீ வைத்தது. இதில் சுமார் இரண்டரை இலட்சம ரூபா பெறுமதியான மோட்டார் சைககிள் முற்றாக எரிந்து நாசமானது. சம்பவம் தொடர்பில் அறிந்து அப்பகுதிக்கு தெல்லிப்பழை பொலிஸார் சென்ற நிலையில் குறித்த குழுவினர் தப்பிச் சென்றனர். எனினும் வீடு ஒன்றுக்குள் பதுங்கிய இருவரை பொலிஸார் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்கள் மயிலணிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

| மேடம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் |
| --- | --- | --- | --- | --- |
| சகபாடிகளுடன் உறவினைத் துண்டித்து விட்டு கல்வியில் கவனம் செலுத்துதல் | தம்பதியரிடையே பிள்ளைகள் முன்னிட்டு வாக்குவாதம் ஏற்படல் | கௌரவப்பதவி ஏற்பட்டாலும் நோயினால் கைவிட்டுவிடல் | மக்களின் நடத்தைக் கோலங்களை எண்ணி அச்சப்படல் | கொடுக்கல் வாங்குதலை முன்னிட்டு மாமனுடன் பிரச்சினைப் படல் |

## முரசின் இன்றைய பலன்

(21.06.2015 ஞாயிற்றுக்கிழமை

மன்மத வருஷம் ஆனி மாதம் 6 ஆம் திகதி.
பஞ்சமி-திதி / சித்தம் - யோகம். கரிநாள்
ஆயிலிய நட்சத்திரம் மு.ப.- 11.53 வரை பின் மகம்
இராகுகாலம் 4.24 - 5.54 வரை சுப நேரம் 8.54 - 10.24 வரை



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| மீனம் | கன்னி |
| --- | --- |
| முரண்பாடு முற்றியவேளை விட்டுக் கொடுப்பதினால் பிரளயம் மறைதல் | பணவரவுகளில் ஏற்ற இறக்கமான நிலைப்பாடு தக்க வைத்தல். |

| கும்பம் | மகரம் | தனுசு | விருச்சிகம் | துலாம் |
| --- | --- | --- | --- | --- |
| சத்திர சிகிச்சைக்கு நாட் குறித்தும் அச்சத்தினால் பிற்போடல் | தேங்கியவற்றை விற்பனை செய்ய நண்பர்களுடன் கலந்துரையாடுதல் | மனையாளின் நோய் குணமடைய தெய்வத்தலத்தை நாட முற்படல் | ஏழரைச்சனி இருப்பதினால் புதிய முயற்சியில் கால்பதிக்க விரும்பாமை | உரிய வேளை மனைக்குத் திரும்பியதால் திருடரின் முயற்சி பலிக்காது விடல் |

# மீளப் புனரமைக்கப்படும் முத்தையன் கட்டுக்குளம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட முத்தையன்கட்டு குளத்தின் கட்டுமான வேலைகள், 600 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, மேற்படி திட்டத்தின் சமூக பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்ட கள இணைப்பாளர் வி.ரவி, நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், உலக வங்கியின் நிதி உதவியுடன் இலங்கை அரசாங்கத்தால் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் கீழுள்ள அணைப் பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கல் திட்டமிடல் கருத்திட்டத்தின் கீழ் இக் குளத்தின் கட்டுமான வேலைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

முத்தையன்கட்டு குளமானது பல்வேறு குறைபாடுகளுடன் காணப்படுகின்றது. இதனை நிவர்த்தி செய்து தருமாறு பல்வேறு தரப்பினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் இந்தத் திட்டத்தின் மூலம் குள அணையின் பாதுகாப்பை அதிகரித்து, சிறந்த குளமொன்று விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

முத்தையன்கட்டுக் குளம் 1966 ஆம் ஆண்டில் மீள கட்டமைக்கப்பட்ட குடியேற்றத்திட்ட குளமாகும். இதில் 4,150 ஏக்கர் நிலப்பரப்பிற்கு பரவல் நீர்ப்பாசனம் மூலமாகவும் மேலதிகமாக 1,962 ஏக்கர் நிலப்பரப்புக்கு ஏற்று நீர்ப்பாசனம் மூலமும் நீர் பாய்ச்சப்படுகின்றது.

இக்குடியேற்றத்திட்டமானது முழுவதும் உப உணவு செய்கைக்காக வடிவமைக்கப்பட்டது. ஏறத்தாழ 50 வருடங்களின் பின்னர் குளக்கட்டும் அதனுடன் இணைந்த துருசுகள், குள கட்டுப்பாதைகள், பாலம், கலிங்குபாதை என்பன மேம்படுத்தப்படுவதுடன் கலிங்கு 2 அடி உயர்த்தப்படவும், இரு வான் கதவுகளிற்கு மேலதிகமாக இரு வான் கதவுகள் பொருத்தப்படவும் திட்டத்தினால் நிதியுதவியளிக்கப்படுவதுடன் இதற்காக அணைப் பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கல் திட்டமிடல் கருத்திட்டத்தினால் 600 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மேலதிகமாக 2000 ஏக்கர் நீர்ப்பாசனம் செய்யக்கூடியளவு நீர் தேக்கப்படமுடியும். என்றும் கட்டுமான வேலைகள் ஒன்றரை வருடங்களுக்குள் முடிவடையும் எனவும் அவர் தெரிவித்தார்.

# முறைதவறிய இளைஞர்களை முன்னிலைப்படுத்த உத்தரவு

(யாழ்ப்பாணம்)

வதிரி சந்தியில் நின்று பாடசாலை, தனியார் கல்வி நிலைய மாணவிகள், மற்றும் இளம் பெண்களுடன் சேட்டை விடும் "மின்னல்" இளைஞர் குழுவினரை உடனடியாகக் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி மா.கணேசராசா பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். வதிரி சந்திக்கு அண்மையாக உள்ள பூங்காவில் தினமும் காலை 7 மணி முதல் 7.30 மணி வரையும், பிற்பகல் 3.00 - 3.30 மணி வரையும் மாலை 5.30 மணியளவிலும் ஒன்றுகூடும் இந்த இளைஞர்கள் குழு பாடசாலை, தனியார் கல்வி நிலைய மாணவிகளுடன் சேட்டை விட்டு வந்தனர்.

இவர்களால் பொது மக்களும் பல அசௌகரியங்களை சந்தித்தனர். இந்நிலையில் பொது அமைப்புகளும், பொது மக்களும் நீதிமன்றுக்கு அளித்த முறைப்பாடு, புகைப்பட ஆதாரங்களின் அடிப்படைகளிலேயே நீதிபதி மா.கணேசராசா நேற்றுமுன்தினம் உத்தரவை பருத்தித்துறை, நெல்லியடிப் பொலிஸாருக்கு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குடாநாட்டு உப உணவுப் பொருட்களுக்கு நிர்ணய விலை வேண்டும்

## அச்சுவேலி விவசாயிகள் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் உற்பத்தியாகும் உப உணவுப்பயிர்களுக்கு நிர்ணய விலையை அமுல்படுத்தி உற்பத்தியாளர்களை பாதுகாத்து ஊக்குவிக்க முடியும் என அச்சுவேலி பகுதி விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

குறித்த உற்பத்திக்காக செலவிட்ட பணத்தைக் கூட இந்த உற்பத்திகளை சந்தையில் விற்று பெறமுடியாத நிலைமைகளை எதிர்கொள்வதாகவும் விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனால் விளைந்த உற்பத்திகளை அறுவடை செய்யாமல் அப்படியே நிலத்துடன் கைவிடும நிலைமை ஏற்படுவதையும் விவசாயிகள் தெரிவித்திருக்கின்றனர்.

எமது உற்பத்திகளின் கொள்வனவு விற்பனைக்காக சட்டரீதியாக பல கூட்டுறவு அமைப்புக்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

அவை குறித்த விலையை நிர்ணயித்து எம்மிடம் உப உணவுப்பயிர்களை கொள்வனவு செய்ய முடியுமென அச்சுவேலி தெற்கு விவசாயிகள் தெற்கு சம்மேளனத்தின் பிரதிநிதியொருவர் தெரிவித்தார்.

பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கம் போன்ற அமைப்புக்களுக்கு கொள்வனவு அனுமதிகளை அதிகாரிகள் வழங்கி எமது உற்பத்தி நடவடிக்கைகளை மேம்படுத்தமுடியும்.

ஆனால் இதில் தொடர்புபடும் அதிகாரிகள் ஏன் அக்கறையின்றி இருக்கிறார்கள் என்பதை புரிந்து கொள்ள முடியாமல் இருப்பதாக அவர் குறிப்பிட்டார். எமது உற்பத்திகளுக்காக கிடைக்கின்ற விலைக்கு இவற்றை நுகர்வோர் வாஙகுவற்காக கொடுககின்ற விலைக்கும் இடையே பாரிய இடைவெளிகள் காணபபடுகின்றன.

இந்த விலை ஏற்ற இறக்கத்தை முடிந்த அளவுக்கு குறைபபதன் மூலம் விவசாயியும் கூடவே நுகர்வோரையும் பாதுகாக்க முடிவதுடன் பொருட்களின் சந்தைப்படுத்தல் என்பது எவ்வித பாதுகாப்புமற்ற ஒரு சூழலையே எதிர்கொண்டுள்ளதால் விவசாயத் திணைக்களத்தின் வடபகுதிக்கு பொறுப்பான அதிகாரிகள் இவ்விடயத்தில் கூடிய கவனமெடுக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

# மாலுசந்தியில் மடிக்கணனி திருட்டு காலம் கடந்து வந்தது தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

தொழில் நுட்ப உபகரணங்களை திருடிய இரு நபர்களுக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் மா.கணேசராஜா ஒரு ஆண்டு கடூழியச்சிறைத் தண்டனையும் 5 ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தார்.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் நெல்லியடி மாலுசந்தியில் கணேசரத்தினம் என்பவரின் வீட்டிலிருந்து மடிக்கணணி, தொலைபேசி உட்பட ஒரு இலட்சத்து 25,000 ரூபா பெறுமதியான தொழிற்நுட்ப சாதனங்கள் திருடப்பட்டிருந்தன.

இச்சம்பவத்தை அடுத்து சந்தேகத்தின் பேரில், அதே இடத்தைச் சேர்ந்த ஸ்ரீரஞ்சினி ஸ்ரீபிரதீபன் ஆகியோர் சந்தேகத்தின் பேரில் நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் இந்த வழங்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே மேற்படி தீர்ப்பை மாவட்ட நீதவான் மா.கணேசராஜா வழங்கியிருந்தார்.

இத்தீர்ப்பையடுத்து மீட்கப்பட்ட உபகரணங்களை உரியவர்களிடம் ஒப்படைக்குமாறும் நீதவான் உத்தரவிட்டார். (18)

# குரு பூசை தினநிகழ்வு

ஸ்ரீமத் கணேசானந்த மகாதேவ சுவாமிகளின் 25 ஆவது ஆண்டு குருபூசை நிகழ்வுகள் இன்று மு.ப. 10 மணிக்கு கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமத்தின் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆச்சிரம அறங்காவலர் சபை உறுப்பினர் ஆ.சிவநாதன் தலைமையில் நடைபெறும் இக்குரு பூசை நிகழ்வில் சணேசானந்த சுவாமிகளை கௌரவிக்கும் நிகழ்வும் அதனைத் தொடர்ந்து ஆச்சிரமத்திற்கான புதிய இணைத்தளம் ஒன்றும் ஆரம பித்து வைக்கப்படவுள்ளது. கிளிநொச்சி வாழ் சிறார்களுக்கு அன்பளிப்புக்கள் வழங்கும் நிகழ்வுடன் விழா நிறைவுபெறவுள்ளது.

# பதிவிறக்கப் பெட்டகம்

நண்பனுடன் கோவிலுக்குச் சென்றான் ரகு. கோவிலுக்குச் செல்லும் பாதையில் 5 ரூபாய் நாணயம் கீழே கிடந்தது. அதை எடுத்து கோவில் உண்டியலில் போட்டான்.

"ஏன் உண்டியலில் காசைப் போட்டாய்?" என்று கேட்டான் நண்பன்.

"கோவிலுக்குப் போகும்போது கிடைத்த காசு. அது கோவிலுக்கே சொந்தம்" என்றான் ரகு.

இரண்டு நாள் கழித்துக் கோவிலுக்குப் போகும்போது அதே பாதையில் 100 ரூபாய் நோட்டு ஒன்று கிடந்தது. அதை எடுத்துச் சட்டைப் பையில் வைத்துக் கொண்டான் ரகு.

"கோவிலுக்குப் போகும் பாதையில் கிடந்த பணத்தை ஏன் உண்டியலில் போடவில்லை?" என்று நண்பன் கேட்டான்.

"அன்று நான் நேர்மையாக ஐந்து ரூபாயை உண்டியலில் போட்டதற்கு கடவுள் கொடுத்த பரிசு இந்த நூறு ரூபாய்" என்றான் ரகு.

*** *** *** ***

அந்த நிறுவனத்தில் நிர்வாக அதிகாரி வேலைக்காக நேர்முகப்பரீட்சை நடந்து கொண்டிருந்தது. வேலைக்குத் தேவையான ஆட்களை விட நிறையப் பேர் நேர்முகப்பரீட்சைக்கு வந்திருந்ததால், சம்பந்தா சம்பந்தமில்லாமல் கேள்வி கேட்டு, பலரைத் திருப்பி அனுப்பிக் கொண்டிருந்தனர்.

ரமேஷ் முறை வந்தது. இன்ரவியூ அதிகாரி, "மகாபாரதப் போர் எத்தனை நாள் நடந்தது?" என்று கேட்டார்.

ரமேஷ் கொஞ்சம் கூட யோசிக்காமல், "பாரதப் போர் முடியும் வரை சேர்" என்றான்.

"எத்தனை நாள் நடந்தது என்று எனக்கே தெரியாது. உனக்குத் தெரியாவிட்டாலும், நிலைமையைச் சமாளிக்க சட்டென்று பதில் சொன்னாய். யூ ஆர் செலக்டட்" என்றார் அதிகாரி.

*** *** *** ***

மறைந்த எழுத்தாளர் குஷ்வந்த் சிங் 'மோகத்தை வெல்லும் வழி' என்ற தலைப்பில் எழுதியிருப்பது இது:

'தியானம் மற்றும் மிகச் சக்தி வாய்ந்த, 'ஓம்' எனும் மந்திரத்தை ஜெபிப்பதன் மூலம், குண்டலினி சக்தியை எழுப்பி, மோக உணர்ச்சியை அடக்க முடியும்...' என்கிறார், மிஸ் அலைஸ் கிருஸ்டன் என்ற ஆங்கில பெண்மணி.

வழக்கமாக சில பிரம்மச்சரிய பயிற்சிகளைச் செய்வதன் மூலமும், சிற்றுண்டி வேளையில் ஐந்து நிமிடம், மோக உணர்வை அடக்குவதன் மூலமும், மிஸ் அலைஸ் சொல்கிற மாதிரி எல்லாம் மோகத்தை அடக்கிவிட முடியும் என்று தோன்றவில்லை.

காமத்தை வெல்வதற்கு இரண்டு வழிகள் தான் உள்ளன. ஒன்று: யோகிகள் சொல்லும் வழி; மற்றது, என் வழி. பத்மாசனமிட்டு, மூக்கையும், மனச் சலனங்களையும் அடக்க விரும்புவோர் உடனே யாராவது ஒரு சாமியாரைப் பாருங்கள் இல்லை என் வழிக்கு வருவதென்றால், நான் சொல்வதை கேளுங்கள்...


நான் ஒன்றும் குரு அல்ல; இருந்தாலும், ஒரு மாற்று வழி சொல்கிறேன்... அது, உல்லாசமான பாதை... துன்பம் குறைவு; தமாஷ் அதிகம். அதாவது, எப்போதெல்லாம் மனதில் மோக இச்சை மேலோங்குகிறதோ, அப்போதெல்லாம், உடனே அதைத் தீர்த்து விடுங்கள். உங்கள் வயதையும், உடம்பையும் பொறுத்து, குண்டலினியை எழுப்பினால், எப்படி மோக வேட்கை அடங்குமோ, அப்படியே இதிலும் கொஞ்ச காலத்திற்கு மோகம் அடங்கும்.

மறுபடியும் அது, தன் நச்சுத் தலையை நீட்டினால், வேறென்ன... மறுபடியும் முன்போலவே செய்து, அதை மண்டையில் அடியுங்கள்!

*** *** *** ***


என்னைப் பார்ப்பதற்கு அல்லது கூட்டிக் கொண்டு போவதற்கு எமன் பல முறை வந்திருக்கிறான். வந்த எமன் மெதுவாக என் அறையின் கதவைத் திறந்து பார்ப்பான். நான் ஏதாவது வேலை செய்து கொண்டிருப்பேன். "சரி, வேலை செய்பவரைத் தொந்தரவு செய்யக் கூடாது' என்று போய்விடுவான். இப்படி அவன் பலமுறை வந்து ஏமாற்றத்தோடு சென்றிருக்கிறான்!

(நூறு ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்த அறிஞர் எம்.விஸ்வேஸ்வரய்யா சொன்னது இது).



## தினமுரசுக்கு வந்த கடிதங்கள்

தினமுரசு



# இது முழங்காவில் விவசாயிகளின் ஆதங்கம்...!

எதிர்காலத்தில் தமது விவசாய தொழிலைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு தேவையான தரைக்கீழ் நீரை பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடலாமென முழங்காவில் பிரதேச விவசாயிகள் கவலையுடன் கருத்து வெளியிட்டிருக்கிறார்கள்.

இப்போதிருந்தே பயிர்ச்செய்கைக்கான நீர் முகாமைத்துவமொன்றை இனங்காணத்தவறின் இனிவருங் காலங்களில் முழங்காவில் பகுதி வாழ் மக்கள் நன்நீருக்காக வெளியிடங்களில் உள்ள நீர் நிலைகளை எதிர்பார்த்திருக்கும் நிலை உருவாகலாம் என்றொரு கருத்தும் அப்பகுதி விவசாய அமைப்பின் பிரதிநிதிகளால் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

ஏ 32 வீதியில் மன்னாரிலிருந்து 32 ஆவது மைல்கல் தொலைவில் முழங்காவில் பிரதேசம் அமைந்திருக்கிறது. 1964 காலப் பகுதியில் சிறீமாவோ பண்டாரநாயக்கா பிரதமராக இருந்த சமயம் குடாநாட்டு விவசாயிகளுக்கான புதிய விவசாய குடியேற்றத்திட்டங்களை அறிமுகம் செய்வதன் ஒரு முயற்சியாக முழங்காவில் பகுதிக்கான குடியேற்றத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது.

ஆரம்ப நடவடிக்கையாக 1964 இல் முன்னெடுக்கப்பட்ட குடியேற்ற நடவடிக்கைகளில் தலா 5ஏக்கர் வீதம் 100 விவசாயிகளுக்கு 500 எக்கர் காணிகள் வழங்கப்பட்டன.

இதனை அடுத்து 1978 காலப் குதியில் ஆரம்பிக்கப்பட்ட படித்த வாலிபர் குழாய்க் கிணற்று திட்டத்தின் கீழ் தலா 2ஏக்கர் வீதம் 280 இளைஞர்களுக்கென 560 ஏக்கர் காணிகள் வழங்கப்பட்டிருந்தன.

ஒவ்வொரு 20ஏக்கர்களையும் உள்ளடக்கி ஒரு பிரிவாக மொத்தம் 28 பிரிவுகளாக்கப்பட்டு (block) இக் காணிகளுக்கென 28 குழாய்க் கிணறுகளிலிருந்து கனரக டீசல் இயந்திரங்கள் மூலம் நீர் விநியோகிக்கப்பட்டிருக்கிறது.

இதன் பின்னர் 1982 காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஒரு கணிப்பீட்டில் அப்போது நிர்மாணிக்கப்பட்டிருந்த சுமார் 30 குழாய்க்கிணறுகளிலிருந்து 300ஏக்கருக்கும் குறைவான காணிகளிலேயே பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இப்பிரதேசத்துக்கான நீர்வளம் பற்றிய பகுப்பாய்வில் முதலாம், இரண்டாம் தொகுதி காணிகளுக்கென அமைக்கப்பட்ட குழாய்க் கிணறுகளில் உவர்த்தன்மை இருந்தமை கண்டறிப்பட்டு இந்தக்கிணறுகளிலிருந்து மட்டுப்படுத்திய நீரை பயன்படுத்தவே அதிகாரிகள் ஆலோசனை வழங்கியிருந்தார்கள்.

போருக்குப் பிந்திய சம கால நிலமைகளில் இப்போது 870 விவசாயக் குடும்பங்கள் முழங்காவில் கிராம சேவகர் பிரிவில் பதிவாகி இருக்கின்றன. இக் குடும்பங்கள் ஒவ்வொன்றும் தமக்கென தனியான குழாய்க் கிணறுகளை அமைத்துக் கொண்டுள்ள நிலையில் முழங்காவில் பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளையும் உள்ளடக்கி சுமார் 1000 ஏக்கருக்கும் அதிகமான காணிகளில்பயிர்ச் செய்கைக்காக இந்த தரைக கீழ் நீரை இங்குள்ள விவசாயிகள் பயன் படுத்தி வருகிறார்கள்.

குடாநாட்டின் விவசாய நிலங்களைப் போன்ற செம்மண் பிரதேசமாக இது காணப்படுகின்ற போதும் பெரும்பாலான கிணறுகளில் சுமார் 80 அடி ஆழத்துக்கும் கீழேயே நீர்வளம் காணப்படுவதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

இதனால் பயிர்ச்செய்கைக்காக நீரிறைக்கும் கனரக இயந்திரங்களை கூடுதல் எரிபொருள் செலவினங்களுடன் பயன்படுத்துகின்ற போதும் போதிய நீரை பெற முடியாத நிலையில் முழங்காவில் விவசாயிகள் தமது முயற்சிகளை மேற்கொண்டு வருவதையும் இங்கே குறிப்பிட வேண்டி இருக்கிறது.

பெரும்போக மழையும் அவ்வாறே சித்திரை மழையும் குறைவாக காணப்படும் வருடங்களில் ஆனி, ஆடி மாதங்களில் தரைக்கீழ் நீர் மட்டம் மிகவும் தாழ்ந்த நிலைக்கு செல்வதால் இந்த இயந்திரங்கள் மூலமாகவும் நீரை பெற முடியாத நெருக்கடியை விவசாயிகள் எதிர் கொள்வதும் இங்கே கவனத்துக்குரியது.

பிந்திய நிலமைகளில முழங்காவில் கிழக்கு இராசபுரம் குடியிருப்பு பகுதி காணி கிணறுகளிலும் உவர்த்தன்மை கண்டறியப்பட்ட நிலையில் பாசன நிலஙகளின் அளவை தொடர்ந்து விஸ்தரிக்க முடியாத ஒரு சூழலை முழங்காவில் விவ சாயிகள் இப்போது எதிர் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில் தமது பயிர்ச் செய்கைக்காக பயன்படுத்தும் தரைக்கீழ் நீர் வளத்தை எவ்வாறாயினும் பாதுகாக்க வேண்டும் என்கிற ஒரு தேவை, நிர்ப்பந்தம் இப்பகுதி விவசாயிகளுக்கு இப்போது ஏற்பட்டிருக்கிறது.

இது குறித்து இப்பகுதியைச் சேர்ந்த பல்வேறு விவசாயிகளுடன் மேற்கொண்ட ஒரு கருத்துக்கணிப்பில் அங்கிருந்து சுமார் 8 கிலோ மீற்றர் தொலைவில் மன்னார் வீதியை ஊடறுத்து கடலுக்கு செல்லும் பாலி ஆற்று நீரை முழங்காவிலை அண்டியுள்ள குளங்களுக்கு திருப்புவதன் மூலம் தரைக்கீழ் நீர் வளத்தை பாதுகாக்கமுடியும்என்றதமது ஆலோசனையை முன்வைத்திருக்கிறார்கள்.

குறிப்பிடத்தக்க நீர்நிலைகளாக முழங்காவில் (தரவை) குளம், கதிராவில் குளம் என்பவற்றோடு அதனை அண்மித்ததாக அமைந்திருக்கும் பாரிய நீர்த்தேக்கமான கரியாலை நாகபடுவான் குளமும் இந்த பாலியாற்றின் நீரை பெறும் வாய்ப்பு கிட்டுமாயின் முழங்காவில் மேட்டுநில விவசாயிகள் மட்டுமன்றி நாகபடுவான குளத்தின் கீழ் வரும் சுமார் 2000 ஏக்கர் நெற்செய்கை நிலங்களும் போதிய நீர்ப்பாசன வசதியை பெறுவது சாத்தியமாகும் என்பதும் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

கூடவே இந்த குளத்திலிருந்து அரசின் குடிநீர் விநியோகத்திட்டத்துக்காக தெரிவாகி இருக்கும் குமு ழமுனை, நாச்சிக்குடா இரணைமாதாநகர், ஜெயபுரம், சோலை பல்லவராயன்கட்டு, ஆகிய பகுதிகளுக்கான நீர் விநியோகத்தையும் திறம்பட முன்னெடுப்பது சாத்தியமாகும் என்பதும் பிரதேச வாசிகளால் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

இதனை சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் துறைசார் நிறுவனங்களும் கவனத்திலெடுத்து உரிய காலத்தில் முழங்காவில் மேட்டுநில பயிர்ச்செய்கைக்கான நீர் வளத்தை பாதுகாக்க விரைந்து நடவடிக்கை எடுத்து உதவு மாறும் இப்பகுதி,விவசாயிகள் விநயமாக வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள்.

**சி.பாலகிருஷ்ணன்**
**(விவசாயிகள் சங்கம், முழங்காவில்)**
**தொகுப்பாக்கம்:- சாலையூரான்.**

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர்களின் வாழ்வுக்கான கூட்டமைப்பா? அல்லது வெறும் தேர்தல் கூட்டமைப்பா?



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் முன்னால் ஆயுதக் குழுக்களாகிய ஈபி.ஆர்.எல்.எவ், ரெலோ, புளொட் ஆகிய கட்சிகள் அண்மையில் கூடி எதிர் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமக்கு எத்தனை இடங்கள் ஒதுக்கப்பட வேண்டுமென ஆலோசித்ததாக 6 ஆம் திகதி உதயன் பத்திரிகையும் 8 ஆம் திகதி வலம்புரி பத்திரிகையும் செய்தி வெளியிட்டுள்ளன. தேர்தல் வந்தால் மட்டும் தமக்கு எத்தனை இடங்கள் ஒதுக்கப்பட வேண்டும் என்று தீர்மானம் போடுவதற்கு வரிந்து கட்டிக் கொண்டு புறப்படுகிற இந்த முன்னால் ஆயுதக்குழுக்கள் மற்றைய தமிழ் மக்களின் முக்கிய பிரச்சினைகளில் ஏன் தமது கவனத்தை தீவிரமாகச் செலுத்துவதில்லை என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

நான் முன்னால் ஆயுதக்குழுக்கள் எனக குறிப்பிடுவது அவர்களுக்குப் பிடிக்காது இருக்கலாம் ஆனால் அவர்களின் நடவடிக்கையே அவர்களை அப்படி அழைக்க வைக்கிறது. எப்பொழுதும் இனம் இனத் தைச் சேரும் என்பது போல் அவர்கள மட்டும் ஏன் கூடவேண்டும். அப்படி என்ன இரக சியக் கூட்டு அவர்களுக்குள் மட்டும் இருக் கிறது. தேர்தல் பற்றி ஆலோசிப்பதென்றால ஏன் தமிழரசுக் கட்சியையும் சேர்த்து ஆலோசிப்பதில்லை இக்கேள்விகளுக்கு விடை என்ன?

தமிழரசுக் கட்சி பெரிய கட்சி, அது அமைப்பு ரீதியாக வலுவான கட்சி. ஆயுத கலாசாரம் அற்ற பல்வேறு பட்ட வகையான பிரிவினரான மக்களும் ஏற்றுக் கொள்ளுகிற கட்சி என்பதை ஏற்றுக் கொண்டு, தமிழரசுக் கட்சிக்கு முதல்மைத்துவ இடம் கொடுத்து ஒதுங்கிக் கொள்கிறார்கள் எனில் அவர்கள் நடவடிக்கையை வரவேற்கலாம். அதை விடுத்து தீய நோக்கத்துடன் தனித்து இயங்கினால் அவர்களின் உள்நோக்கத்தை மக்கள் முன் கொண்டு வர வேண்டியது தவிர்க்க முடியாததாகும்.

தேர்தல் என வந்தால் பிரேமச்சந்திரனின் மூளை மிகவும் வேகமாக வேலை செய்யும் அரசியலில் தனது இருப்பை எப்படித் தக்கவைத்துக் கொள்வது. எப்படித் தனது சகோதரர்களுக்கு தேர்தலில் போட்டியிட நியமனம் பெற்று வெற்றியும் பெற்றுள்ளார். இந்த மாதிரியான தில்லுமுல்லுகளுக்காகவே திரு.பிரேமச்சந்திரன் அதிக இடம் கேட்டு அவசரப்பட்டு கூட்டம் சேர்க்கிறார்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சிக்கு மூன்று இடங்கள் தரப்படவேண்டுமென கேட்டிருக்கிறார். இது எந்தவகையில் நியாயமானது, ஈ.பி.ஆர். எல். எவ் இயக்கம், இயக்கங்களின் வரிசையின் நான்காம் இடத்தில் இருந்த இயக்கம். அது இப்பொழுது பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்துள்ளது. அப்படி உடைந்த பிரிவுகளில் ஒரு சிறிய பிரிவே பிரேமசந்திரன் தலைமையிலுள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆகும். அவர் தனது சிறிய கட்சியின் உண்மையான பலம் என்னவென்பதை தனியாக பரீட்சித்துப் பார்க்கவில்லை பார்க்க முயற்சிக்கவும் இல்லை. எப்பொழுதும் மற்றவர்களின் வண்டியிலே ஏறி பிரயாணம் செய்யவே விரும்புவார். ஏனென் றால் தனியப் பிரயாணம் செய்தால் எவ்விடயத் திற்கும், போய் சேர மாட்டார் என்பது அவருக்கு நன்கு தெரியும்.

கடந்த தேர்தலில் 9 உறப்பினரைக் கொண்ட யாழ்ப்பாண மாவட்டத்தில் ஈபி.ஆர்.எல்.எவ்வுக்கு இரண்டு இடங்கள் ஒதுக்கப்பட்டன. ஒன்றை வென்றார் மற்றதை இழந்து விட்டார். இப் பொழுது உறுப்பினர் எண்ணிக்கை 7 ஆக குறைந்துள்ள நிலையில் எந்த அடிப்படையில் தனக்கு 3 ஆசனங்கள் ஒதுக்கப்படவேண்டுமெனக் கேட்கிறார்என்பது புரியாத புதிராகவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனியானதொரு கட்சியென்றும் அதனை அரசியல் கட்சியாகப் பதிவு செய்ய வேண்டும் எனக் காலத்திற்குக் காலம் கூக்குரலிடுபவர்கள் தேர்தல் வந்தால் மட்டும் தங்கள் தனியான கட்சியென்று பங்கு கேட்பது வேடிக்கையானது. உண்மையிலே இந்தப் பங்காளிக் கட்சிகள் தமிழ் மக்களின் நலனில் அக்கறையுடையவர்களாக இருந்தால் தேர்தலில் பொதுவானதொரு வேட்பாளர் நியமனக் குழுவை நியமித்து விண்ணப்பங்களைப் பெற்று பரிசீலித்து கல்வித் தகுதி, இனவுணர்வு, தனிப்பட்ட வாழ்கையில் தூய்மை, சேவை மனப்பாங்கு, நம்பிக்கைத் தன்மை, கட்சிகளில் கடந்தகால பங்களிப்பு, தொகுதி கள் எல்லாவற்றையும் வழிசமைத்துக்கொடுபது என்று வியூகம் வகுக்கத் தொடங்கி விடுவர். இந்தச் சதியில் ரெலோவும் புளொட்டும் வழுந்து விடுவது விந்தையான விடயமாகும். ஏனென்றால் அவர்களுக்கு கிடைக்க வேண்டிய ஒவ்வொரு இடம் இயல்பாகவே கிடைத்து விடும். அதற்கு பிறேமச்சந்திரனின் முதுகில் ஏறித் தான் வேட்பாளராக வேண்டுமென்றே அவல நிலை ரெலோவுக்கும் புளொட்டுக்கும் ஏன் வேண்டும்.

இக் கட்சிகள் – தேர்தல் காலங்களில் இடதுக்கு சண்டையிடுவார்கள். இடம் கிடைத்த பின் ஆட்களைத் தேடுவார்கள். எந்தக் கட்சிக் காரன் எப்படிப்பட்டவன் என்று பார்க்காது உள்வாங்கச் சொல்வார்கள். இதையே தொடர்ந்தும் செய்து வருகிறார்கள். 1989 ஆம் ஆண்டு தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் ரெலோவுக்கு இரண்டு இடங்கள் ஒதுக்கப்பட்டன. அதில் ஒரு இடத்தில் சிறிகாந்தா நியமிக்கப்பட்டார் அடுத்த இடத்துக்கு ஆளில்லாததால் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த அலோசியசை வேட்பாளராக்கினார்கள். இத் தேர்தலில் ஈபி.ஆர்.எல்.எவ்.வுக்கு மூன்று இடங்கள் ஒதுக்கப்பட்டது. அதிலொன்றில் கம்யூனிசக் கட்சியைச் சேர்ந்த நவரத்தினத்தை வேட்பாளராக நிறுத்தினார்கள். ஆனால் அவர் இடதுசாரிக் கட்சியைச் சார்ந்தவர் போலவே நாடாளுமன்றத்தில் செயற்பட்டார். 2010 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் ரெலோ ரேமெடியஸ் வேட்பாளராக நிறுத்தியது ஆனால் அவர் சிறிது காலத்தில் குத்துக்கரணம் அடித்து அரசாங்க கட்சியில் சேர்ந்து விட்டார்.

அண்மையில் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலில் ஈ.பி.ஆர்.எல்.எவ் தமது கட்சிக்கு போராடிப் பெற்ற மூன்று இடங்களில் ஒன்றை பிரே மச்சந்திரன் தனது சொந்த சகோதரன் சர்வேஸ் வரனுக்கு வழங்கியதன் மூலம் தமிழர்கள் மத்தியிலும் குடும்ப ஆட்சிக்கலாசாரத்தை அறிமுகம் செய்துள்ளார். இன்னொரு மாவட்டத்தில் மாகாணசபைத் தேர்தலில் தமிழரசுக் கட்சி சார்பில் விண்ணப்பித்த ஒருவர் கடந்த காலத்தில் மாவட்ட கூட்றவுச் சங்கத்தில் என்பத்தைந்து இலட்சம் ரூபாய் மட்டில் ஊழல் புரிந்து பகுதித் தொகையை செலுத்தி மிகுதித் தொகையை செலுத்த வேண்டி இருந்த காரணமாக வேட்பாளர் நியமனம் மறுக்கப்பட்டது. ஆனால் அதே நபர் பின்பு ஈபி.ஆர்.எல்.எவ் கட்சி ஊடாக ஓரளவென்றாலும் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய முறையில் தெரிவு , சமூகக் குழுக்களின் நியாயமான பிரதிநிதித்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் தகுதியானவர்களை தெரிவு செய்ய வேண்டுமே தவிர கட்சிகளுக்கான பங்கு போடுதலை மட்டும் இலக்காகக் கொள்ளக் கூடாது. பேராசைப்பட்டு ஒவ்வொரு தேர்தலிலும் வேட்பாளர் எண்ணிக்கையை உயர்த்திக் கொள்வது சிலரின் வழக்கமாகி விட்டது.

இவ் வேளையில் எனக்கு தனிப்பட்ட முறையில் ஏற்பட்ட அனுபவம் ஒன்றை நினைவு கூற விரும்புகிறேன். நான் தொழில் பார்த்த கம்பனியின் ஊழியர் ஒருவர் மேலதிகாரியை அணுகி தனது சம்பளத்தை இருமடங்காக உயர்த்த வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தார். அவருக்கு அப்போது கிடைக்கிற சம்பளம் தாராளமானதாகும். இருந்தாலும் முயற்சி செய்து பார்ப்போமே என்று அடிக்கடி நச் சரித்துக் கொண்டே இருந்தார். மேலதிகாரிக்கு அவர் இப்போது பெறும சம்பளம் அவருக்கு வேறெங்கும் கிடைக் காது என்பதுவும் தெரியும். அதனால் மேல திகாரி அவரைப் பார்த்து உங்களுக்கு அவ் வளவு சம்பளம் பெறக் கூடிய சந்தைப் பெறுமதி உண்டானால் நீங்களே வேறு வேலை பார்ப்பது தான் நல்லது என்று கூறினார். இந்தச் சம்பவமானது யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாத கட்சிகளுக்கும் பொருந்தும். எனவே தாங்கள் அதிக மான இடங்களில் ஐம்பது வீதமான இடங்களில் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை இருந்தால் சம்பந்த னிடம் யாசகம் செய்யாது துணிந்து தனியாகக் களத்தில் இறங்க வேண்டியதே சகலருக்கும் நன்மையான விடயமாகும் சம்பந்தன் ஐயா பயமுறுத்துபவர்களுக்கு பணியாது உங்களுக்கு அவ்வளவு நம்பிக்கை இருந்தால், அதிக் இடங்களை வெல்லலாம் என்ற துணிவிருந்தால் அதை பரீட்சித்துப் பாருங்கள் எனக் கூறுவதே சாலச் சிறந்தது.

**மதுராந்தகன்**
**இராசவீதி, கோப்பாய்**

58.விளம்பரத்தால் ஏற்படும் நன்மை என்ன? ....................

59.பச்சையாக உண்ணக்கூடிய உணவு வகைகள் மூன்று தருக? ....................

60.ஆங்கிலேயர் எந்த நூற்றாண்டில் இலங்கையை முழுமையாக ஆண்டனர்? ....................

61.நதிக்கும் வாய்க்காலுக்குமிடையில் உள்ள வேறுபாடு என்ன? ....................

(11)சாதாரண நேரங்களை நியமநேரங்களில் தருக

62.மு.ப 9.30 .................... மணித்தியாலங்கள்

63.நள்ளிரவு 12.00 .................... மணித்தியாலங்கள்

64.பி.ப 4.00 .................... மணித்தியாலங்கள்

(12)ஒரு வகுப்பில் கல்வி கற்கும் ஐந்து மாணவர்களுள் விரும்பும் பாடங்கள் தரப்பட்டுள்ளன அதில் கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுக

கலாவுக்கு ஆங்கிலம், தமிழ், கணிதம், விருப்புக்குரியவை
இராசுவுக்கு கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி விருப்புக்குரியவை
மொகமட்டுக்கு சமூகக்கல்வி, ஆங்கிலம், தமிழ் விருப்புக்குரியவை
டேவிட்டுக்கு விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம் விருப்புக்குரியவை
சுதாவுக்கு கணிதம், விஞ்ஞானம், தமிழ் விருப்புக்குரியவை

65.தமிழ்ப்பாடத்தை விரும்பாத மாணவன் யார்? ....................

66.எத்தனை மாணவர்கள் ஆங்கிலத்தை விரும்புகின்றார்கள்? ....................

67.விஞ்ஞானம் அல்லது கணிதம் ஆகிய இரண்டில் ஒன்றையேனும் விரும்பாதவர் யார்? ....................

68.கூடுதலான மாணவர்களால் விரும்பப்படும் பாடம் எது?
....................

69.இரண்டு மாணவர்களால் மட்டும் விரும்பப்படும் பாடம் எது?
....................

### நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்


(01)1.உடைகள் (02)2.ஊண் 3.ஆவி 4.மெய், சரீரம் 5.வழங்குகிறது
(03)6.இன்பம் 7.குளிர் (04)8.அவர்கள் 9.மனிதர்கள்
10.சக்திகள் 11.துன்பங்களை (05)12.உடம்பு + வளர்க்கிறது 13.மானம் +காக்கின்றோம்
(06)14. We 15. He 16. men 17. Power (07)18.உணவு, மனிதன்
19.வளர்க்கிறது, அளிக்கிறது 20.குளிர்ப்பிரதேசம் (08)21.சிங்களவர்
22.இந்துக்கள் 23.கிறிஸ்தவர் 24.முஸ்லீம் (09)25.5 26.2
27.1 28.3 29.4 30.6 (10)31.3
32.3 33.4 34.4 35.3 36.3
(11)37.சுதந்திரதின விழா, சித்திரைப்புதுவருடம் 38.நங்கூரம்
39.கூட்டுறவு மொத்த வியாபார நிலையம் (சதொச) 40.ஆறு 41.பேதுறுதாலகாலமலை
42.37.00 43.17.00 44.54.00 45.27.00 46.4.50
47.26.50 48.240m 49.மயில்கள் - 50 முயல்கள் - 25 50.344
51:96 52.687,763,935,1127 53.பெப்ரவரி, ஏப்ரல்
54.440 55.ஆயிரத்து நூற்றியிருபத்தேழு (14)56.சரி 57.சரி
58.பிழை 59.சரி (15)60.3 61.4 (16)62.2
63.1 64.2 65.3

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



## தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை முன்னோடி - 2015

பகுதி - I
1 மணி 15 நிமிடம்



# கல்வி முரசு

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

(01)பின்வரும் தகவலை வாசித்து 01 முதல் 11 வரையிலான வினாக்களுக்கு விடை தருக

கடந்து சென்ற மே மாதத்தில் 1947 ஆம் ஆண்டிற்குப் பின்னர் 56ஆண்டுகால இடைவெளியில் இரத்தினபுரி, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் உள்ள அதிகமான மக்கள் தங்கள் வாழ்நாளில் மறக்க முடியாத துன்பியல் நிகழ்வான மிகப்பெரிய இயற்கை அனர்த்தத்தை எதிர்கொண்டனர்.

இவ்வனர்த்தம் காரணமாக ஏறத்தாழ ஐநூறுபேர் வரையில் இறந்ததுடன் ஆயிரக்கணக்கானோர் காயங்களுக்குள்ளாகினர் இவர்களில் 60 விகிதமான மக்கள் - இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள அப்பயுரபல்லவ கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது அத்துடன் பத்து இலட்சத்திற்கு மேற்பட்டோர் தமது வீடு வாசல்களை இழந்து நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்.

வெள்ளப்பெருக்கு, மண்சரிவு ஆகிய இயற்கை அனர்த்தங்களுக்கு அடிப்படைக் காரணங்களாக விஞ்ஞானிகள் பின்வருவனவற்றைக் கூறியுள்ளார்.

தடை செய்யப்பட்ட பிரதேசத்தில் இரத்தினக்கல் அகழ்தல்
முறையான திட்டம் இல்லாது வீடுகளைக் கட்டுதல்
மலை உச்சியிலுள்ள நிலங்களைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ள துப்பரவு செய்தல்

01.இயற்கை அனர்த்தத்தினால் அதிகமாக பாதிக்கப்பட்ட கிராமம் எது?
....................

02.இயற்கை அனர்த்தத்தினால் அதிகம் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் இரண்டு தருக?
....................

03.இந்த அனர்த்தம் இனிவரும் காலங்களில் இடம்பெறாது தடுக்க பின்பற்றவேண்டிய நடவடிக்கைகள் இரண்டு எழுதுக
....................

04.இங்கு கூறப்படும் இயற்கை அனர்த்தங்கள் இரண்டு தருக
....................

05.இங்கு கூறப்படாத இயற்கை அனர்த்தங்கள் இரண்டு தருக
....................

06.இயற்கை அனர்த்தத்தினால் உடைமைகளை இழந்தவர்கள் தொகை எவ்வளவு?
....................

07.பின்வரும் சொற்களுக்கு ஒத்தகருத்துச்சொற்கள் தருக?
அனர்த்தம் .................... இரத்தினக்கல் ....................

08.இரத்தினபுரி நகர் புகழ்பெற்று விளங்கக்காரணம் ஒன்று தருக?
....................

09.இங்கு கூறப்பட்ட உயர்திணைப் படர்க்கைப்பன்மை எழுவாய்ச்சொல் ஒன்று தருக
....................

10.பின்வரும் சொற்களுக்கு எதிர்க்கருத்துச் சொற்கள் தருக
துன்பியல் - ....................
இறப்பு ....................

11. இயற்கை அனர்த்தத்தை எதிர்கொண்டனர். இவ்வாக்கியத்திற்கு எழுவாய்ச்சொல்லை எழுதுக
..............................................................................

**(02) இல 12 முதல் 20 வரையுள்ள வினாக்களின் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றும் சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் கூற்றின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக**

12. கம்மாலையில் பழுக்கக் காச்சிய இரும்பினை எடுக்க இடுக்கி பயன்படும் ( )

13. தரைமட்டத்தில் இருந்து 320 கிலோமீற்றர் உயரத்தில் காற்று பரந்து உள்ளது ( )

14. பெற்றோல், ஸ்பிரிட் போன்றன விரைவில் ஆவியாகமாட்டாது ( )

15. நீர்மட்டத்தின் உதவியினால் தரையில் சாந்தை (சிமெந்து) சமமாகப் பூசலாம் ( )

16. நாகணவாய் பேசப்பழக்கினாலும் பேசாது ( )

17. வௌவால் சூரியன் பூவை நாடி வரும் ( )

18. ஊடு தெரியும் தாளில் எழுதப்பட்டவற்றை பார்வையாளருக்குத் தெரியக்கூடியவாறு திரையில் காட்ட "ஊடு காட்டி எறிி" பயன்படுத்தப்படுகிறது ( )

19. இருளில் ஒளிப்படம் எடுக்க கமராவிலுள்ள ப்ளிச்சிட்டு விளக்கு மூலம் ஒளி பிறப்பிக்கப்படுகின்றது ( )

20. கண்களில் இரும்புத்தூசு பட்டால் காந்தத்தின் உதவியினால் எடுக்க முடியாது ( )

**(03) சரியான விடையின் கீழ் கோடிடுக**

21. நீர் போல் நிலத்தின் கீழ் இருந்து பெறப்படுவது
1) தேங்காய் நெய் 2) மண்ணெய் 3) ஆமணக்கம் நெய்

22. தலைகீழாகத் தொங்குவது
1) வௌவால் 2) இளநீர் 3) புறா

23. கல்சியம் கூடுதலாகக் காணப்படும் கருவாடு
1) நெத்தலிக்கருவாடு 2) சுறாமீன் கருவாடு 3) விளைமீன் கருவாடு

24. சிரிக்கத்தெரிந்த விலங்கு
1) குதிரை 2) குரங்கு 3) மனிதன்

25. காந்தம் எப்போதும் காட்டும்
1) வடதிசை 2) தென்திசை 3) கிழக்குத்திசை

26. எழுபத்தைந்தாவது ஆண்டில் கொண்டாடப்படும் விழா
1) பவளவிழா 2) வைரவிழா 3) பொன்விழா

27. புகையிரதம் புறப்படுவதற்கு காட்டப்படும் கொடி
1) சிவப்பு 2) நீலம் 3) பச்சை

**(04) பின்வரும் வினாக்களுக்குரிய விடையை தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக**

28. ஒரு மரத்தடியை இரண்டு இடத்தில் குறுக்கே வெட்டித்துண்டாடினால் எத்தனை துண்டுகள் கிடைக்கும்?
..............................................................................

29. 50cmக்கு ஒரு தடியாக 50mக்கு தடி நாட்ட வேண்டும் எனின் எத்தனை தடிகள் வேண்டும்?
..............................................................................

30. "Wish you a happy Birthday" இதைத் தமிழில் எழுதுக ..............................



31. அண்மையில் விண்வெளிக்கு மனிதனை அனுப்பிய நாடு? ..............................

32. அமாவாசைக்குப்பின் உள்ள நாட்களை எவ்வாறு கூறுவர்? ..............................

33. ஒக்ரோபர் மாதத்தில் அரசாங்க விடுமுறையோடு கூடிய, இந்துக்களின் முக்கிய பண்டிகை என்ன?
..............................................................................

**(05) கீழே கோழிக்குஞ்சு பொரிப்பது சம்பந்தமான வாக்கியங்கள் தரப்பட்டுள்ளன அவை ஒழுங்கற்றுக் கிடக்கின்றன. அவற்றை ஒழுங்குபடுத்தி அதற்கான எழுத்துக்களை புள்ளிக்கோட்டில் எழுதுக**

34. (அ) 21 நாட்களில் குஞ்சு முட்டையைக் கொத்தும்

(ஆ) ஒரு பெட்டியை எடுத்து அதற்குள் உமி போன்ற பொருளைப் போட்டு அதற்குள் முட்டைகளை வைத்தல் வேண்டும்

(இ) குஞ்சு தானாகவே முட்டையிலிருந்து வெளியேறும்

(ஈ) பெட்டிக்குள் மெதுவாக அடைகாக்கும் கோழியை இருத்த வேண்டும்

(உ) இடைக்கிடை கோழியை வெளியில் விட்டு உணவு போடவேண்டும்

........

**(06) தரப்படும் தமிழ்ச்சொற்களுக்கு ஆங்கிலப் பதங்கள் தருக**

35. காகம் - .............................. 36. கிளி - ..............................

37. தேனீ - .............................. 38. கனி - ..............................

**(07) தரப்படும் ஆங்கிலப்பதங்களுக்குத் தமிழ்ச்சொற்கள் தருக**

39. Bread - .............................. 40. School ..............................

41. Potato - .............................. 42. house ..............................

**(08) பொருத்தமாகப் பொருத்திக் கோடிடுக**

| | |
|---|---|
| 43. சிமெந்து | வாழைச்சேனை |
| 44. கடதாசி | பிலியந்தல |
| 45. ஓட்டுப்பலகை | வியாங்கொடை |
| 46. பீங்கான் பொருட்கள் | கின்தொட்டை |
| 47. புடைவை | காங்கேசன்துறை |

**(09) கீழ்க்காணப்படுபவை எங்கெங்கே காணப்படும் என உரிய இடத்தில் எழுதிக்காட்டுக**

door, carrot, black, board, stamp

48. garden .............................. 49. school ..............................

50. post office .............................. 51. house ..............................

**(10) கீழ்க்காணும் வினாக்களுக்கு விடைகள் எழுதுக**

52. நீர் யானை என்ன நிறம் ? ..............................

53. நுளம்பின் வாழ்க்கைப் படிகளைப் பகுத்துத் தருக? ..............................
..............................................................................;

54. விற்பனையாளரும் நுகர்வோரும் பொருட்களை விற்று வாங்கும் இடம் எது? ..............................

55. மாரிகாலத்தில் மரக்கறிகளின் விலை கூடுமா? அல்லது குறையுமா? ..............................

56. படிமுறையில் நெல் எங்கே உற்பத்தி செய்யப்படும்? ..............................

57. உணவு வீரயமாகும் சந்தர்ப்பம் ஒன்று? ..............................

# உள்ளூராட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு

## புதிய எண்ணங்களும் அமுல்

புதிய உள்ளூராட்சி நிறுவன தேர்தல் சீர்திருத்த சட்டமூலத்திற்கு அமைய மேற்கொள்ளப்பட்ட எல்லை நிர்ணய செயற்பாடுகளின் போது, நாடு பூராகவும் உள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 595ஆல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

எல்லை நிர்ணய குழுவின் அறிக்கைக்கு அமைய தொகுதி முறைமையின் கீழ் தெரிவு செய்யப்படும் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்து 81 ஆகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னர் அமுலில் இருந்த தேர்தல் முறைமைக்கு அமைய 4 ஆயிரத்து 486 உறுப்பினர்கள் மாத்திரமே தெரிவு செய்யப்பட்டிருந்தனர். அத்துடன், எல்லை நிர்ணய குழுவின் அறிக்கைக்கு அமைய உள்ளூராட்சி நிறுவனங்களது மொத்த தொகுதிகளின் எண்ணிக்கை 4 ஆயிரத்து 819 என பரிந்துரைக் கப்பட்டுள்ளது.

2012 இலக்கம் 22 ஐக் கொண்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்களிப்பு சீர்திருத்த சட்ட மூலத்தின் மூலம் உள்ளூராட்சி மன்றங்களுக்காக தொகுதி முறைமையை உள்ளடக்கிய கலப்பு தேர்தல் முறைமை ஒன்று அறிமுகப் படுத்தப்பட்டது.

இதனுடன், உள்ளூராட்சி நிறுவனங்களின் தொகுதி எல்லை நிர்ணய நடவடிக்கைகளுக்காக தேசிய குழு மற்றும் மாவட்ட எல்லை நிர்ணய குழு நியமிக்கப்பட்டதாக அரச நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் ஜனநாயக அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த குழுவிறகாக பொதுமக்கள் பிரதிநிதிகளின் 122 யோசனைகள் கிடைகக் பெற்றதுடன், அதில் 56 யோசனைகளுக்கு தேசிய குழுவின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. மேல் மாகாண கொழும்பு மாவட்டத்தில் 13 உள்ளூராட்சி மன்றங்களுக்காக, புதிய எல்லை நிர்ணயத்திற்கு அமைய 329 உறுப்பினர்கள் தெரிவு செய்யப் படவுள்ளனர்.

கம்பஹா மாவட்டத்தில் 19 உள்ளூராட்சி மன்றங்களுக்காக 417 உறுப்பினர்களும், களுத்துறை மாவட்டத்திற்காக 277 பேரும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தின் 22 உள்ளூராட்சி மன்றங்களுக்காக 327 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். மாத்தளை மாவட்ட புதிய தொகுதி பிரிவிற்கு அமைய 168 உறுப்பினர்களும் நுவரஎலிய மாவட்டத்திற்கு 186 உறுப்பினர்களும் நியமிக்கப்படவுள்ளனர்.

வட மாகாண யாழ்ப்பாண மாவடடத்தின் 237 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 40 உறுப்பினர்களும், மன்னார் மாவட்டத்தில் 46 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படவுள்ளனர். அத்துடன், வவுனியா மாவட்டத்தில் 63 உறுப்பினர்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில 4 உள்ளூராட்சி மன்றங்களுக்காக 41 உறுப்பின்ரக ளும், புதிய எல்லை நிர்ணய குழுவின் அறிக்கைக்கு அமைய தெரிவு செய்யப்படவுள்ளனர். கிழக்கு மாகாணத்திற்கு உட்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தில் 146 உறுப்பினர்கள் தெரிவு செய்யபபடவுள்ளனர். 20 உள்ளூராட்சி மன றங்களைக் கொண்ட அம்பாறை மாவட்டத்திற்காக. மொத்தமாக 221 உறுப்பினர்கள் தெரிவு செய்யப் படவுள்ளனர். திருகோண மலை மாவட்டத்தின் 13 உள்ளூ ராட்சி மன்றங்களுக்காக 136 உறுப்பினர்கள் புதிய எல்லை நிர்ணய குழு அறிக்கைக்கு அமைய தெரிவு செய்யப்படவுள்ளனர்.

# றமழான் சிந்தனை




**மூன்று மனிதர்களுடைய துவா மறுக்கப்படுவதில்லை. நோன்பாளி நோன்பு திறக்கும் வரையும், நீதி செலுத்தும் அரசனின்' துஆ, அநீதி இழைக்கப்பட்டவனின் துவாவும் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**ஸஹர் முடிவு : அதிகாலை 4.23**
**நோன்பு திறக்கும் நேரம் : மாலை 6.34** **(105)**

# அறிவியல் உலகில் சித்ததத்துவம் யோகாசனத்தின் பிரதிபலிப்பு

*"பார் காணும் கடல் சிறுதுளி என்றால்*
*அறிவு இயல் பெரும் கடல் அன்றோ?*
*கார்அற்று கடல் வற்றிப் போயினும்*
*மனித அறிவினில் ஓர்துளி வற்றுமோ?*

இந்நவீன அறிவியல் உலகில ஆராட்சிகளுக்கும் அப்பாற்பட்டு விளஙகுவது யோகாசனப் பயிற்சியும் அதன் நன்மைகளும்.

மொழிகளினுள்ளே மூத்த மொழியான் தமிழ்மொழியின் தமிழர் வைத்தியம் சித்தவைத்தியம். முன்னைய காலங்களில் ரிஷிகளினாலும், சித்தர்களினாலும் கடைப்பிடிக்கப்பட்டு வந்த பழம்பெரும் மருத்துவமாக சித்த மருத்துவமும் அதன் தத்துவங்களும் காணப்படுகின்றன.

சர்வதேச யோகாசன தினமான இன்றையநாளில் சித்தமருத்துவத்தின் பாரம்பரிய சொத்துக்களில் ஒன்றான யோகாசனம் பற்றியும் அதனால் ஏற்படும் நன்மை பற்றியும் சிந்திப்பது மிகவும் பொருத்தமானது.

யோகம் என்பது /சிதறும் மனச சக்தியைக் கூட்டல், ஒருங்குதல், இணைதல், சேர்தல், ஒருமுகப் படுதல் எனப் பல பொருள்படும். ஒன்றுசேரும் இவ்வாற்றலை எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றிய கற்றலே யோகாசனப் பயிற்சி நெறியாகும்.

*"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்*
*திறம்பட மெய்ஞானம் சேரவும் மாட்டார்*
*உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்*
*உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே"*

அதாவது உடம்பு அழிந்தால் உயிரும் அழியும் உறுதியான மெஞ ஞானத்தை அடைய முடியாது. உடம்பை வளர்த்தேன். உடம்பை யோகப்பயிற்சிகளால் வளர்த்தேன் அதனால் உயிரையும் வளர்த்துக் கொண்டேன்.

ஆரோக்கியம் என்பது ஒருவனுடைய உடல், உள, சமூக, ஆன்மீகம் நன் நிலையில் இருத்தல் என்பதே. இவ்வுலகில் பிறந்த நாம் அனைவரும், எமது சிந்தனை, சொல், செயல், எண்ணப் பரிமாற்றம், நடத்தை, பண்பு, எனப வற்றை நன் நிலையில் தொடர்ந்து பேணுவதன மூலம் சிறந்த உடலும் நல்ல மனமும் பெற்று நிறைவான ஆரோக்கிய வாழ்வு வாழ யோகாசனம் வழிவகுக்கினறது.

## நீரிழிவு நோய்

### நீக்கும்/ தடுக்கும் எளிய யோகாசன முறைகள்



அதாவது ஒரு மனிதன் ஆராக கிய வாழ்வு வாழ அவனுடைய தேவைக்கும் கிடைக்கும் வளங்களுக்கும் இடையே ஓர் சம நிலை பேணப்படவேண்டியது அவசியமாகின்றது.

தேவை = வளம்

இச்சமநிலைக் குழப்பமே அவனது உடல் உள தாக்கங்களிற்கு அடிப்படையாக அமைகின்றது.

இன்றைய காலகட்டத்தில் எமது இலங்கையில் அதுவும் எமது யாழ். குடாநாட்டில் நிலவி வரும் உடல், உளத்தாக்கங்களிற்கு தக்கதீர்வாக இவ்யோகாசனம் அமைகிறது. போருக்குப் பின்னான சமூகப்பிரச்சினைகளை எடுத்துநோக்குவோமாயின உயிரிழப்பு, சொத்து இழப்பு, வாழ்க்கைச் செலவு அதிகிரிப்பு, தேவையதிகரிப்பு போன்ற பொருளாதார நெருக்கடிகள், பணம் பொருள காணி மோசடிகள், ஏமாற்றம், குறைவான முதியோர் பராமரிப்பு குறிப்பாக வன்முறைகளாய், பாலியல் பிரச்சினைகள், பாலியல் துஷ்பிரயோகம், சிறுவர் துஷபிரயோகம், மது போதைவஸ்து பாவனை மிக அதிகரித்தே காணப்படுகின்றன.

இவற்றுக்குரிய சிகிச்சை முறையை எடுத்து நோக்குவோமாயின் நீண்டநாள் பலன்தரக் கூடிய, பக்கவிளைவற்ற, உடனடியாக ஆரம்பிக்கக்கூடிய, இயற்கையுடனான இணையற்ற பிணைப்பை உருவாக்கக்கூடிய சிகிச்சை முறையாக யோகாசனம் திகழ்கின்றது. யோகாசனம் பயில வயதுவரம்பு, ஆண் பெண் வித்தியாசம் பழகுவதற்கு தனியிடம், பயிற்சி உபகரணங்கள் போன்றவை அவசியமில்லை.

*"அசைகின்ற காற்றே சக்திபெற்ற புயல்"*

"அர்ஜுனா தபசிகளைக் காட்டிலும் ஞானிகளைக் காட்டிலும் இயம நியமங்களுடன் கூடிய யோகாப்பியாசம் செய்யக்கூடிய யோகியே சகல விஷயங்களிலும் உயர்ந்தவனாகத் திகழ்கின்றான்."

மனத்தையும், மனதில் எழும் எண்ணங்களையும் நன்கு கட்டப் படுத்துவதே யோகம் இந்த யோகப் பயிற்சியில் ஒருவன் முழுமை பெறும் போது தூய்மையும் பிரகாசமும் பொருந்திய நிலையில் நிறுத்தப்படுகின்றான் என பதஞ்சலி யோக சூத்திரம் கூறுகின்றது.

மருத்துவத்தில் யோகசிகிச்சை முறையை அறிமுகப் படுத்தியவர்கள் சித்தர்கள். சித்தர் பரம்பரையில் வழிவந்த திருமூலர் தனது திருமந்திரத்தில் 3ஆம் தந்திரத்தில் யோகநிலையை 8 படிகளாக வகுத்து கூறியுள்ளார். இதனை ராஜ யோகம் என்றும் / அட்டாங்க யோகம் என்றும் கூறுவர்.

*"இயம நியமமே எண்ணிலா ஆதனம்*
*பிராணாயாமம் பிரத்தியாகாரம்*
*சயமிகு தாரணை தியானஞ்ச சமாதி*
*அயமறு அட்டாங்கமாவது யோகதே"*

(திரு.மந் 552 என்று செப்பும்)

இளைஞர்கள், முதியவர்கள், பலசாலிகள், பலவீனர்கள் அனைவருமே தொடர்ந்து அதன் முறைப்படி யோகாசனம் செய்து வந்தால் ஆரோக்கியத் துடன் நீண்ட ஆயுளையும் பெற முடியும். நாம் தினமும் ஆசனங்களைச் செய்தால் நல்ல வஜ்ஜிரம் போன்ற உடல் அமைப்பும் பிரகாசமான முக அழகையும் தெளிவான குரல் வளத்தையும் நோயில்லா நல்லுடலையும் ஒளிபொருந்திய கண்களையும் பெற்றுக் கொள்ளலாம். எமது உடலில் ஓடும் நாடிகளும் சுத்த மடைகின்றன. பதஞ்சலி முனிவர் மனதையும் உடலையும் வலுப படுத்தக்கூடிய அப்பியாசங்களை வகைப்படுத்தியுள்ளார். இவரது யோக சூத்திரங்களே யோகக் கலையின் முதல் நூலாகும் சஞ்சீவியான யோகப்பயிற்சிகள் உடம்பென்ற ஆலயத்தை தூய் மைப்படுத்தவும் நோய்நொடிகள் வராமல் பாதுகாக்கவும் உதவுகின்றன.

சரியான யோகப்பயிற்சியுடன் பிராணாயாமம், தியானம் போன்ற பயிற்சிமூலம் பலவித நோய்களை நீக்கலாம். (நேருவின் கூற்று) பாரதநாட்டு பிரதமராய் இருந்த பண்டிதாஜவஹர்லால் நேரு யோகாசனப் பயிற்சியால் ஏற்படும் நன்மை பற்றி பின்வருமாறு கூறியுள்ளார்.

யோகாசனங்களை தக்க முறைப்படி பழகினால் உடலும் உள்ளமும் ஓய்வும் மகிழ்ச்சியும் அடைகிறது. இப்பழமையான கலை உடலையும் உள்ளத்தையும் மிக வியக்கத்தக்க முறையில் பாதுகாக்கின்றது. சாதாரண உடற்பயிற்சிகள் ஓடுதல், குதித்தல், தாண்டுதல் ஆகியவற்றால் ஏற்படும் மூச்சுத்திணறல், உடல்தளர்ச்சி, களைப்பு ஆகிய தொந்தரவுகள் இப்பயிற்சியால் ஏற்படுவதில்லை. எமது சக்தியை வ்ணாக்காமல் உடலையும் உளத்தையும் சாந்தப்படுத்தி உறுதி பெறச் செய்கின்றது. அனேக வருடஙகளாக நான் சில ஆசனங்களைப் பழகிவருகின்றேன். அதனால் பெரும் நன்மை அடைந்திருக்கின்றேன். உலகத்தவரின் உள்ளத்திலே என்றும் மறக்காது இடம்பிடித்த பெரியார்கள் அனைவரும் யோகாசனப் பயிற்சியை செய்து வந்துள்ளார்கள். ஆசனங்களை நாம் குருவின் ஆலோசனைபடி இப்பயிற்சியைச் செய்துவால் வேண்டும்.

*Dr. திருமதிய. எட்ணா மரியவிண்ணேற்றொனி*
*ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தர்,*
*பொதுசுகாதாரம்*
*(நல்லூர்)*

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## VACANCIES

*Application will be received by me up to 15th July 2015 from suitably qualified* candidates for the Post of Technical Officer Grade II Seg.B(Trainee).

**POST - TECHNICAL OFFICER GRADE II SEG. B (TRAINEE)**
(Vacancies exist at the University of Jaffna including Kilinochchi Premises)

**Qualifications :**

I. (a) Three (03) G.C.E (Advance Level) passes in Science subjects in one sitting: subject combination(s) to be decided by the faculty concerned upon the recommendation of the Department.

**AND**

(b) Passed a skill oriented formal programmed of training relevant to the post of at least one year (full time) duration or equivalent. The acceptability of the training programme for this purpose shall be judged by the faculty concerned. **AND**

H. Age limit : Not more than 35 years

*Age* limit for the above post is not applicable for applicants in the Government Departments / State Corporation and statotory bodies.

Salary Scale : U-MTI(IIIA) 16,535-7XI55;1OX185-19,470 p.m Selection : By Practical Test and Interview

**Statutory Benefits :**

1. *Allowance* approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system
3. Gratuity payments
4. Employment Trust Fund Benefits
5. Free Medical care.

Application forms may be obtained from the Establishments Branch (Non Academic), University of Jaffna, Thirunelvely, Jaffna, either in person or by post on a payment of Rs.100/= per application form.

Those who wish to obtain application forms by post are requested to send a Money Order /Postal Order drawn in favour **"Bursar, University of Jaffna, Thirunelvely, Jaffna"** together with a self-addressed Ps.10.00 stamped envelope of 23XI0 c.m in size.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk . Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/ Postal Order for Rs.100/= to the applications forms drawn in favour of the Bursar, University of Jaffna.

Duly completed application form should be sent under registered cover to reach the **Senior Assistant Registrar/ Establishments Branch (Non Academic), University of Jaffna, Thirunelvely, Jaffna on or before 15.07.2015.**

Applications sent on the specified form only will be accepted. Applications received after the closing date or illegible and incomplete applications will be rejected without intimation.

Those who are in Public Service/ Corporations / Statutory Bodies should forward their applications through their Heads of Departments/ Corporations/ Boards.

Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for the appointment, if the applications routed through the head of Department is not received.

Registrar 15.06.2015— (c/3873)



# வடகொரியாவில் உயிர்கொல்லி நோய்களுக்கான மருந்து



வட கொரிய நாட்டின் அரசு செய்தி நிறுவனம் ஒன்று அண்மையில் வெளியிட்டுள்ள செய்தியில், எய்ட்ஸ் நோய் மட்டுமன்றி உலக அளவில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ள எபோலா, புற்று நோய், செர்ஸ் மற்றும் மெர்ஸ் உயிர் கொல்லி நோய்களை குணப்படுத்தக்கூடிய அற்புதமான மருந்தை வட கொரிய அரசாங்கம் தயாரித்துள்ளதாக தெரிவித்துள்ளது.

பல்வேறு வகையான உரங்கள் மற்றும் உணவுப் பொருட்களிலிருந்து ginseng வகை மருந்து தயாரிக்கப்பட்டு, அதற்கு Kumdang-2 என்று பெயரி டப்பட்டுள்ளது.

ஆனால், குறிப்பாக எந்த வகையான மூலக்கூறுகளிலிருந்து அந்த அற்புதமான மருந்து தயாரிக்கப்பட்டுள்ளது என்ற எந்த தகவலையும் அந்த செய்தி நிறுவனம் வெளியிடவில்லை.

இந்த மருந்தை பெறும் நோயாளிகளில் பாதிப் பேர் முற்றிலும் குணமடைந்து விட்டதாக வட கொரியாவின் அதிபரான கிம்-யோன் அன் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளதாக அந்த செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

இருப்பினும், உலக அளவில் இந்த செய்தி பரபரப்பாக வெளியிட்டிருந்தாலும், இதில் எந்த அளவிற்கு உண்மை தண்மை இருக்கிறது என்பது தொடர்பான ஆதாரங்களை அந்த செய்தி நிறுவனமோ, அதிபரோ வெளியிடவில்லை என சர்வதேச செய்தித் தாள்கள் குறிப்பிட்டுள்ளன.

இதே போல், கடந்த 2000ஆம ஆண்டு வட கொரியாவின் முன்னாள் அதிபரும், கிம்-யோன் அன்னின் தந்தையுமான கிம்-யோன் இல் ஒரு அற்புதமான ஹேம்பர்க்கர் உணவு வகையை கண்டுபிடித்துள்ளதாகவும், அதை உண்டு வரும் தான் இதுவரை கழிவறைக்கு செல்லவே இல்லை என பரபரப்பு அறி விப்பை வெளியிட்டது குறிப்பிடத் தக்கது.

உலகச் செய்திகள்

# கனடாவில் தமிழ்த்தெருவிழா



தமிழ்த்தெரு விழா எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 29, 30 ஆம் திகதிகளில் கனடாவின் தலைநகர் ரொறன்ரோவில் இடம்பெறவுள்ளது. இதற்கான அறிவிப்பை நகரின் தலைவர் யோன் ரோறி வெளியிட்டார். ஆசியக் கண்டத்துக்கு வெளியே முதன்முதலாக இடம்பெறவுள்ள இந்த நிகழ்வைக் காண இலட்சக்கணக்கானோர் கூடுவர் என எதிர்பார்க்கப் படுகின்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை மார்கம் கொண்வென்சன் மண்டபத்தில் நடந்த நிகழ்வில் வைத்து யோன் ரோறி வெளியிட்டிருந்தார். இதன்போது ஒன்ராறியோ மாகாண முதல்வர் கத்தலின் வின் நேரில் வர இயலாததால் காணொளி மூலம் தனது வாழ்த்துச் செய்தியை அனுப்பியிருந்ததார். அதில் தமிழ்த் தெருவிழா 2015 ஊடாக நாம் அனைவரும் இணைந்து ஒன்ராறியோவின் பல் கலாசாரத் தன்மையைக் கொண்டாடுவதோடு அனைவரையும் உள்வாங்கிய பல்கலாசாரக் சமூகத்தைக் கட்டியெழுப்பவும் முடியும் எனத் தெரிவித்தார். தமிழரின் மிகச் சிறப்பு மிக்க மரபு, கலை, பண்பாடு, உடை, உணவு மற்றும் வரலாறு போன்றவற்றை முன் நிறுத்தி வேற்றின மக்களும் பங்கேற்கும் வகையில் இத் தமிழ்த்தெருவிழா ஏற்பாடாகி வருகிறது.

இரண்டு நாட்கள் நடைபெறவிருக்கும் விழா மரபு மற்றும் நவீன கலைகள், உணவு வகைகள், பொழுது போக்கு நிகழ்வுகள் போன்றவற்றை உள்ளடக்கி அனைத்து அகவையினருக்கும் ஏற்றவகையில் விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இந்த விழாவில் தமிழ் இசைக் கச்சேரி, உள்ளூர் தமிழ்க் கலைஞரின் ஆற்றல்களை வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகள், கனடியத் தமிழர் வரலாற்றுக் காட்சிக் கூடம், தமிழ்த் தெருக் கலை நிகழ்ச்சிகள், மரபுக் கண்காட்சிகள், தமிழர் மரபுகளைஅடையாளப்படுத்தும் உணவுகள், குழந்தைகளுக்கும் இளையோருக்குமான களியாட்டங்கள், கண்காட்சிகள் போன்ற பல நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. –

# பல்வேறு அணிகளில் உள்ளவர்கள் அனைவரும் நினைவு கூரப்பட வேண்டும்

## ஈ.பி.டி.பி.யின் தேசிய அமைப்பாளர் தெரிவிப்பு



தோழர் பந்தநாபாவின் தலைமைத்துவப் போராட்ட காலத்தில் போராடி, பல்வேறு அணிகளில் இருக்கக் கூடிய அனைவரும் ஐக்கியப்பட்டு அவருடைய நிஷனவு தினத்தை நினைவு கூர முன்வரவேண்டும் என முன்னாள் வடக்குக் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தேசிய அமைப்பாளருமான பசுபதி சீவரத்தினம் (கி.பி) தெரிவித்தார்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் க.பத்மநாபா 25ஆவது நினைவுதினம் நேற்று முன்தினம் பிற்பகல் 3.00 மணியளவில் ஈ.பி.ஆர்.எல்.எப். பழைய உறுப்பினர் தோழர் தர்சன் தலைமையில் வவுனியா, சூசைப்பிள்ளையார் வீதியிலுள்ள சுவர்க்கா ஹோட்டலில் இடம்பெற்றது. முன்னதாக தோழர் பத்மநாபாவின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மெழுகுச் சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து நினைவு அஞ்சலி உரைகள் இடம்பெற்றன.

இந்நினைவு தின வைபவத்தில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் உரையாற்றுகையில், நாபாத் தோழருடைய பாசறையில் உருவான பல தோழர்களை இந்நினைவு தினத்திற்கு ஒருங்கிணைத்து வந்துள்ளீர்கள். அடுத்த வருடம் இன்னும் விரிவான ஏற்பாடுகளுடன் நாபாத் தோழருடைய நினைவு தினத்தை சிறப்பாக நடாத்தவுள்ளோம். நாபாத் தோழருடைய பாசறையில் வளர்க்கப்பட்டவர்கள், கணிசமான போராளிக் குடும்பங்களின் வாழ்க்கை நிலைகளை மதிப்பீடு செய்து வாழ்வியலை மேம்படுத்துவதற்கு புலம்பெயர் தோழர்கள் முன்வரவேண்டும். அவருடைய அடுத்த வருட நினைவு தினத்தில் பத்மநாபா கல்வி அறக்கட்டளை உருவாக்கப்பட்டு குறைந்த பட்சம் உழைக்கும் மக்களின் கல்வி மேம்படுத்த வேலைத்திட்டம் முன்னெடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

# திவிநெகும வங்கி முகாமையாளர் வீதி விபத்தில் படுகாயம்




நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வீதி விபத்தில் வேலணை அம்மன் கோயிலடியைச் சேர்ந்தவரும், நெடுந்தீவு திவிநெகும வங்கியின் முகாமையாளருமான காண்டீபன் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு யாழிலிருந்து வேலணை நோக்கி வந்துகொண் டிருந்த காண்டீபன் (வயது-34) என்பவர் அல்லைப்பிட்டி 4 ஆம் கட்டை சந்திக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிப்பர் வாகனத்துடன் பின் பக்கமாக மோதி விபத்துக்குள்ளானதில் தலையில் படுகாயமடைந்து யாழ்போதனா வைத்தியசாலையில சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.ஊர்காவற்றுறை காப்பெற் வீதி புனரமைப்பு நடைபெற்று நிறைவடையும் நிலையில் இவ்வாறான இரண்டாவது விபத்து நடைபெற்றள்ளமை குறிப்பிடத்தக்கது. (21)

### பொலிஸார் மீது....

மடைந்தும் உள்ளார்.

இதனையடுத்து இச்சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் 10 பெண்களும் 5 ஆண்களும் கொடிகாமம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத் திய நிலையில் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த ஏற்பாடாகியிருந்தது என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட இவர்களை எதிர்வரும் 3 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதவான் கணபதிப்பிள்ளை உத்தரவிட்டுள்ளார். (இ,25,18)

### வருட இறுதியில்....

ஏற்கனவே 234 உள்ளூராட்சி சபைகளின் நிர்வாக காலம் முடிவடைந்துள்ளது.

ஏனையவற்றின் நிர்வாகக்காலம் ஜூலை மற்றும் ஒக்ரோபர் மாதங்களில் முடிவடையவுள்ளன.

தேர்தல் தொகுதிகளை மீள்நிர்ணயம் செய்யும் பணிகள் அண்மையில் நிறைவடைந்தன.

இந்தக்குழுவில் ரவி திஸாநாயக்கவின் தலைமையில் எச் ஜி பிரேமசிறி, விமல் ரூபசிங்க, ஏ.ஏ.எச்.எம் நெஹ்யா மற்றும் ஆதவன் தேவராஜா ஆகியோர் உள்ளடங்கியிருந்தனர்.

இந்தநிலையில் குறித்த குழுவின் அறிக்கை நேற்று முன்தினம் அமைச்சர் கரு ஜயசூரியவிடம் கையளிக்கப்பட்டது.

இன்னும் சில நாட்களில் அது வர்த்தமானியில் வெளியிடப்படும்.

அதன்பின்னர் அது பொதுமக்கள் கருத்துக்களுக்கும் ஆட்சேபனைகளுக்கும் விடப்படும்.

புதிய மீள்நிர்ணயத்தின்படி உள்ளூராட்சி சபைகள் மூலம் தெரிவுசெய்யப்படுவோரின் எண்ணிக்கை 5 ஆயிரத்து 81 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இந்தச் சபைகள் மூலம் 4 ஆயிரத்து 486 உறுப்பினர்களே தெரிவுசெய்யப்பட்டு வந்தனர்.

உள்ளூராட்சி சபைகளுக்கான மீள்நிர்ணயக்குழு 2012ஆம் ஆண்டு தமது பணிகளை ஆரம்பித்து இந்த வருடம் மார்ச் மாதத்தில் தமது பணிகளை முடித்துக்கொண்டது.

# சடலம் மீட்பு

மனநிலை பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் பெண்ணொருவர் காரைநகர் வேதர் அடைப்பு பகுதியிலுள்ள கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் குறித்த பெண் காணாமற்போன நிலையில் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சிவசுந்தரராஜா கௌரி (வயது - 43) எனும் பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளதோடு இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (50)

# போத்தலால் குத்தப்பட்ட நிலையில் முச்சக்கரவண்டி சங்கத் தலைவர் படுகாயம்

நெல்லியடிப் பகுதியில் நெல்லியடி முச்சக்கரவண்டி சங்கத் தலைவர் மா.தரன் (வயது 36) என்பவர் போத்தலால் குத்தப் பட்டு படுகாயமடைந்துள்ளார்.

நேற்று மாலை 3 மணியளவில் கரவெட்டி தெற்கு இராஜ கிராமத்துக்குச் சென்ற வேளையே அவ்விடத்தைச் சேர்ந்த நபர் ஒருவரால் உடைக்கப்பட்ட போத்தல் மூலம் வயிற்றுப் பகுதியில் குத்தப்பட்டு படுகாயமடைந்தார்.

இச்சம்பவத்தை தொடர்ந்து குறித்த முச்சக்கரவண்டியின் சாரதி சிகிச்சைக்காக மந்திகை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு நெல்லியடிப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

### இரட்டை வாக்கு...

உடன் கலைத்து விட்டு, புதிய தேர்தலை, நடப்பு தேர்தல் முறையின கீழ். நடத்தி, புது நாடாளுமன்றத்தை உருவாக்கி, அதில் தேர்தல் சட்டம் உட்பட நாட்டின் முக்கிய பிரச்சினைகளை தீர்க்கும் புதிய அரசியலமைப்பை சட்ட மாக்குங்கள்.

எங்களுடனான பேச்சுக்களை யடுத்து மேற்கண்ட மூன்று கோரிக்கைகளையும் ஏற்றுக் கொண்ட வண. சோபிததேரர் அரசாங்கத்துக்கு அவற்றை முன் வைத்ததுடன் தொடர்ந்து எம்முடன் இணைந்து பணியாற்ற உடன்பட்டுள்ளார்.

இது எமது சிறு மற்றும் சிறுபான்மை கட்சி பேரவைக்கு கிடைத்துள்ள பெரும் வெற்றியாகும்.

இன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை கட்சித் தலைவர்கள் சந்திக்க ஏற்பாடாகியுள்ள கூட்டத்தில் இந்தக் கோரிக்கைகளை எடுத்து கூற உள்ளோம்.

இன்றைய எமது சந்திப்பில், சோபித தேரர், அமைச்சர் ரவூப் ஹக்கீம், திஸ்ஸ விதாரண, ரிசாத் பதுயுதீன், டக்ளஸ் தேவானந்த, சிறிதுங்க ஜெயசூரிய, அசாத்சாலி ஆகியோர் உள்ளிட்ட பல கட்சி தலைவர்கள் கலந்துகொண்டனர்.

### குற்றச்செயலை அறிவிக்க....

சில பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதை பொருள் பாவனை காணப்பட்டாலும் அதிபர்கள் உரிய நடவடிக்கைகள் எடுப்பதில்லை. அவர்களுக்கு அறிவித்தாலும் "எங்கள் மாணவர்கள் அப்படியில்லை எனக் கூறுகின்றார்கள்.

பிள்ளைகள் குற்றம் செய்தார்கள் என்று கூறினாலும் "எமது பிள்ளை குற்றம் செய்யாது" எனக்கூறும் சில பெற்றோர்களும் உண்டு. அதிபர்களும் அவ்வாறு உள்ளனர்.

மாணவர்கள் மத்தியில் காணப்படும் போதைப் பொருள் பாவனையை தடுக்க வேண்டும் என்ற சமூக பொறுப்பு எல்லோர் ம்த்தியிலும் காணப்பட வேண்டும். அனைவரும் ஒன்றிணைந்தே கட்டுப்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

### வடக்கில் காணிகள்....

க்ளை அரசாங்கம் மீண்டும் கையகப்படுத்தக்கூடிய அபாயம் காணப்படுகின்றது.

இது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலை வர் இரா. சம்பந்தன் மற்றும் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் உள்ளிட்ட பல அரசியல்வாதிகளிடம் தெளிவுபடுத்தியுள்ளேன் - என்றார்.

### சட்டம் ஒழுங்கை...

ஈடுபட்ட இந்தச் சம்பவம் சுன்னாகத்தில் இடம்பெற்றுள்ளது என குறிப்பிட்ட நீதிபதி இளஞ்செழியன்,. சுன்னாகம், மல்லாகம், ஏழாலை தெல்லிப்பழை, ஊர் காவற்றுறை ஆகிய பிரதேசங்களில், குற்றச் செயல்கள் அதி கரித்துக் காணப்படுகின்றன என்றும் இங்கு இடம்பெறுகின்ற கொள்ளை, கோஸ்டி மோதல் கள் அங்குள்ள மக்களை அச்சத்தில் உறையச் செய்திருக்கின்றனர் என்றும் ஊர்காவற்றுறை பகுதியில் மண் கடத்தல், மாடு கடத்தல் தெரு சண்டித்தனம், ரவுடித்தனம் போன்ற குற்றச் செயல்கள் அதிகரித்துக் காணப் படுகின்றன என்றும் தெரிவித்துள்ளார்.

சண்டித்தனம், தெருச் சண்டித் தனத்திற்கு ஓர் அளவு உண்டு. இப்பொழுது எல்லாம் கைமீறி விட்டது. எனவே குற்றவாளிக ளாகக் காணப்படுபவர்களுக்கு மன்னிப்பே கிடையாது. குற்ற வாளிகளுக்கு தண்டனை விதித்தே ஆக வேண்டும் என்பது இப்போதைய காலத்தின் தேவையாக உள்ளது. குற்றம் செய்பவர்கள் அனைவரும் கைது செய்யப்பட வேண்டும். பிடியாணை பிறப்பிக்கப்படுபவர்கள் அனைவரும் கைது செய்யப்பட வேண்டும் எனவே, இந்தப் பகுதிகளில், பொலிஸ் மற்றும் அதிரடிப்படையின் துணை கொண்டு சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்படும். பொது மக்கள் அமைதியாகவும், சமாதானமாகவும் வாழ்வதற்கு ஏதுவாக சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட, நீதிமன்றம் தனது கடமையைச் செய்யும். ஆசியாவின் ஆச்சரியமான நூல் நிலையம் இருந்த யாழ்ப்பாணம் அன்று புத்திஜீவிகளின் சாம்ராஜ்ஜியமாக இருந்தது. இன்றோ, கத்தியைத் தீட்டுபவர்கள் நிறைந்த சமுதாயமாக அது மாறியிருப்பது வருந்தத்தக்கது என நீதிபதி சுட்டிக்காட்டினார்.

மல்லாகம் நீதிபதியினால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக செய்யப்பட்ட மேன்முறையீட்டு பிணை மனு மீதான விசாரணையின்போது, எதிரிகள் தரப்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி, குற்றம் சாட்டப்பட்ட நால்வரில் இருவர் பிரபல கல்லூரி மா்ணவர்கள் என்றும், அவர்கள் இந்த வருடம் ஆகஸ்ட் மாதம் க.பொ.த உயர்தரப் பரீட்சை எழுதவுள்ளதாகவும், எனவே, அவர்களின் எதிர்காலம் ஒளிர, அவர்கள் மீது கருணை காட்டி, அவர்களுக்குப் பிணை வழங்க வேண்டும் எனக் கோரினார்.

அதற்குப் பதிலளித்த மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன், கல்லூரி மாணவனாக இருந்தாலென்ன, பல்கலைக்கழக மாணவனாக இருந்தாலென்ன, நீதிமன்றத்தில் விசேட கவனிப்பு எவருக்கும் கிடையாது. யாவரும் சமம். அனை வருக்கும் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். படித்தவனுக்கு ஒரு நிதி, படிக்காதவனுக்கு ஒரு நீதி என, நீதி வழங்க முடியாது என தெரிவித்தார்.

அப்போது இந்த மாணவர்கள் உயர்தரப் பரீட்சை எழுதாமல் விட்டால், அவர்களுடைய எதிர்காலம் சூனியமாகிவிடும். எனவே, அந்த மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு, பிணை விண்ணப்பத்தைப் பரிசீலனை செய்ய வேண்டும் என எதிரிகள் தரப்பு சட்டத்தரணி வேண்டிக்கொண்டார்.

இதனையடுத்து, இந்த வழக்கில் சம்பந்தப்பட்டுள்ள குற்றவாளிகள், முற்குற்றம் செய்திருக்கின்றார்களா, இவர்களுக்கு வேறு வழக்குகள் எதுவும் நிலுவையில் உள்ளதா அல்லது இவர்கள், குற்றம் செய்வதையே வழக்கமாகக் கொண்ட நபர்களா என்பது குறித்து சுன்னாகம பொலிசாரிடமிருந்து அறிக்கை பெற்று, நீதிமன்றத்தில் அதனைத் தாக்கல் செய்யுமாறு நீதிபதி அரச சட்டத்தரணியிடம் கேட்டுக்கொண டார்.

அதேவேளை, சுன்னாகம் பொலிஸ் பொறுப்பதிகாரியை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுத்த நீதிபதி, இந்த வழக்கில் சம்பந்தப்பட்டவர்களுக்கு பிணை வழங்குவதா இல்லையா என்பது தொடர்பான விவாதத்தையும் தீர்ப்பையும் எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு ஒத்தி வைத்துள்ளார்.

# அடிப்படை வசதிகளற்ற வலி.வடக்கு மீள்குடியேற்றம்

## அதிருப்தியில் மக்கள்



யுத்தம் முடிவுக்கு வந்து ஆறு வருடங்களாகின்றன. புதிய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்று ஆறு மாதங்கள் ஆகிவிட்டன.

ஆயினும் வலி.வடக்கு ஆயிரத்து நூறு ஏக்கர் காணிகளில் இடம்பெயர்ந்துள்ள மக்களை மீள்குடியேற்றுவதாக அறிவித்திருந்த அரசாங்கம், 638 ஏக்கர் காணிகளே விடுவிக்கப்பட்டிருப்பதாக வலிகாமம் வடக்கு மீள்குடியேற்ற அமைப்பின் தலைவர் அருணாசலம் குணபாலசிங்கம் பி.பி.சி. தமிழோசையிடம் தெரிவித்தார்.

இவ்வாறு விடுவிக்கப்பட்ட பொது மக்களின் காணிகளும் முழுமையாக விடுவிக்கப்படவில்லை என்றும் சில காணிகளில் அரைவாசிப் பகுதி இராணுவத்தின் முட்கம்பி வேலிக்குள் இருப்பதாகவும் ஒரு பகுதி மட்டுமே மீள்குடியேற்றத்திற்காக அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறுகின்றார்.

பவுசர் வண்டிகளில் குடிநீர் விநியோகிக்கப்படுகின்ற போதிலும், மக்கள் தங்கள் காணிகளுக்குப் போய்வரக்கூடியதாக வீதிகள் அமைக்கப்படவில்லை. மீள்குடியேறியவர்களுக்கு மிகவும் அவசியமான கழிப்பறைகள்கூட இன்னும் இல்லை என்றும் மின்சாரம் போன்ற வசதிகளும் இன்னும் செய்து தரப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

யு.என்.எச்.சி.ஆர்., செஞ்சிலுவைச் சங்கம் போன்ற நிறுவனங்கள் சில உதவிகளை வழங்கியிருக்கின்ற போதிலும் கடற்கரையோரத்தில் படகுகளை நிறுத்தி வைப்பதற்கென மூன்று இடங்களில் கடலை ஆழமாக்கித் தருமாறு கோரியிருந்த போதிலும் அது இன்னும் செய்து தரப்படவில்லை என அவர் கவலை வெளியிட்டார்.

அத்துடன் இராணுவம் யுத்த காலத் தேவைக்காக அமைத்திருந்த பாரிய பாதுகாப்பு அணைகள் இன்னும் அகற்றப்படாமலிருப்பதுவும் மீள்குடியேறியுள்ள மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

# இலங்கை சிறைகளில் 300 அரசியல் கைதிகள்

## அஜித்குமார எம்.பி. சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையில் அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை என அரசாங்கம் கூறுகின்ற போதும் குற்றச்சாட்டுக்களின் பேரில் 300 பேர் வரை அரசியல் கைதிகளாக பல வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக முன்னிலை சோசலிஸக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் குமார தெரிவித்துள்ளார்.

வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்து திரும்பிய அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார். இதன்போது அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களில் பெரும்பாலானோர் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு வழங்கிய குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்களாவர்.

விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் சுதந்திரமாக நடமாடித்திரியும் போது இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை என அரசாங்கம் கூறுகின்றபோதும் குற்றச்சாட்டுக்களின் பேரில் 300 பேர் வரை அரசியல் கைதிகளாக பல வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். என்றும் கூறினார்.

அரசியல் கைதிகளை விடுவிக்கும் சமவுரிமை இயக்கத்தின் நடவடிக்கையின் ஒருக்கட்டமாகவே அஜித்குமார வெலிக்கடை சிறைச்சாலைக்கு விஜயம் செய்திருந்தமை. குறிப்பிடத்தக்கது.

# டிமிக்கி விட்டவர் மயிலணியில் பிடிபட்டார்

(யாழ்ப்பாணம்)

நீண்டநாட்களாக தேடப்பட்டு வந்த சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் சுன்னாகம் மயிலணி கந்தசுவாமி ஆலயப் பகுதியில் வைத்து குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டார்.

மல்லாகம், ஏழாலை, குப்பிளான், சுன்னாகம், உடுவில் பகுதிகளில் இடம்பெற்ற வாள்வெட்டு மற்றும் குற்றச் செயல்களில் ஈடுபட்டுவந்த இவர் மீது பல குற்றச்சாட்டுக்கள் சுமந்தப்பட்டிருந்தன.

இவருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நிலையில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தார்.

நேற்று முன்தினம் இரவு மயிலணி கந்தசுவாமி ஆலயப் பகுதிகளில் கண்காணிப்பை மேற்கொண்ட குற்றப்புலனாய்வுப் பிரிவினர் இவரை ஆயுத முனையில் கைது செய்தனர். இவர் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# சட்டவிரோத கனடா பயணம்; சிக்கினார் யாழ்.இளைஞன்

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் கனடாவிற்கு செல்ல முயன்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக விமான நிலைய குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விமான நிலையத்தில் நின்றிருந்த குறித்த இளைஞனின் செயற்பாடு குறித்து சந்தேகம் கொண்ட விமானச் சேவை அதிகாரிகள், அவரை குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

சந்தேகநபரிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்ட சோதனையின் போது அவரிடம் இருந்து போலியான அயர்லாந்து கடவுச்சீட்டு கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலும், குறித்த சந்தேகநபர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முகவர் ஒருவரிடம் இரண்டு இலட்சம் ரூபாவை செலுத்தி கனடா செல்வதற்கான போலி ஆவணங்களை பெற்றுக்கொண்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபருடன், போலி கடவுச்சீட்டை தயாரித்து கொடுத்த முகவரும் உடனிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பல்கலை கல்வி நிறுவனங்களுக்கு விரைவில் இலவச "வைபை" சேவை

(கொழும்பு)

பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய கல்வி நிறுவனங்களுக்கு இலவச வைபை வசதிகளை வழங்குவதற்கு இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் கீழ் சப்ரகமுவ மற்றும் யாழ். பல்கலைக்கழகங்களுக்கு ஏற்கனவே இலவச வைபை வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக அந்த முகவர் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் கவாஸ்கர் சுப்ரமணியம் குறிப்பிட்டார்.

இதுதவிர, கொழும்பு சட்டக் கல்லூரிக்கும் இலவச வைபை வசதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதுதவிர, பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கும் விரைவில் வைபை வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் கூறினார்.

இதுவரை நாடு முழுவதும் 142 இடங்களில் இலவச வைபை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# பயண வசதிக்கு ஹெலி அரசின் அறிவிப்பை மறுக்கிறார் மகிந்த

(கொழும்பு)

தனது பயண வசதிகளுக்காக ஹெலிகொப்டர் வழங்கப்பட்டதாக வெளியான செய்திகளில் எந்தவித உண்மையும் இல்லை என, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவரது ஊடக இணைப்புச் செயலாளர் ரோஹான் வெலிவிட வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

மஹிந்த ராஜபக்ஷ கடந்த ஜனவரி 9 ஆம் திகதி கொழும்பில் இருந்து தங்காலை நோக்கி முன்னாள் ஜனாதிபதி என்ற அடிப்படையில் ஹெலிகொப்டரில் பயணித்தார். அது தவிர அவர் இதுவரை அரச ஹெலிகொப்டரில் பயணத்தை மேற்கொள்ளவில்லை.

மேலும் அன்றில் இருந்து எந்தவொருசந்தர்ப்பத்திலும் ஹெலிகொப்டர் வசதியை அவர் கோரவும் இல்லை.

முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்பிற்காக பொலிஸ் அதிகாரிகள் 105 பேர் வழங்கப்பட்டுள்ளனர். இவர்களில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் மூவர் உள்ளனர்.

இவர்களுக்கு உத்தியோக பூர்வமாக மூன்று வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. எனினும் அவர்களுக்கு அலுவலக வசதிகள் செய்துகொடுக்கப்படவில்லை என்பதோடு, குறைந்த வசதிகளுடன் கூடிய வீட்டு வசதிகளே வழங்கப்பட்டுள்ளன.

இரண்டு உயர் அதிகாரிகள் உட்பட 108 இராணுவச் சிப்பாய்கள் உள்ளனர். இவர்களுக்கு உத்தியோக பூர்வ வாகன வசதிகள் கிடைக்கப் பெறவில்லை.

மேலும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பயன்பாட்டுக்காக மூன்று வி.ஐ.பி. வாகனங்கள் மற்றும் மூன்று பாதுகாப்பு வாகனங்களுமே ஜனாதிபதி செயலகத்தினால் வழங்கப்பட்டுள்ளன என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் அமைச்சர் ஜோன் அமரதுங்க குறிப்பிட்டது போன்று, மஹிந்த ராஜபக்ஷ



வின் பயணத்திற்காக ஹெலிகொப்டர் வழங்கப்படவில்லை எனவும், ஹெலிகொப்டர் வழங்குமாறு கோரிக்கைகளும் முன்வைக்கப்படவில்லை எனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திரிபுபடுத்தப்பட்டுள்ள மங்களவின் கருத்து

## வெளிவிவகார அமைச்சு விளக்கம்

(கொழும்பு)

குறிப்பிட்ட நாடு ஒன்றுடனான வெளிநாட்டுக் கொள்கையை மீளாய்வு செய்யவுள்ளதாக வெளியுறவு அமைச்சர் மங்கள வெளிவிவகார அமைச்சு விளக்கம் கூறியதாக வெளியான தகவலை இலங்கையின் வெளியுறவுத்துறை அமைச்சு மறுத்துள்ளது.

ஜப்பானிய ஊடகம் ஒன்று மங்கள சமரவீர சீனா தொடர்பில் குறித்த கருத்தை வெளியிட்டதாக செய்தி வெளியிட்டிருந்தது.

இது தொடர்பில் கருத்துரைத்துள்ள வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் மஹிசினி கொலன்னே, அண்டை நாடுகளின் உறவுகள் மீளமைக்கப்படும் என்றே கூறியதாக தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜனவரி 8 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் செய்யப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் ஜப்பானிய ஊடகங்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே மங்கள சமரவீர குறிப்பிட்டதாக கொலன்னே கூறியுள்ளார்.

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 யூன் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.